# செவீய் நகர முடிதிருத்துவோன்

2


ஆசிரியர் :

**போமாசே**

மொழிபெயர்ப்பாளர் :

**டாக்டர் இர. நடராஜா**



தமிழ்நாட்டுப்

**பாடநூல் நிறுவனம்**

கல்லூரி சாலை, சென்னை-600 006

தமிழ்நாட்டு அரசின்
றப்பிலக்கிய மொழிபெயர்ப்பு வெளியீடு : 9

# செவீய் நகர முடிதிருத்துவோன்

ஆசிரியர்
**போமாசே**

மொழிபெயர்ப்பாளர்
டாக்டர் இர. நடராஜா

தமிழ்நாட்டுப்
**பாடநூல் நிறுவனம்**
கல்லூரி சாலை, சென்னை-600 006

First Edition—1988
Number of Copies—2000

© Government of Tamilnadu

# BEAUMARCHAIS
# LE BARBIER DE SEVILLE

*Edition :* NOUVEAUX CLASSIQUES LAROUSSE
LIBRAIRIE LAROUSSE
NO. 17, RUE DE MONTPARNASSE, PARIS

*Edited by :* LEON LEJEALLE (1970)

*Translator :* DR. R. NADARAJA

Price : **Rs. 7-30**

Printed on 70 G.S.M. imported paper.

*Printed at :*
Bhagat Printers, Madras-600 016

# பொது முன்னுரை

1978ஆம் ஆண்டில் தமிழில் உள்ள பேரிலக்கியங்களை உலக மொழிகளிலேயும் உலக மொழிகளிலே உள்ள பேரிலக்கியங்களைத் தமிழிலேயும் மொழிபெயர்த்து வெளியிடும் சிறப்பிலக்கிய மொழிபெயர்ப்புத் திட்டம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் உருவாக்கப் பெற்றது. 1979இல் அமைக்கப்பெற்ற இத் திட்டம் இப்போது தமிழ் வளர்ச்சி இயக்ககத்தால் செயற் படுத்தப்பட்டு வருகிறது. ஆங்கிலம், தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் ஒன்றிலிருந்து மற்றொன்றுக்கு மொழி பெயர்க்கும் வல்லமை பெற்றவர் பலர் இருந்தபோதிலும் ஃபிரெஞ்சு, டச்சு, ஜெர்மானியம், இத்தாலியம், பெர்சியம், சுபாலி, உருசியம் முதலிய மொழிகளில் உள்ள பேரிலக்கியங் களைத் தமிழாக்கம் செய்வதற்கோ தமிழ்ப் பேரிலக் கியங்களை மேற்சொன்ன மொழிகளில் மொழியாக்கம் செய்வதற்கோ, வல்லமைபெற்ற அறிஞர்கள் கிடைப்பது மிகவும் அரிதாக இருக்கிறது. அத்தகைய அறிஞர்கள் அரசுடன் தொடர்புகொண்டு மொழியாக்கம் செய்ய முன்வருவார்களேயானால், அவர்களுக்கு ஆர்வம் ஊட்டி அனைத்து உதவிகளும் செய்ய அரசு தயாராக உள்ளது. பத்தாம் நூற்றாண்டு முதல் பதின்மூன்றாம் நூற்றாண்டு வரை ஃபிரெஞ்சு நாட்டினர் அயல்மொழிகளில் உள்ள நூல்களையெல்லாம் தம் மொழியில் பெயர்த்ததின் பயனாக இன்று ஃபிரெஞ்சு இலக்கியம் திட்பமும் நுட்பமும் பெற்று உலக இலக்கியங்களிலேயே சிறப்பிடம் பெற்று நிற்கிறது. வின்சுலோ கூறியபடி, தமிழ்க் கவிதை

கிரேக்கக் கவிதையைக் காட்டிலும் மிக்க துல்லியத்தையும் பெருமையையும் பெற்றிருந்தபோதிலும், தமிழ் உரைநடை வேண்டிய அளவு முன்னேறவில்லை. தமிழ்நாடு அரசு தீட்டியுள்ள இந்தத் திட்டத்தின் விளைவாக வெளிவரப் போகின்ற இதைப்போன்ற நூல்கள் எதிர்கால இலக்கியப் படைப்புகளுக்குப் புத்துயிரும் புத்தார்வமும் நல்கும் என்று நம்பலாம்.

**சு. செல்லப்பன்**

தமிழ் வளர்ச்சி இயக்குநர்

# நூல் அறிமுகம்

'செவீய் நகர முடிதிருத்துவோன்' — இந் நூல் ஃபிரெஞ்சு எழுத்தாளரும், நாவலாசிரியரும், அரசிய லறிஞருமாக விளங்கிய போமாசே அவர்களின் நாடக நூலாகும். அவருடைய **'LE BARBIER DE SEVILLE'** என்னும் நூல் பாண்டிச்சேரி தாகூர் அரசினர் கலைக் கல்லூரியின் ஃபிரெஞ்சுப் பேராசிரியர் டாக்டர் இர. நடராஜா அவர்களால் தமிழாக்கம் செய்யப்பெற்று 'செவீய் நகர முடிதிருத்துவோன்' என்னும் பெயரில் வெளிவருகிறது. திரு. போமாசே 1732ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 24ஆம் நாளன்று பாரீசு நகரத்தில் ஒரு கடிகாரத் தயாரிப்பாளரின் மகனாகப் பிறந்தார். அவருடைய இயற்பெயர் **'Pierre-Augustin Caron'** என்பதாகும். அவருடைய முதல் மனைவியின் மூலம் கிடைக்கப் பெற்ற 'போமாசே' என்ற தோட்டச் சொத்துக்கு உரிமையாளராக இருந்த அவரைவிட்டு, அச் சொத்துச் சென்ற பின்னரும் 'போமாசே' என்னும் பெயர் மட்டும் நிலைத்திருந்தது. திரு. போமாசே, ஃபிரெஞ்சு அரசியலில் புகழ்மிக்க சிந்தனைச் சிற்பிகளும், ஃபிரெஞ்சுச் சுதந்திரத்திற்கு அடிகோலியவர்களுமான வால்டேர், ரூசோ ஆகியோருடைய சம காலத்தவர். இவர் ஃபிரெஞ்சுப் புரட்சி ஏற்பட விரும்பாவிட்டாலும் அப் புரட்சிக்குக் காரணமாயிருந்தார். இவரது எழுத்துகள் அப் புரட்சிக்கு வித்திட்டன. ஃபிரெஞ்சு இலக்கியத்தில் இவருக்குக் கிடைத்த புகழ் வால்டேருக்குக் கிடைத்ததைவிட மிகுதியா

யிருந்தது எனலாம். போமாசே எழுதிய முதல் நாடகமான **'EUGENIE'** எனும் சமூக, இன்ப துன்பவியல் நாடகமே அவருக்குப் புகழை ஈட்டித் தந்தது. அதற்குப் பின்னர் அவர் எழுதிய **'MEMOIRES'** மேலும் பெரும் புகழைத் தந்தது. **'LE BARBIER'** (முடிதிருத்துவோன்) நூலுக்குப் பின்னர் அதன் தொடர்ச்சியாக அவர் எழுதிய **'LE MARIAGE DE FIGARO'** எனும் நூல் அவரது மிகு புகழ்பெற்ற நூல்களில் இரண்டாவதாகும்.

அவருடைய வாழ்நாளில் அவருடைய நாடகங்களுக்கு உரிய வரவேற்பும் உரிய தொகையும் பெறுவதற்காகக் கடுமையாக உழைத்தார். **'SOCIETE DES AUTEURS DRAMATIQUES'** எனும் நிறுவனத்தையும் நிறுவினார்.

போமாசேயின் வாழ்க்கை, பல துறைகளில் மேதைகளாக, அறிவாளிகளாக விளங்கியவர்களின் வாழ்க்கைக்கு அரிய சான்றாக விளங்கிவருகிறது.

**சு. செல்லப்பன்**
தமிழ் வளர்ச்சி இயக்குநர்

## நாடக மாந்தர்

**அல்மாவிவா** — *மிராசுதார், இளைஞன்*

**பர்த்தலோ** — *மருத்துவன், வயதான கிழவன்*

**ரொசீன்** — *பர்த்தலோவின் பாதுகாப்பில் உள்ள இளம்பெண், அநாதை*

**பிகாரோ** — *பர்த்தலோவின் முடிதிருத்துவோன், கவிஞன், எழுத்தாளன்*

**பசில்** — *ரொசீனின் பாட்டு வாத்தியார்*

**இளமை, கோட்டான்** — *பர்த்தலோவின் வயதான பணியாளர்கள்*

**மர்சலின்** — *பர்த்தலோவின் வீட்டிலுள்ள வயதான செவிலி*

**திருமணப் பதிவாளர்**

**நீதிபதி**

**காவலர்கள்**

*[குறிப்பு: பெயர்கள் ஃபிரெஞ்சு மொழி உச்சரிப்பில் தரப்பட்டுள்ளன]*

# செவீய் நகர முடிதிருத்துவோன்

## அங்கம் 1

## காட்சி 1

(செவீய் என்ற ஊரில் ஒரு தெரு. வீடுகளின் சன்னல்கள் அனைத்தும் மூடப்பட்டிருக்கின்றன.)

**பாத்திரம் :** மிராசுதார்

**மிரா :** (தனியாக, பழுப்பு நிற மேலங்கியும் முகத்தை மறைத்தாற்போல் தொப்பியும் அணிந்திருக்கிறான். கைக்கடிகாரத்தைப் பார்த்தபடி நடந்துகொண்டே) நான் நினைத்ததற்கு மாறாகப் பொழுது இன்னும் விடியவில்லையே. அவள் சன்னலுக்கு வர இன்னும் நேரமாகுமே, பரவாயில்லை. தாமதமாக வந்து அவளைப் பார்க்க முடியாதிருப்பதை விட, சீக்கிரமாக வருவதே மேல். அரண்மனைக் கோமகன் யாருக்காவது நான் மதிரித்திலிருந்து நூறுகாத தூரத்தில் வந்து, தினமும் விடியற்காலையில் ஒரு கோமகளின் வீட்டுச் சன்னலுக்கடியில் தவம் கிடப்பது தெரிந்தால் என்னை 'ஸ்பெயின் நாட்டு இராணி இஸாபெல்' காலத்தவன் என்று நினைப்பான்.

நினைத்தால் என்ன? நினைக்கட்டுமே! எல்லோரும் இன்பத்தைத் தேடித்தானே ஓடுகின்றனர்! நானோ ரெர்சீனின் இதயத்தை நாடுகிறேன். என்ன விநோதம்! மதிரித்தின் அரண்மனையில், கைக்கெட்டிய தூரத்தில், இன்பம் எங்கும் கொட்டிக்கிடக்கும் நேரத்தில், நான் ஒரு செவ்விதழாளைத் தொடர்ந்து 'செவீய்' அன்றோ வந்துவிட்டேன்! எளிதான இந்த இன்பம்தான் எனக்கு எட்டிக்காய். பணத்திற்காகவோ, படாடோபத்திற்காகவோ, உயர் பதவிக்காகவோ காதலிப்பதை நான் வெறுக்கிறேன். ஆ! காதலுக்காகவே காதலிப்பதுதான் எத்தகைய இன்பமானது! என்ன! என் வேடம் கலைந்துவிடும் போலிருக்கிறதே! யாரோ வருகிறார்கள்.

## காட்சி 2

**பாத்திரங்கள் :** *மிராசுதார், பிகாரோ*

*(பிகாரோ ஒரு கித்தாரைப் பட்டை ரிப்பனில் கட்டித் தொங்கவிட்டிருக்கிறான். கையிலே தாளும் எழுதுகோலும் வைத்திருக்கிறான். முணு முணுத்துப் பாடுகிறான்.)*

**" துன்பத்தை துரத்தடா**
**அது மனதை துளைக்குமடா**
**மதுவின் மயக்கமடா**
**அது வாழ்வின் மாயமடா. "**

**" இன்பம் இலா மனிதன்**
**ஒரு ஈனனடா—அவன்**
**வாழ்வும் ஒரு நரகமடா**
**அவன் மடிவதும் திண்ணமடா."**

*இதுவரை பரவாயில்லை - உம் - உம்.*

**" அவன் வாழ்வும் ஒரு நரகமடா**
**மதுவும் சோம்பலும் ஆளுகின்றனடா,**
**என் இதயத்தில்......"**

*இல்லை! இல்லை! இவை என் இதயத்தில் கூடி வாழ்கின்றனடா! எப்படிச் சொல்வது? என் இதயத்தில் ஆளுகின்றன என்றா! — கடவுளே! இப்போதைய பாடலாசிரியர்கள் இவ்வளவு கவனித்தா எழுதுகிறார்கள்? எதைச் சொல்லக் கூடாதோ அதையெல்லாம் பாட்டிலே சேர்க்கிறார்கள்.*

*(முழந்தாளைத் தரையில் ஊன்றிக்கொண்டு மறுபடியும் எழுதுகிறான்.)*

**" என் இதயத்தில் ஆளுகின்றனடா**
**ஒன்று என் இதயராணி**
**மற்றொன்று என் உயிர்மூச்சு"**

*சீ! மட்டமான கவிதை, இப்படியா எழுதுவது, சொற்களில் ஓர் எதிர்ப்பு வேண்டும் — ஓர் எதிர்ப்பு!*

**" ஒன்று என் வீட்டுக்காரியடா**
**மற்றொன்று என்........."**

*—ஆஹா! இப்போது வந்துவிட்டது.*

**" மற்றொன்று என் வேலைக்காரியடா "**

பிகாரோ! நீ பெரிய ஆளடா!

(பிகாரோ பாடிக்கொண்டே எழுதுகின்றான்.,

**"மதுவும் சோம்பலும்**
**என் இதயத்தில் ஆளுகின்றனடா**
**ஒன்று என் வீட்டுக்காரியடா**
**மற்றொன்று என் வேலைக்காரியடா."**

சரி, சரி, இந்தப் பாட்டு வெளியில் வரும்போது குறைகூறுவோரை என்ன செய்ய வேண்டு மென்பதை நான் பார்த்துக்கொள்கிறேன்.

(பிகாரோ அப்போது மிராசுதாரைப் பார்த்து விடுகிறான்.)

இந்தச் சாமியாரை எங்கோ பார்த்தது போலிருக்கே!

(எழுந்து நிற்கிறான்.)

**மிரா :** (தனக்குள்) இந்த ஆளை எனக்குத் தெரியும் போலிருக்கிறதே!

**பிகா :** இல்லை! இல்லை!! சாமியாரில்லை! என்ன செருக்கு! என்ன பணக்கார மிடுக்கு!

**மிரா :** என்ன பட்டிக்காட்டுத் தோற்றம்!

**பிகா :** நான் நினைத்தது சரியே! மிராசுதார் 'அல்மாவிவா'வேதான்.

**மிரா :** அட! குறும்புக்கார பிகாரோவேதான்!

**பிகா :** அவனேதான், எஜமான்!

**மிரா :** திருட்டுப்பயலே! காட்டிக்கொடுத்தாயோ...

**பிகா :** இப்போது சரியாகத் தெரிந்துவிட்டது தாங்கள் யாரென்று. எப்போதும் என்னைக் கௌரவித்து நல்வார்த்தை பேசிவந்தவரென்று!

**மிரா :** நீ யாரென்று தெரியவில்லையே! வாட்ட சாட்டமாகவல்லவா இருக்கிறாய்!

**பிகா :** என்செய்வது? எல்லாம் பஞ்சகாலம், எஜமான்!

**மிரா :** அடே, சின்னப்பயலே! இப்போது 'செவீயில்' என்ன செய்து கொண்டிருக்கிறாய்? முன்பு உனக்கு ஓரிடத்தில் வேலை வாங்கித் தந்தேனே!

**பிகா :** அது கிடைத்தது, எஜமான்! உங்களுக்கு என் நன்றி.

**மிரா :** இனி என்னை 'லேன்தோர்' என்று கூப்பிடு. என்னைப் பார்த்தாலே தெரியவில்லையா, மாறுவேடத்தில் இருக்கிறேன் என்று!

**பிகா :** அப்படியா? அப்படியானால் நான் போய் விடுகிறேன்.

**மிரா :** போகாதே! நான் ஒரு காரியத்திற்காகக் காத்திருக்கிறேன். ஒருவராகத் தனியே நின்றிருப்பதைவிட இருவராக வம்பளந்து கொண்டிருப்பது நல்லது, யாரும் சந்தேகப் படமாட்டார்கள் அல்லவா? ஏதாவது பேசுவோமா! சரி அந்த வேலை!

**பிகா :** தங்கள் பெருந்தகையின் சிபாரிசை ஏற்றுக் கொண்ட மந்திரி, மருந்து கலக்கும் உத்தி யோகம் உடனடியாகத் தந்தார்.

**மிரா :** இராணுவ மருத்துவமனையிலா?

**பிகா :** இல்லை, மிருக வைத்தியசாலையில்!

**மிரா :** (சிரித்துக்கொண்டே) பலே! நல்ல வேலை தான்!

**பிகா :** நல்ல வேலையேதான்—ஏன்னா, கட்டுக் கட்டும் வேலையும் மருந்து கொடுக்கும் வேலையும் கிடைத்ததால், குதிரைகளுக்குக் கொடுக்கும் மருந்துகளை மைனர்களுக்கல்லவா விற்றுவந்தேன்.

**மிரா :** இப்படி எவ்வளவு பேரைக் கொன்றாய்?

**பிகா :** ஆஹா! ஆஹா!! எல்லா நோயும் தீர்க்கும் மருந்து உலகில் ஏது? இருப்பினும் நான் கொடுத்த மருந்தால் 'களீசியர்களும்,' 'கத்தலான்களும்,' 'ஒவர்ஞாக்களும்' அல்லவா குணமடைந்தார்கள்.

**மிரா :** பின் ஏன் அந்த வேலையை விட்டுவிட்டாய்?

**பிகா :** விட்டேனா! நானா? இல்லை இல்லை. வேலைதான் என்னை விட்டுவிட்டுப் போய் விட்டது. என்னைப்பற்றி மேலிடத்தில் புகார் கிளப்பினார்கள். 'வளைந்த விரல்களும் வெளிறிய முகமுமுடைய பொறாமை...'

**மிரா :** அபயம்! அபயம்! நண்பா, கவிதைகூடவா புனைகின்றாய்? என்னமோ கிறுக்கிக்கொண்

டிருப்பதையும், விடியற்காலையிலே பாடு வதையும் சற்று முன்புதானே பார்த்தேன்!

**பிகா :** இதுதான் என் துர்ப்பாக்கியத்திற்கு முதற் காரணம், பெருந்தகையீர்! நான் பெண் களைப்பற்றித் துதிப்பாடல்கள், பத்திரிகை களுக்கு விடுகதைகள், அழகிய சிறு கவிதைக் கொத்துகள் புனைவதையும், நான் கிறுக்கு வதையெல்லாம் அப்படியே பிரசுரிப்பதையும் கண்ட மந்திரி, வெகுண்டெழுந்து, மருத்துவத் திறனுடன் கவித்திறன் ஒத்துப் போகாதென்று காரணம் கூறி என்னை வேலையிலிருந்து நீக்கி விட்டார்.

**மிரா :** அருமையான விவாதம்! பிறகு நீ வழக்குத் தொடர்ந்தாயா?

**பிகா :** ஆளைவிட்டால் போதுமென்று சும்மா இருந்துவிட்டேன், பதவியில் உள்ளோர் தீமை செய்யாமலிருப்பதே அவர் நமக்குச் செய்யும் நன்மையென்று நினைத்து!

**மிரா :** சரி, உன் முழுக் கதையும் என்னதான் என்று சொல்லேன். என்னிடம் வேலை செய்யும்போது அப்படியொன்றும் பெரிய ஆளாக இல்லையே நீ!

**பிகா :** அட கடவுளே! ஏழைகள் குற்றமில்லாமல் இருக்கவேண்டுமென்கிறார்களே!

**மிரா :** நீ சோம்பேறியாகவும் துடுக்குத்தன மாகவும்......

**பிகா :** பணியாள்களிடம் எதிர்பார்க்கும் பண்புகள் எத்தனை எஜமானர்களிடம் பார்க்கலாம் பெருந்தகையீர்!

**மிரா :** (சிரித்துக்கொண்டே) அடி சக்கை! பிறகு இந்த ஊருக்குக் குடியேறிவிட்டாயாக்கும்!

**பிகா :** உடனேயில்லை.

**மிரா :** கொஞ்சம் பொறு. அவள் என்று நினைத்து விட்டேன். ஏதாவது பேசிக்கொண்டேயிரு.

**பிகா :** 'மதிரித்துக்கு' வந்ததும் இலக்கிய உலகில் புக விரும்பினேன். நாடக உலகு என்னைக் கௌரவிப்பதாகத் தெரிந்தது.

**மிரா :** அடபாவமே! (இச் சமயம் மிராசுதார் சன்னலைக் கண்கள் இமைக்காமல் பார்த்துக் கொண்டிருக்கிறான்.)

**பிகா :** உண்மையைச் சொல்லப்போனால், நாடகத் துறையில் எனக்கு ஏன் வெற்றி கிடைக்கவில்லை யென்று தெரியவில்லை. ஏனென்றால் பல மாகக் கைதட்டுபவர்களைக் கீழ்வகுப்பில் உட்காரவைத்திருந்தேன்—எல்லோரும் கை தட்டுவதில் வல்லவர்கள்—எவரும் கையுறை போடக்கூடாதென்று கட்டுப்பாடு விதித் திருந்தேன். கைத்தடியோ, சப்தத்தைக் குறைக்கக்கூடிய எதையுமோ அரங்கினுள் கொண்டுவரக் கூடாதென்றும் உத்தரவிட் டிருந்தேன். தேநீர்க்கடைகளெல்லாம் எனக்குத்

தெம்பூட்டின. இருப்பினும், இருக்கிறார்கள் இந்த விமரிசனக்காரர்கள்!

**மிரா :** ஆஹா, விமரிசனம்தானே, தெரியும்! ஆகவே உன் நாடகம் படுத்துவிட்டது.

**பிகா :** எல்லோருடைய நாடகத்தையும் போலத் தானே! படுத்தாலென்ன? ஒரு நாள் எழுந்து நடக்கத்தான் போகிறது!

**மிரா :** நாடகம் பார்க்காமல் அவர்களால் எவ்வளவு காலம் வாழமுடியும் என்று பார்ப் போமே!

**பிகா :** ஒருகை பார்த்துக்கொள்கிறேன்! பார்த்து!

**மிரா :** பேசுவாயப்பா! நீதிபதிகளைத் திட்ட நீதிக் கூடங்களில் நமக்குக் கிடைக்கக்கூடியதெல்லாம் இருபத்துநான்கு மணி நேரமே.

**பிகா :** நாடக உலகிலும் கிடைப்பது இருபத்து நான்கு மணி நேரம்தான். நாடகத்தை விரும்பாதோரைத் திட்டிக்கொண்டிருக்க நம் வாழ்நாள் மிகக் குறைவு.

**மிரா :** உன் கோபத்தைப் பார்க்க எனக்குச் சிரிப்புத்தான் வருகிறது. பிறகு எதற்காக மதிரித்தைவிட்டுக் கிளம்பிவிட்டாய் என்று சொல்லவில்லையே!

**பிகா :** என் குலதெய்வம்தான் காரணம் பெருந் தகையீர்! என் பழைய எஜமானர் எனக்கு மீண்டும் கிடைத்ததில் போதிய மகிழ்ச்சி

அல்லவா எனக்கு! ஏன் கிளம்பினேனா? மதிரித்தின் இலக்கிய உலகம், ஒன்றை ஒன்று தின்னும் ஓநாய்கள் உலவிவரும் ஓர் உலகம். கொசுக்களும் கரப்பான்களும் இந்த இலக்கிய உலகிலே ஏராளம் ஏராளம்! அவை மட்டுமா— அறிக்கை விடுவோரும், அளவில்லாமல் தணிக்கை செய்வோரும், மஞ்சள் பத்திரிகை பிரசுரிப்போரும், பிறர் வாழப் பொறுக்காத வரும், பொறாமைக்காரரும் அங்கே பெருமை யுடன் வாழ்கின்றனர். ஏழை எழுத்தாளர் களைச் சின்னாபின்னமாக்கி அவர்களின் உலர்ந்த உடலிலே எஞ்சி இருக்கும் கொஞ்ச நஞ்சக் குருதியையும் உறிஞ்சிக் குடிக்கும் கொடியவர்களின் கூட்டம் அது என்று உணர்ந்தேன். எனவேதான் எழுதுவதில் சலிப்பு ஏற்பட்டது, எனக்கு. என்னையே வெறுத்துக்கொண்டு பிறரையும் வெறுத்துக் கடன்பட்டுக் கையில் காசும் இல்லாமல் கடைசியாக—எழுத்துலகின் போலிக் கௌரவத்தைவிடச் சவரக் கத்தியால் கிடைக்கும் வருமானமே மேல்—என்று உணர்ந்து மதிரித்தைவிட்டுக் கிளம்பிவிட்டேன். மூட்டைச்சுமை முதுகிலே அழுத்த மூச்சுப் பிடித்துக்கொண்டு மாவட்டங்கள் பல கடந்து வந்தேன். ஓர் ஊரிலே ஒய்யாரமாக வரவேற்கப் பட்டேன். இன்னோர் ஊரிலே உதைத்துத் தள்ளப்பட்டேன். போற்றியவரும் பலர்! புழுதிவாரித் தூற்றியவரும் பலர்! வாகான

காலம் வகையாகக் கனிந்தபோது வாழ்ந்தும் துன்பத்தில் துவண்டு கிடந்த மனத்தைத் தேற்றிக்கொண்டும் வந்தேன். சிறிதும் அறிவில்லாதவர்கள் என் சிரிப்புக்கு ஆளானார்கள். அயோக்கியர்களுக்கு அறைகூவல் விடுத்தேன்; ஏழ்மையைக் கண்டு எள்ளி நகையாடி, வறுமையைப் பார்த்து வாய்விட்டுச் சிரித்து, மக்கள் அனைவர் முகத்திலும் கரி அள்ளிப் பூசிவிட்டுத் தாங்கள் தற்பொழுது பார்ப்பதுபோல் செவீய் நகருக்கு வந்து விட்டேன். இப்போது பெருந்தகையீர்க்குப் பணிபுரியப் பணிந்து நிற்கிறேன்.

**மிரா :** மகிழ்ச்சியான இத் தத்துவத்தை உனக்கு அறிவுறுத்தியவர் யார்?

**பிகா :** எல்லாம் துன்பத்தில் ஏற்பட்ட அனுபவம் தான்! துன்பம் நேர்ந்து துயருறுமுன்னமே சிரித்து மகிழ்ந்துவிடுகிறேன். என்ன! அந்தப் பக்கமே பார்த்துக்கொண்டிருக்கிறீர்?

**மிரா :** ஓடிவிடுவோம்.

**பிகா :** ஏன்?

**மிரா :** ஓடிவாடா, பாவி! காட்டிக் கொடுக்கிறாயே!

*(இருவரும் மறைந்துகொள்கிறார்கள்.)*

## காட்சி 3

**பாத்திரங்கள் :** பர்த்தலோ, ரொசீன்

*(முதல் மாடியின் சன்னல் திறக்கப்படுகின்றது. பர்த்தலோவும் ரொசீனும் சன்னலருகில் வருகின்றனர்.)*

**ரொ :** தென்றல் எவ்வளவு இதமாக இருக்கிறது! இந்தச் சன்னல் எப்போதோ ஒரு முறைதான் திறக்கப்படுகிறது...

**பர்த் :** கையிலென்ன காகிதம்?

**ரொ :** என் பாட்டு வாத்தியார் நேற்றுக் கொடுத்த 'வீண் பாதுகாப்பு' என்ற ஒரு பாட்டின் சில அடிகள்!

**பர்த் :** 'வீண் பாதுகாப்பு' என்றால் என்ன?

**ரொ :** அது ஒரு புதிய நகைச்சுவை நாடகம்.

**பர்த் :** சீ! அது ஒரு நாடகமா! புதியதொரு மடத்தனம்.

**ரொ :** எனக்குத் தெரியாது.

**பர்த் :** ஆஹஹா! பத்திரிகைகளும் ஆளுங்கட்சியும் பார்த்துக்கொள்ளும். இது காட்டுமிராண்டித் தனமான நூற்றாண்டு அல்லவா?

**ரொ :** எப்போதும் இந்த நூற்றாண்டின் நிலைமையைத் திட்டுவதுதான் உங்கள் வேலை.

**பர்த் :** *அது என் சுதந்தரம். இப்போது எதைப் போற்றத்தக்க அளவில் பிரசுரிக்கிறார்கள்? எல்லாம் முட்டாள் தனம்! சிந்தனைச் சுதந்தரத் தைப்பற்றியும், சமரசம், அம்மைத் தடுப்பு, கொய்னா, கலைக்களஞ்சியம், நாடகங்களைப் பற்றியும்தானே...*

**ரொ :** *(கையிலுள்ள காகிதத்தைச் சன்னல்வழியே தெருவில் போட்டுவிடுகிறாள்.) ஆ! என் பாட்டு! நீங்கள் பேசும்போது என் பாட்டுக் கீழே விழுந்து விட்டது. ஓடுங்கள்! கீழே ஓடுங்கள்! ஐயா! என் பாட்டுத் தொலைந்துவிடப் போகிறது.*

**பர்த் :** *நாசமாய்ப்போக! கையில் உள்ளதை எப் போதும் உடும்புப் பிடியாகப் பிடித்திருக்க வேண்டும். (பால்கனியை விட்டுக் கீழே போகிறான்.)*

**ரொ :** *(வீதியில் பார்த்துக்கொண்டே சைகை செய் கிறாள்) உஷ்! உஷ்! (மிராசுதார் தோன்று கின்றான்.) சீக்கிரம் கடிதத்தை எடுத்துக் கொண்டு ஓடிவிடுங்கள்! (மிராசுதார் ஒரே தாவலில் கடிதத்தை எடுத்துக்கொண்டு ஓடி மறைந்துவிடுகிறான்.)*

**பர்த் :** *(வீட்டிலிருந்து வெளிவந்து தேடுகிறான்.) எங்கே? காகிதம் எதையும் காணவில்லையே!*

**ரொ :** *பால்கனியின் கீழே பாருங்கள். சுவர் அருகில் விழுந்தது.*

பர்த் : நல்ல வேலைதான் கொடுத்தாய், போ! அதற்குள் யாராவது வந்தார்களா?

ரொ : நான் யாரையும் பார்க்கவில்லையே!

பர்த் : (தனக்குள்) போனால் போகிறதென்று நான் வேறு தேடிக்கொண்டிருக்கிறேன். பர்த்தலோ! நீ ஓர் அடிமுட்டாளடா! இதிலிருந்து தெருப்பக்கச் சன்னலை ஒருபோதும் திறக்கக் கூடாதென்று தெரிந்துகொள். (வீட்டினுள் நுழைகின்றான்.)

ரொ : (பால்கனியில் நின்றுகொண்டே) என் அவல நிலையில் என்னை யாரும் மன்னிப்பார்கள். வீட்டுக்குள்ளேயே பூட்டிவைக்கப்பட்டு, ஒரு கொடூரனின் வதையிலிருந்தும் அடிமைத்தனத்திலிருந்தும் விடுவித்துக்கொள்ள முயல்வது ஒரு குற்றமா?

பர்த் : (பால்கனிக்கு வந்துகொண்டே) உள்ளே வா, கண்ணே! உன் பாட்டுக் காணாமல் போனது என் குற்றமே. சத்தியமாக மற்றொரு முறை இப்படி நேராது. (சன்னலைப் பூட்டுகிறான்.)

## காட்சி 4

**பாத்திரங்கள் :** *மிராசுதார், பிகாரோ*

*(மிராசுதார், பிகாரோ கவனமாக வருகிறார்கள்.)*

**மிரா :** இப்போது அவர்கள் போய்விட்டார்கள். பாட்டைப் படிப்போம். இதில் ஏதோ ஒரு மர்மம் அடங்கி இருக்கிறது. அட, இது ஒரு காதல் கடிதம்!

**பிகா :** கிழவன் 'வீண் பாதுகாப்பு' என்றால் என்ன என்று கேட்டான்!

**மிரா :** *(விரைவாகப் படிக்கிறான்)* ''உங்கள் அவசரம் என் ஆர்வத்தைத் தூண்டுகிறது. என் காப்பாளன் வெளியில் சென்றவுடன் இந்த அபலையை நிழலாகப் பின்தொடரும் தாங்கள் யாரென்றும், தங்கள் பெயர் என்னவென்றும், தங்கள் குறிக்கோள் யாதென்றும், நான் தெரிந்துகொள்ளும் பொருட்டு எப்படியாவது பாடுங்கள்.''

**பிகா :** *(ரொசீனின் குரலில் பேசுகிறான்.)* 'என் பாட்டு! என் பாட்டுக் கீழே விழுந்துவிட்டது! ஓடுங்கள்! ஓடுங்கள் கீழே!' *(சிரிக்கிறான்)* ஆஹஹா! நல்ல பெண்கள்! பெண்களின் திறமையைச் சோதிக்க வீட்டில் அடைத்துவைத்தாலே போதும்!

**மிரா :** கண்ணே, ரொசீன்!

**பிகா :** பெருந்தகையீர்! உங்கள் மாறுவேடத்தை இப்போது புரிந்துகொண்டேன்! காதல்வலை வீசுகிறீர்களா?

**மிரா :** இப்போது தெரிந்துகொண்டாய் அல்லவா? ஆனால், குட்டை வெளிப்படுத்தினாயோ...

**பிகா :** நானா வெளிப்படுத்துவேன்! இப்போது அடுக்குச் சொற்களால், அலங்காரமாகப் பேசுகிறார்களே, அதைப்போல் வாய்ப்பந்தல் போட்டு நன்றி விசுவாச வார்த்தைகளைக் கொட்டி அளக்கமாட்டேன். ஒரே சொல்தான்! உங்கள் உடைமை என் உடைமை, எல்லாவற்றிலும் அப்படியே வைத்துக்கொள்ளுங்கள். மேலும்...

**மிரா :** சரி! ஆறு மாதங்களுக்குமுன் ஒரு சாலையில், தற்செயலாக ஒரு பெண்ணைப் பார்த்தேன். அழகே உருவெடுத்த ஆரணங்கு. இப்போது நீதான் பார்த்தாயே! அவளை மதிரித்து முழுதும் தேடினேன் தேடினேன், கிடைக்கவில்லை. சில நாள்களுக்கு முன்தான் அவளுடைய பெயர் ரொசீன் என்றும், உயர் குடும்பத்தவளென்றும், அநாதையென்றும், இந்த ஊரில் ஒரு கிழவைத்தியனின் மனைவியென்றும் தெரிந்துகொண்டேன். கிழவனின் பெயர் பர்த்தலோவாம்.

**பிகா :** பெண் என்னவோ கிளிதான். ஆனால் பறந்துவரவேண்டுமே! யார் சொன்னார்கள் அவள் மருத்துவனின் மனைவியென்று?

**மிரா :** எல்லோருந்தான்.

**பிகா :** இச்சைகொண்ட கட்டிளங்காளைகள் அப் பச்சைக்கிளியைக் கண்ணிவைத்துப் பிடித்து விடுவார்களோ என்று பயந்து, அவர்களின் கவனத்தைத் திசைதிருப்ப, கிழவன் மதிரித்து வரும்போது திரித்த கயிறு. அவள் கிழவனின் பாதுகாப்பில் உள்ள ஒரு பெண். ஆனால் சீக்கிரமே இருவரும் ஜாம்ஜாம் என்று......

**மிரா :** (படபடப்பாக) நடக்கவே நடக்காது, நடக்காது... ஆஹா என்ன அருமையான செய்தி! என் அனுதாபத்தை எப்படியாவது அவளுக்குத் தெரிவித்துக்கொள்ள வேண்டுமென்றிருந்தேன். இப்போது அவள் மணமாகாதவள் என்று தெரிந்துகொண்டேன். இனி ஒரு விநாடிகூடச் சும்மாவிருக்கக்கூடாது. எப்படியாவது அவளைக் கவரவேண்டும். உம், கிழவனின் கொடூரப் பிடியிலிருந்து அவளை மீட்கவேண்டும். அந்தக் காப்பாளனை உனக்குத் தெரியுமா?

**பிகா :** குழந்தைக்குத் தாயைத் தெரியுமா என்று கேளுங்கள்.

**மிரா :** அவன் எப்படிப்பட்டவன்?

**பிகா :** (விரைவாக) அவன் ஓர் அழகிய, சவரம் செய்த முகமுடைய, தடித்த, குட்டையாகக் கறுப்பும் சிவப்புமான, விவேகமுள்ள, வாழ்க்கையில் வெறுப்படைந்த, வாலிப வயோதிகன்! எப்போதும் விழிப்புடன், எதையாவது குடைந்துகொண்டும், திட்டிக்கொண்டும், முனகிக்கொண்டு மிருப்பான்.

**மிரா :** (பொறுமையிழந்து) சரி, சரி! அவனைத் தான் பார்த்தேனே! குணம் எப்படி ?

**பிகா :** முரடன், சந்தேகப் பேய், கஞ்சன், தன்னை விரும்பாத கன்னியைக் கூண்டுக்கிளியாகச் சிறை வைத்திருக்கிறான். விரைவில் கலியாணமும் செய்துகொள்ளப் போகிறானாம்.

**மிரா :** அப்படியானால் அவளைக் கவர......

**பிகா :** வழியே இல்லை.

**மிரா :** பரவாயில்லை. அவனுடைய யோக்கிய தாம்சம் எப்படி ?

**பிகா :** தூக்குமேடைக்குப் போகாமலிருக்குமளவுக்கு!

**மிரா :** ஓர் அயோக்கியனைத் தண்டிப்பதில் ஆனந்தமடைவோம்!

**பிகா :** இது பொதுநலமும் சுயநலமும் கலந்த செயல் அல்லவா! அப்பட்டமான நல்லொழுக்கம், பெருந்தகையீர்!

**மிரா :** இளங்காளைகளுக்குப் பயந்து கதவை எப் போதும் பூட்டிவைக்கிறான் என்று சொன் னாயே ?

**பிகா :** யாரும் நுழைய முடியாது. கதவைச் சீல்வைக்க முடிந்தால் அதையும் செய்து முடித்திருப்பான்.

**மிரா :** நாசமாய்ப்போக! அவன் வீட்டுக்கு உன்னால் போகமுடியுமா?

**பிகா :** போகமுடியுமா என்றா கேட்டீர்? ஓசியில் அவனுடைய வீட்டில்தானே நான் குடியிருக் கிறேன்.

**மிரா :** ஆஹா! ஆஹா!!

**பிகா :** நானும் நன்றிக் கடனாக, ஆண்டுக்குப் பத்து வராகன் கொடுக்கிறேன், ஓசியாக.

**மிரா :** அப்படியானால் நீ அவன் வீட்டில் குடியிருக் கின்றாய் என்று சொல்!

**பிகா :** அதுமட்டுமன்று, நான் அவனுடைய முடிதிருத்துவோன், இரண வைத்தியன், மருந்து கொடுப்பவன். தங்கள் பணியாளனான என்னையறியாமல் அந்த வீட்டில் எந்தக் கத்திக்கீறலோ, அறுவையோ, சவரமோ நடைபெறாது.

**மிரா :** ஆஹா! பிகாரோ! என் நண்பா! நீதான் என் குலங்காக்கும், என்னை ஆட்கொள்ளும், என்னை இரட்சிக்கும் தெய்வம்!

**பிகா :** நாசமாய்ப்போக! தேவை எப்படி ஏற்றத் தாழ்வுகளைத் தகர்த்தெறிகிறது! நீரா பேசுகிறீர்! காதல் அல்லவா பேசுகிறது!

**மிரா :** என்ன பாக்கியம்! என் ரொசீனை நீ பார்க்கப்போகிறாய்! நீ பார்க்கப்போகிறாய்!! என்ன பாக்கியம்!

**பிகா :** இது காதலன் பேசும் பேச்சு! எனக்கென்ன பாக்கியம் வந்தது, நானா காதலிக்கிறேன்? என்னிடத்தை நீங்கள் எடுத்துக்கொள்ளுங் களேன்!

**மிரா :** எல்லாக் காவல்களையும் அகற்றிவிட்டால்...

**பிகா :** அதைப்பற்றித்தான் யோசித்துக் கொண்டிருக்கிறேன்.

**மிரா :** பன்னிரண்டு மணி நேரம்வரை அகற்றி விட்டால் போதும்.

**பிகா :** அவனவன் அவனவன் நலத்தை நாடவைத் தால் பிறன் நலத்தில் குறுக்கிடமாட்டான்.

**மிரா :** உண்மைதான்!

**பிகா :** (எங்கோ பார்த்துக்கொண்டு) மருத்துவம் ஏதாவது தீங்கற்ற சில்லறை உதவிகளைச் செய் யாதா என்று மண்டையை உடைத்துக் கொண்டிருக்கிறேன்.

**மிரா :** மிகப் பெரிய விஷமியப்பா, நீ!

**பிகா :** அவர்களுக்குத் தீங்கா செய்ய விரும்பு கிறேன்? எல்லோருக்கும் என் கைவரிசையைக்

காட்டவேண்டும். அவ்வளவுதான்! அதுவும் எல்லோருக்கும் ஒரே நேரத்தில் சேர்த்துக் காட்டவேண்டும்.

**மிரா :** ஆனால், அந்த மருத்துவக்கிழவன் சந்தேகப் படலாம்!

**பிகா :** சந்தேகப்படுவதற்கு முன்பே விரைந்து செயல்பட வேண்டும். எனக்கு ஒரு தந்திரம் தோன்றுகிறது. இராணுவம் இவ் வூருக்கு வருகிறது அல்லவா?

**மிரா :** படைத்தலைவன் என் நண்பன்.

**பிகா :** அப்படியானால், படைவீரன் உடையில் கிழவனின் வீட்டிற்குப் போங்கள், அதிகார பூர்வமான கடிதத்துடன். சட்டப்படி அவன் உங்களுக்கு உணவும், உறங்க இடமும் தர வேண்டும். மேற்கொண்டு ஆக வேண்டியதை நான் பார்த்துக் கொள்கிறேன்.

**மிரா :** அடடே! இது ஓர் அருமையான தந்திரம்!

**பிகா :** கொஞ்சம் குடிபோதையில் உள்ளவர்போல் நடித்தால் நல்லது.

**மிரா :** ஏன்?

**பிகா :** சுயபுத்தியில்லாத ஆள்போல் நடித்தால் காரியத்தை விரைவில் முடிக்கலாம்.

**மிரா :** அதனால் என்ன பயன்?

**பிகா :** நீங்கள் கிழவன் வீட்டில் தூங்கத்தான் வருகிறீர் என்றும், கன்னிக்குக் கண்ணி வைப்பதற்கன்று என்றும் நினைப்பதற்காக.

**மிரா :** பிரமாதம்! பிரமாதம்!! ஆமாம் நீயும் கூட வரக்கூடாதா?

**பிகா :** முன்பின் பார்க்காத உங்களை அவன் தெரிந்துகொள்ளாமலிருந்தால் அதுவே எனக்கு மகிழ்ச்சி. பிறகு உங்களை எப்படி உள்ளே நுழையவிடுவது?

**மிரா :** நீ சொல்வது சரிதான்.

**பிகா :** குடிகாரன்போல நடிப்பது தங்களுக்கு நாசூக்காக இல்லாமல் இருக்கலாம். படை வீரனாக...குடிகாரனாக...

**மிரா :** பரிகசிக்காதே! (நடித்துக்காட்டுகிறான்.) இதுதானே மருத்துவர் பர்த்தலோவின் வீடு? நண்பா!

**பிகா :** அடடே! பரவாயில்லை! கால்கள் மட்டும் தான் இன்னும் கொஞ்சம் தள்ளாட வேண்டும். இப்படி, இதுதானே மருத்துவர்...

**மிரா :** ச்சே! ச்சே! இது நாட்டுச்சரக்குப் போட்டவன் மாதிரி அல்லவா இருக்கு.

**பிகா :** இதுதான் உயர்ந்தது. இதுதான் இன்பமானது.

**மிரா :** கதவை யாரோ திறக்கிறார்கள்.

**பிகா :** நம்ப கிழவன்தான். எனவே கம்பி நீட்டி விடுவோம்.

## காட்சி 5

*(பர்த்தலோ கிளம்பிக்கொண்டே வீட்டை நோக்கிப் பேசுகிறான்.)* உடனே திரும்பிவந்து விடுவேன். யாரையும் உள்ளே விடாதீர்கள். அவள் பேச்சைக் கேட்டுக்கொண்டு கீழே இறங்கினது எவ்வளவு மடத்தனம். அப்போதே சந்தேகப்பட்டிருக்க வேண்டும். 'பசீலை' வேறு காணோம். நாளைக் காலை நடக்கவிருக்கும் என் இரகசியத் திருமண ஏற்பாடுகளை அவன் கவனித்தாக வேண்டும். ஒரு தகவலும் இல்லையே! வந்தானா, இல்லையா என்று போய்ப் பார்ப்போம். ஏன் வரவில்லை என்று தெரிந்துகொள்வோம்.

## காட்சி 6

**பாத்திரங்கள் :** *மிராசுதார், பிகாரோ*

**மிரா :** என்ன சொன்னான்? நாளை ரொசீனை இரகசியத் திருமணம் செய்துகொள்கிறேன் என்றா?

**பிகா :** பெருந்தகையீர்! காரியம் கைகூடி வரும் போது தொந்தரவு அல்லவா தோன்றுகிறது.

**மிரா :** திருமணத்தை முடித்துவைக்கும் அந்தப் பசீல் யார்?

**பிகா :** பெண்ணுக்குச் சங்கீத அஞ்ஞானத்தைச் சொல்லிக்கொடுக்கும் ஓர் அப்பாவி. தன் திறமையில் கர்வம்கொண்ட, கருமமே கண்ணாயின ஒரு சிறிய கயவன். ஒரு காசிற்கு ஓராயிரம் கும்பிடு போடுகிறவன். அவன் நம் வழிக்கு எளிதாக வருவான். பெருந்தகையீர்! *(சன்னலைப் பார்த்து)* அதோ அவள்! அதோ அவள்!!

**மிரா :** யாரது ?

**பிகா :** சன்னலுக்குப் பின்னால்! அதோ அவள்! அதோ அவள்! பார்க்காதீர்கள். ஐயோ பார்க்காதீர்கள், ஐயா!

**மிரா :** ஏன்?

**பிகா :** அவள் உங்களுக்குக் கடிதம் எழுதவில்லையா, எப்படியாவது பாடுங்கள் என்று! அப்படியானால் பாடுங்கள்! நீங்கள் பாடுவதைப் போல், எப்படியாவது. ஆஹா! அதோ பாப்பா! சின்னப் பாப்பா! சிங்காரப் பாப்பா!

**மிரா :** நான் யாரென்று அவளுக்குத் தெரியாது. லேன்தோர் என்றே அழைக்கட்டும். அப்போது தான் வெற்றி சுவைதட்டும். *(ரொசீன் எறிந்த கடிதத்தைப் பார்க்கின்றான்.)* எப்படிப் பாடுவது? எனக்குப் பாட்டு வராதே!

**பிகா :** பெருந்தகையீர்! நீங்கள் எப்படிப் பாடினாலும் அது பாட்டாகத்தான் இருக்கும். காதல்

பாட்டு எப்படி இருந்தால் என்ன? என் கித்தாரை வாசியுங்கள்.

**மிரா :** இதை வைத்துக்கொண்டு என்னத்தைச் செய்ய! எனக்கு வாசிக்கத் தெரியாதே!

**பிகா :** உங்களைப்போன்ற பணக்காரர்களுக்கு எதுதான் தெரியாது. சும்மா இப்படி விரல் நுனியால் டர்-டி-டர். செவீயில் கித்தாரில்லாமல் பாடுவதாவது! உடனே உங்களை யாரென்று தெரிந்துகொள்வார்கள். பிறகு துரத்திவிடுவார்கள், துரத்தி!

**மிரா :** (கித்தார் வாசித்துக்கொண்டு நடந்துகொண்டே பாடுகிறான்.)

முதலிசை வெண்பா—

**" உந்தன் கட்டளை எந்தன் பாக்கியம்**
**நீ யாரோ நான் யாரோ**
**பெயர் தெரிந்து என்ன பயன் ?**
**பணிகிறேன் உன் கட்டளைக்கு !"**

**பிகா :** (சிறிய குரலில்) பிரமாதம்! பிரமாதம்!! தைரியமாகப் பாடுங்கள்.

**மிரா :** இரண்டாம் இசை வெண்பா—

**" என்பெயரோ லேன்தோர் பிறப்போ எளிமை**
**பிரம்மச்சாரியே நான். உன்னையே விரும்புகிறேன்**
**உனக்கு அர்ப்பணிக்க - அந்தோ! கோமகனின்**
**பணமும் தகுதியும் என்னிடம் இல்லையே !"**

**பிகா :** அடடா! அடடா!! பாடத் தெரிவதாகக் காட்டிக்கொள்ளும் எனக்கே இப்படி வராதே!

**மிரா :** *மூன்றாம் இசை வெண்பா—*

**" காலையிலே இன்னிசை பாடுகிறேன் இங்குக்**
**காதல் துயர் தாங்காமல்**
**உந்தன் தரிசனம் கிடைத்தால் போதும்**
**எந்தனிசை கேட்க ஓடோடி வாராயோ !"**

**பிகா :** *பாட்டென்றால் இதுவன்றோ பாட்டு! (மிராசுதாரின் அருகில்வந்து அவன் சட்டையின் அடிப்பாகத்தில் முத்தமிடுகிறான்.)*

**மிரா :** *பிகாரோ!*

**பிகா :** *பெருந்தகையீர்!*

**மிரா :** *என் பாட்டைக் கேட்டிருப்பார்களா?*

**ரோ :** *(உள்ளிருந்தே பாடுகிறாள்)*

**" காதல் மன்னனே ! லேன்தோர் !**
**காதலிப்பேன் உன்னை என்றும். "**

*(திடீரென்று சன்னல் மூடப்படுகிறது.)*

**பிகா :** *இப்போது தெரிகிறதா உங்கள் பாட்டைக் கேட்டார்களா இல்லையா என்று!*

**மிரா :** *சன்னலைச் சாத்திவிட்டாள். யாரோ ஒருவர் வந்திருக்கத்தான் வேண்டும்.*

**பிகா :** *ஐயோ, பாப்பா! பாடும்போது குரல் எப்படி நடுங்குகிறது! நம் வலையில் வீழ்ந்து விட்டாள், பெருந்தகையீர்!*

**மிரா :** *அவள் காட்டின முறைப்படியே பாடி விட்டாள்.*

''காதல் மன்னனே லேன்தோர்'', என்ன நயம்! என்ன பொருட்செறிவு!

**பிகா :** என்ன சமத்து! என்ன காதல்!

**மிரா :** தன்னை எனக்கு அர்ப்பணிக்கிறாள் என்று நினைக்கிறாயா, பிகாரேரா?

**பிகா :** முடியாவிட்டால் இந்தச் சன்னலி லிருந்தன்றோ குதித்துவிடுவாள்!

**மிரா :** வெற்றி! வெற்றி! நானும் அவளும் இணைந்துவிட்டோம் உயிர் உள்ளவரை!

**பிகா :** மறந்துவிடுகிறீர்கள், பெருந்தகையீர்! நீங்கள் பேசுவது அவளுக்குக் கேட்கா தென்பதை.

**மிரா :** பிகாரேரா தம்பி! ஒரே வார்த்தைதான் சொல்வேன். அவளையே மணந்துகொள்வேன். அவளிடம் நான் யாரென்று சொல்லாமல், எனக்கு உதவிபுரிந்தால் நான் உன்னிடம் எப்படி நடந்துகொள்ளுவேன் என்று தெரியு மல்லவா?

**பிகா :** அடியேன் பாக்கியம். அட பிகர்ரோ! அதிர்ஷ்டம் உன்னை அழைக்கிறது மகனே!

**மிரா :** யாராவது சந்தேகப்படப்போகிறார்கள்! போய்விடுவோம்.

**பிகா :** (விரைவாக) நான் உள்ளே போய், அங்கே என் கைவரிசையைக் காட்டப்போகிறேன். ஒரே மந்திரசால வித்தையில், காவலைத் தூங்கவைத்து, காதலைத் தட்டியெழுப்பி, சந்தேகத்தைச் சாகடித்து, சதித்திட்டத்தைச்

சிதறடித்து எல்லா இடையூறுகளையும் எடுத்தெறிவேன். நீங்கள் போய், பெருந் தகையீர், என் வீட்டிற்கு இராணுவ உடையில் அடைக்கலக் கடிதத்துடன் பைநிறையப் பணத்துடன் வந்துசேருங்கள்!

**மிரா :** பணம் எதற்கு ?

**பிகா :** (விரைவாக) பணமா! எதற்கா ? கடவுளே! பணம்தானே நம் திட்டத்தின் உயிர்நாடி!

**மிரா :** கோபித்துக்கொள்ளாதே, பிகாரேரா! நிறைய எடுத்துவருகிறேன்.

**பிகா :** போய்வருகிறேன்!

**மிரா :** பிகாரேரா!

**பிகா :** என்ன?

**மிரா :** உன் கித்தார்!

**பிகா :** அட, மறந்துவிட்டேனே! எனக்குமா பித்துப் பிடித்துவிட்டது! (போகிறான்.)

**மிரா :** உன் வீடு எங்கேயென்று சொல்லவில்லையே, மறதி மன்னரே!

**பிகா :** உண்மைதான். என் அறிவும் மயங்கி விட்டது. என்னுடைய கடை இங்கிருந்து நாலடி தூரத்தில், நீலநிறம் பூசின பழைய தகரத்திரை. என் பெயர்ப் பலகையில் மூன்று சிறிய குப்பிகள், கையில் நடுவே ஒரு கண்—இவை களின் வரைபடங்கள் இருக்கும். 'முடிதிருத்தும் வித்தையானாலும் முழு வித்தை வேண்டாவா?' (ஓடிவிடுகிறான்.)

## அங்கம் 2

# காட்சி 1

*(ரொசீனின் தனி அறை. மேடையின் கோடியில் கம்பிகள் பொருத்தப்பட்ட ஒரு சன்னல். சன்னலின் கதவு தாளிடப்பட்டுள்ளது. ரொசீன் தனியாகக் கையில் ஒரு மெழுகுவத்தி விளக்குடன் இருக்கிறாள். மேசையிலிருந்து ஒரு தாளை எடுத்து எழுதுகிறாள்.)*

**பாத்திரம் :** *ரொசீன்*

**ரொசீன் :** *மார்சலினுக்கோ உடம்பு சரியில்லை. வீட்டிலுள்ள அனைவரும் வேலையாயிருக் கிறார்கள். நான் எழுதுவதை யாரும் கவனிக்கமாட்டார்கள். இந்தச் சுவர்களுக்குக் கண், காது உண்டோ தெரியவில்லை அல்லது கிழவனுக்குக் கையாளாக ஒரு பேய் இங்கு நடப்பதையெல்லாம் உடனுக்குடன் தெரிவித்து விடுகிறதோ என்னவோ? அவனுக்குத் தெரியாமல் இங்கு ஓர் அடி எடுத்துவைக்க முடியாது. ஒரு வார்த்தை பேச முடியாது... ஐயோ! லேன்தோர்! (கடிதத்தை ஒட்டுகிறாள்.) எப்போது, எப்படி இந்தக் கடிதத்தை அவருக்குக் கொடுப்பேனோ தெரியாது. அவர் நீண்ட நேரம் முடிதிருத்துவோன் பிகாரோ விடம் பேசிக்கொண்டிருந்ததைச் சன்னல்*

வழியே பார்த்தேன். பிகாரோவுக்கு என்மேல் இரக்கமுண்டு. அவரிடம் கொஞ்சம் பேச முடிந்தால்...

## காட்சி 2

**பாத்திரங்கள் :** ரொசீன், பிகாரோ

**ரொ :** (திடுக்கிட்டு) ஆஹா! உங்களைக் காண்பதில் எனக்கு எவ்வளவு மகிழ்ச்சி!

**பிகா :** உடம்பு எப்படி இருக்கிறது, அம்மா?

**ரொ :** அவ்வளவு நன்றாக இல்லை, ஐயா பிகாரோ! சும்மா இருப்பதே வேதனையாக இருக்கிறது.

**பிகா :** உண்மைதான், முட்டாள்களைத்தான் அது கொழுக்க வைக்கும்.

**ரொ :** யாருடன் அவ்வளவு வேகமாகப் பேசிக் கொண்டிருந்தீர்? எனக்குக் கேட்கவில்லை. ஆனால்...

**பிகா :** ஒரு பிரம்மச்சாரி இளைஞனுடன் பேசிக் கொண்டிருந்தேன். அவன் எனக்குச் சொந்தக் காரன். நல்ல எதிர்காலமும், அறிவும், அன்பும் ஆற்றலும், களைபொருந்திய முகமுமுடையவன்.

**ரொ :** ஓ! அப்படியா செய்தி! அவருடைய பெயர் என்னவோ?...

**பிகா :** பெயர் லேன்தோர். ஒரு வேலையும் இல்லாமல் இருக்கிறான். மதிரித்தைவிட்டுத் திடீரென்று கிளம்பாது இருந்தானானால், அங்கு நல்ல வேலை கிடைத்திருக்கும்.

**ரொ :** *(எங்கோ கவனத்துடன்)* அவருக்குக் கிடைக்கும் ஐயா, பிகாரோ! அவருக்குக் கிடைக்கும்! நீர் வர்ணிப்பது போலுள்ள ஓர் இளைஞர் அநாமதேயராக இருக்க முடியாது.

**பிகா :** *(தனக்குள்)* அடடா, என்ன கரிசனம்! *(உரக்க)* ஆனால் அவனுடைய முன்னேற்றத்தைத் தடுக்கும் ஒரு துர்க்குணம் அவனுக்குண்டு.

**ரொ :** என்ன! ஒரு துர்க்குணமா, ஐயா? ஒரு துர்க்குணமா! நன்றாகத் தெரியுமா?

**பிகா :** அவன் காதலிக்கிறான்.

**ரொ :** காதலிப்பது, நீங்கள் கூறுவதுபோல் ஒரு துர்க்குணமா?

**பிகா :** அவனுடைய துன்பகாலத்தைப் பொறுத்த வரையில் அது ஒரு துர்க்குணம் என்பது உண்மை.

**ரொ :** ஆஹா! விதியின் கொடுமை என்னே! அவர் யாரைக் காதலிக்கிறார் என்று சொன்னாரா? என் ஆவலை அடக்க முடியவில்லையே!

**பிகா :** இத்தகைய இரகசியத்தை உங்களிடம் நான் எப்படியம்மா சொல்வது?

**ரோ :** (விரைவாக) ஏன் சொல்லக்கூடாது, ஐயா? உங்கள் இரகசியத்தை என்னால் காப்பாற்ற முடியாதா? உங்களுக்கு வேண்டியவரென்றால் எனக்குந் தானே வேண்டியவராகிறார். கொஞ்சம் சொல்லுங்களேன்...

**பிகா :** (அவளை உற்றுப் பார்த்துக்கொண்டே) அவள் உலகத்தின் எழிலெல்லாம் ஒன்றாகி உருவெடுத்து வந்த ஒப்பற்ற அழகி! இளங்கன்னி! நல்ல பண்புகள் படைத்த நங்கையவள். பார்த்தாலே போதும் பசிதீரும்! அவ்வளவு அழகு! இல்லையெனும் இடையும், ஈர்க்கும் அன்ன நடையும், ஆஹாஹா! நிமிர்ந்த தோற்றம், நேர்கொண்ட பார்வை, பாவையின் பட்டு இதழ்கள் பவளத்தையும் பறிக்கும்! கண்டோர் மனத்தைக் கவர்ந்து இழுக்கும் காரிகைதன் பருவத்தின் பூரிப்பைப் பார்க்க வேண்டுமே!... அவள் கைகளை, கன்னங்களை, பற்களை... கண்களை...!

**ரோ :** அவள் இந்த ஊரிலா இருக்கிறாள்?

**பிகா :** இந்தச் சதுக்கத்தில்.

**ரோ :** இந்தத் தெருவில் போலும்!

**பிகா :** எனக்கு இரண்டடி தூரத்தில்.

**ரோ :** ஆஹா! என்ன பாக்கியம் செய்திருப்பார்... உங்கள் சொந்தக்காரர் அந்தப் பெண்ணை யாரென்று...

**பிகா :** இன்னும் நான் சொல்லவில்லையா?

**றோ :** (விரைவாக) அதை மட்டும்தான் மறந்து விட்டீர்கள், சீக்கிரம் சொல்லுங்கள், ஐயா! சீக்கிரம் சொல்லுங்கள்! யாராவது வந்துவிடப் போகிறார்கள். பிறகு தெரிந்துகொள்ள முடியாது.

**பிகா :** அவசியம் தெரிந்துகொள்ள வேண்டுமா, அம்மா? சரி, அந்தப் பெண் உங்கள் பாது காப்பாளரின் பாதுகாப்பில் உள்ளவள்.

**றோ :** என்ன! பாதுகாப்பில் உள்ளவளா?

**பிகா :** ஆமாம்! மருத்துவர் பர்த்தலோவின் பாது காப்பில், அம்மா!

**றோ :** (உணர்ச்சி வசப்பட்டு) ஆஹா, ஐயா பிகா ரோ! நான் எப்படி உங்களை நம்புவது? நம்ப முடியவில்லையே!

**பிகா :** இதற்காகத்தான் அவரே நேரில் வந்து உங்களிடம் சொல்லத் துடிக்கிறார்.

**றோ :** எனக்குப் பயமாக இருக்கிறது, ஐயா பிகாரோ!

**பிகா :** ச்சே! பயமாவது பயம்! காதல் நோய்க்குப் பயந்தால், பயத்தின் நோய் அல்லவா வந்து விடும். மேலும் எல்லாக் காவல்களையும் நாளைவரை தகர்த்தெறிந்துவிட்டேன்.

**றோ :** அவர் என்னை உண்மையாகக் காதலிக் கிறார் என்றால் எந்த அசம்பாவிதமும் நடக்காமல் பார்த்துக்கொள்ள வேண்டும். சும்மா இருக்கவேண்டும்.

**பிகா :** அட, காதலித்துவிட்டால் எப்படியம்மா சும்மா இருக்க முடியும்? இன்றைய இளைஞர் களின் நிலை எவ்வளவு இரக்கத்திற்குரியது என்றால் அவர்களால் இரண்டில் ஒன்றுதான் முடியும். ஒன்று நிம்மதியற்றுக் காதலிப்பது; மற்றொன்று காதலற்று நிம்மதியாய் இருப்பது!

**ரொ :** (நிலத்தை நோக்கியபடி) காதலற்ற நிம்மதி... மிகவும்...

**பிகா :** ஆஹா! மிகவும் மோசமானதுதான்! நிம் மதியற்ற காதல் உண்மையில் இன்பமானது தான்! நானே ஒரு பெண்ணாக இருந்தால்...

**ரொ :** (தடுமாற்றத்துடன்) ஒரு நல்ல இளைஞர் ஓர் இளம்பெண்மேல் அன்பு கொள்வது ஒன்றும் முறையற்றதன்றே!

**பிகா :** அதனால்தான்! எனக்கு வேண்டியவர் உங்கள்மேல் அளவில்லாமல் அன்பு கொண்டிருக்கிறார் போலும்!

**ரொ :** அவர் விழிப்பாக இல்லாவிட்டால் எல்லாம் குட்டிச்சுவராகிவிடும்.

**பிகா :** (மெல்லிய குரலில்) குட்டிச்சுவராகிவிடும். (உரக்க) உங்களிடமிருந்து ஒரு சிறிய கடிதம் அப்படி நேராமல் தடுக்கலாம்! கடிதத்திற்கு அவ்வளவு ஆற்றலுண்டு, தெரியுமா?

**ரொ :** (தான் எழுதிய கடிதத்தைக் கொடுக் கிறாள்.) எனக்கு மற்றொருமுறை எழுத நேரமில்லை; கடிதத்தைக் கொடுக்கும்போது...

அவரிடம்... அ வ ரி ட ம் திருத்தமாகச் சொல்லுங்கள். (உற்றுக் கேட்கிறாள்.)

**பிகா :** யாருமில்லை, அம்மா!

**ரோ :** என் செயலுக்குக் காரணம் அவர்மேல் உள்ள தூய அன்புதான் என்று...

**பிகா :** நீங்கள் சொல்லாமலே தெரிகிறதே—காதல் வேறுவித நடையல்லவா போடுகிறது!

**ரோ :** அன்புதான் காரணம் என்று சொல்லுங்கள்—தெரிகிறதா? எதிர்ப்புகளைப் பார்த்து...

**பிகா :** பேய் பிசாசோ என்று பயந்துவிட மாட்டார். காதல் காட்டுத் தீயை மூட்டும் காற்றுப் போன்றது, அம்மா! ஒரு சுடரை அணைக்கும் அது, மற்றொரு கனலை அல்லவா தூண்டி விடுகிறது! நாம் எல்லோரும் கனலைப் போன்றவர்கள். அதைப்பற்றிப் பேசினாலே அதன் அனல் சும்மா கிடக்கும் என்னை வேறு பொசுக்கித் தொலைக்கிறது!

**ரோ :** கடவுளே! என் காப்பாளன் வரும் சப்தம் கேட்கிறது. அவன் உங்களை இங்குப் பார்த்து விட்டால்... என்னுடைய பாட்டு அறைக்குச் சென்று அங்கிருந்து கொஞ்சமும் சப்த மில்லாமல் மெதுவாக நழுவிவிடுங்கள்.

**பிகா :** அமைதியாக இருங்கள், அம்மா! (தனியே கடிதத்தைக் காட்டி) வாயால் பேசியே வந்த காரியத்தைச் சாதித்துவிட்டேனாக்கும்.

(அறைக்குச் செல்கிறான்.)

## காட்சி 3

**பாத்திரம் :** ரொசீன்

**ரொ :** *(தனிமையில்)* அவர் வீட்டைவிட்டு வெளியேறுமுன் நான் செத்துவிடுவேன் போலிருக்கிறதே! என் அன்புக்குப் பாத்திரமான இந்தப் பிகாரோ மிகவும் நல்லவர், யோக்கியமானவர். ஒரு நல்ல நண்பர். இதோ வந்துவிட்டான் நம் கொடுங்கோலன்—நம் வேலையைத் தொடர்வோம்.

*(மெழுகுவத்தியை அணைத்துவிட்டுப் பின்னல் வேலையைத் தொடங்குகிறாள்.)*

## காட்சி 4

**பாத்திரங்கள் :** பர்த்தலோ, ரொசீன்

**பர்த் :** *(கோபத்துடன்)* ஆஹா! நாசமாய்ப்போக! பைத்தியக்காரன்! தீவட்டிக் கொள்ளைக்காரன், அந்தப் பிகாரோ! வீட்டைவிட்டு ஒரு நிமிடம் வெளியில் போய்த் திரும்பிவந்து பார்த்தால்...

**ரொ :** ஐயா, யார்மேல் இவ்வளவு கோபம்?

**பர்த் :** இந்தப் பாழாப்போன முடிதிருத்துவோன், ஒரு நிமிடத்தில் வீட்டையே நாசப்படுத்திவிட்டான். கோட்டானு*க்குத் தூக்க மருந்து கொடுத்திருக்கிறான். 'இளமை'*க்குத் தும்மல்

---

* கோட்டான், இளமை—பர்த்தலோவின் பணியாளர்களின் பெயர்கள்.

பொடி போட்டிருக்கிறான். மார்சலினின் காலில் கீறி இரத்தம் வடித்திருக்கிறான். வீட்டிலுள்ள கோவேறு கழுதையைக்கூட விட்டுவைக்க வில்லை. கண் தெரியாத அந்தக் கழுதையின் கண்களில் பசைத்துணி வேறு ஒட்டியிருக் கிறான். எனக்கு நூறு வராகன் கடன் கொடுக்கவேண்டும் என்பதால், இத்தகைய வேலைகள் செய்து கணக்குக் காட்டப் பார்க்கிறான். ஆஹாஹா! காட்டட்டும் பார்த்துக்கொள்கிறேன்...வரவேற்பு அறையில் யாருமில்லை! இந்த அறையில் நாய் நுழைவது போல் எவரும் நுழையலாம்.

**ரொ :** உங்களைத் தவிர இங்கு யார் நுழை கிறார்கள், ஐயா?

**பர்த் :** பாதுகாப்பில்லாமல் ஏமாந்து போவதை விடக் காரணமில்லாமல் அஞ்சுவதையே விரும்புகிறேன். காரியவாதிகளும், எதற்கும் துணிந்தவர்களும் எங்கும் நிறைந்திருக் கிறார்கள். இன்று காலைகூட நான் கீழே இறங்கிப் போவதற்குள் உன் கடிதத்தை எவனோ அடித்துக்கொண்டு போய்விட வில்லையா? நான்...

**ரொ :** இப்படிச் சொல்வது எல்லாவற்றையும் மிகைப்படுத்துவதாகும். கடிதம் காற்றிலடித்துக் கொண்டு போயிருக்கலாம்; அல்லது அந்நியன் எவனாவது எடுத்து இருக்கலாம்! எனக்கென்ன தெரியும்?

**பர்த் :** காற்றாம், அந்நியனாம்! உலகில் காற்று மில்லை, அந்நியனுமில்லை, தாயே! காரணத் துடன் ஓர் ஆள் அங்கே நின்றிருந்து, ஒன்றும் தெரியாததுபோல் ஒரு பெண் போட்ட கடிதத்தைத் தட்டிக்கொண்டு போயிருக் கிறான்.

**ரொ :** ஒன்றும் தெரியாதது போலவா, ஐயா?

**பர்த் :** ஆம், தாயே! தெரியாததுபோல்தான்.

**ரொ :** (தனக்குள்) ஆஹா! கெட்ட கிழவன்!

**பர்த் :** இனி இப்படி நேராது. ஏனென்றால் இந்தச் சன்னலுக்குச் சீல் வைத்துவிடப் போகிறேன்.

**ரொ :** அப்படியே செய்யுங்கள். சன்னலை அடைத்து உடனே சுவர் எழுப்பிவிடுங்கள். சிறைக்கும் பாசறைக்கும் வேற்றுமை இல்லாமல் போய்விடும்.

**பர்த் :** தெருச் சன்னல்களைப் பொறுத்தவரை அப்படிச் செய்வதில் பிழையில்லை என்று நினைக்கிறேன். அந்த முடிதிருத்துவோன் இங்காவது வராமலிருந்தானா?

**ரொ :** அவன் மேலுமா சந்தேகம்?

**பர்த் :** எல்லோர் மேலும் இருப்பதுபோல் அவன் மேலுந்தான் சந்தேகம்.

**ரொ :** யோக்கியமானவர் பேசும் பேச்சு!

**பர்த் :** ஆமாம்! எல்லோரையும் நம்பினால், தன் வீட்டிலேயே, தன்னை ஏமாற்ற ஒரு நங்கையும், அவளைக் கடத்திச் செல்ல முயற்சி செய்யும் இனிய நண்பர்களும், அவர்களுக்குக் கையாள் களும், பணியாள்களும் கிடைப்பார்கள்.

**ரொ :** என்ன! அப்படியே பிகாரோ என்னை விரும்பினாலும்கூட அவனைப் புறக்கணிக்கும் அளவுக்குக்கூடவா எனக்குத் தன்மானம் இல்லாமல் போய்விடும்!

**பர்த் :** யார் கண்டார்கள் பெண்களின் விசித்திரப் போக்கை. தன்மானம்பற்றிப் பேசும் எத்தனை பேர்களை நான் பார்த்திருக்கிறேன்.

**ரொ :** (கோபத்துடன்) அப்படியா செய்தி! எந்த ஆணும் எங்களை மயக்க முடியும் என்றால் உங்களை மட்டும் நான் அறவே வெறுக்கக் காரணம்?

**பர்த் :** (தடுமாற்றத்துடன்) காரணம்?...காரணம்... அட நான் முடிதிருத்துவோனைப்பற்றிக் கேட்ட கேள்விக்குப் பதிலில்லையே!

**ரொ :** (பொறுமையிழந்து) அந்த ஆள் இங்கு வந்தான், பார்த்தேன், பேசினான். அவன் என்னிடம் அன்பாகப் பேசினான் என்பதைக் கூட உங்களிடம் மறைக்கவில்லை. வெறுப்புத் தாங்காமல் நாக்கைப் பிடுங்கிக்கொண்டு சாகலாம்! (வெளியே போகிறாள்.)

## காட்சி 5

**பாத்திரம் :** *பர்த்தலோ*

**பர்த் :** *(தனிமையில்)* துரோகிகள், நாய்ப்பயல்கள்! டேய் இளமை, டேய் கோட்டான் எங்கேடா போய்த் தொலைந்தீர்கள்? நாசமாய்ப்போக!

## காட்சி 6

**பாத்திரங்கள் :** *பர்த்தலோ, கோட்டான்*

**கோ :** *(தூங்கி விழுந்தபடி, கொட்டாவி விட்டுக் கொண்டே வருகிறான்.)* ஆ...ஆ...ஆ...

**பர்த் :** நீ எங்கிருந்தாய், அசட்டுச் சனியனே, அந்த முடிதிருத்துவோன் இங்கு வரும்போது?

**கோ :** ஐயா! நான் ஆ...ஆ...ஆ...

**பர்த் :** ஏதாவது சதித்திட்டம் தீட்டிக்கொண்டிருந் தாயாக்கும்? அவனை நீ பார்த்தாயா?

**கோ :** பார்த்தேன். எனக்கு உடம்பு சரியில்லை என்றுகூடச் சொன்னான். அவன் சொன்னது உண்மை. அவன் சொல்லும்போதே உடம்புக்கு வந்துவிட்... ஆ...ஆ...ஆ...

**பர்த் :** *(அவன் சொல்வதுபோலப் பேசிக் காட்டுகிறான்.)* ''அவன் சொல்லும்போதே உடம்புக்கு வந்துவிட்டது''... அந்த உதவாக்

கரை இளமை எங்கே? நான் எழுதித்தராமல் இந்தப் பொடிப்பயலுக்குத் தூக்க மருந்து கொடுத்திருக்கிறார்கள்! ஏதோ சதி நடக்கிறது.

## காட்சி 7

**பாத்திரங்கள் :** *பர்த்தலோ, கோட்டான், இளமை*

*(இளமை—ஒரு கிழவன் கைத்தடியின் உதவி யுடன் நொண்டிக்கொண்டு வருகிறான். பல முறை தும்முகிறான்.)*

**கோ :** *(கொட்டாவி விட்டுக்கொண்டே)* இளமையா?

**பர்த் :** போய் ஞாயிற்றுக்கிழமையில் தும்மு.

**இள :** ஒரு விநாடியில் இதுவரை ஐம்பது தடவை கள் தும்...தும்......தும்மிவிட்டேன். என்னால் தாங்க முடியவில்லை.

**பர்த் :** என்ன! ரொசீனின் அறையில் அந்நியர் எவரேனும் நுழைந்தார்களா என்று உங்களிரு வரையும் கேட்கிறேன். அந்த முடிதிருத்து வோனைப்பற்றி நீங்கள் ஒன்றும்......

**கோ :** *(கொட்டாவி விட்டுக்கொண்டே)* பிகாரோ ஓர் அந்நியனா? ஆ...ஆ......

**பர்த் :** நீயும் அவனுக்கு உடந்தைதான் என்று அடித்துச்சொல்வேன்.

**கோ :** (மடத்தனமாக அழுதுகொண்டே) ஆ! நானா உடந்தை?

**இள :** (தும்மிக்கொண்டே) என்ன அநியாயம்! எங்கே ஐயா நியாயம் இருக்கிறது?

**பர்த் :** பெரிய நியாயத்தைக் கண்டார்கள். நியாயம் உங்களுக்குள் இருக்கலாம். நான் உங்கள் எஜமானன். நியாயம் எப்போதும் என் பக்கம்தான்; தெரிந்துகொள்ளுங்கள்.

**இள :** (தும்மிக்கொண்டே) ஐயோ! உண்மை என்று ஒன்று உலகில் இல்லையா?

**பர்த் :** உண்மை என்று ஒன்று உண்டா? ஒரு காரியத்தை நான் உண்மையில்லை என்று சொன்னால் அது உண்மையாக இருக்கக் கூடாது. இந்த விஷமிகளின் நியாயத்திற்கு இடம் அளித்தால் அதிகாரம் விரைவில் என்ன ஆகும்?

**இள :** (தும்மிக்கொண்டே) என் கணக்கைத் தீர்த்து விட்டால் போதும். என்ன பயங்கரமான உத்தியோகம்! நரக வாழ்க்கை!

**கோ :** (அழுதுகொண்டே) ஒரு நல்ல பெரிய மனிதன் இழிவாக நடத்தப்படுகிறான்.

**பர்த் :** வெளியே போடா, நல்ல பெரிய மனிதா! (அவர்களைப்போல் நடித்துக்கொண்டே) ச்சே! ஒருவன் முகத்திலே தும்முகிறான்; மற்றொருவன் கொட்டாவி விடுகிறான்.

**இள :** ஐயா! சின்ன அம்மா மட்டும் இந்த வீட்டில் இல்லையென்றால்... (தும்முகிறான்) இங்கு... இங்கு...இங்கு வேலை செய்வதென்பதே முடியாத காரியமாகிவிடும்.

**பர்த் :** இந்தப் பிகாரோ எல்லோரையும் என்ன பாடு படுத்தியிருக்கிறான்! எனக்குத் தெரிந்து விட்டது. முடிச்சவிழ்க்காமல் என் நூறு வராகன் கடனை யடைக்கப் பார்க்கிறான்.

## காட்சி 8

**பாத்திரங்கள் :** பர்த்தலோ, பசில், பிகாரோ

(பிகாரோ அறையில் மறைந்து கொண்டிருக்கிறான். சிற்சில சமயங்களில் முகத்தை வெளியே நீட்டி, பேசிக்கொள்வதைக் கேட்கிறான்.)

**பர்த் :** ஐயா, பசில்! ரொசீனுக்குப் பாட்டுச் சொல்லித்தர வந்தீரா?

**பசில் :** அதற்கெங்கே இப்பொழுது நேரம்?

**பர்த் :** உன் வீட்டிற்கு வந்தேன், உன்னைக் காணவில்லை.

**பசில் :** உங்கள் காரியமாக வெளியே சென்றிருந்தேன். ஒரு கெட்ட செய்தி...

**பர்த் :** உனக்கா?

**பசில் :** இல்லை, உங்களுக்கு... மிராசுதார் அல்மாவிவா இந்த ஊரில் இருக்கிறான்.

**பர்த் :** மெதுவாகப் பேசு. ரொசீனை மதிரித்து முழுதும் தேடினானே, அவனா?

**பசில் :** அவனேதான்! பெரிய சதுக்கத்தில் தங்கி இருக்கிறான். ஒவ்வொரு நாளும் மாறு வேடத்தில் வெளியே செல்கிறானாம்!

**பர்த் :** சந்தேகமே இல்லை, எல்லாம் எனக்குத் தெரிந்துவிட்டது! இப்போது என்ன செய்ய வேண்டும்?

**பசில் :** அவன் ஒரு சாதாரண மனிதன் என்றால், சாதாரணமாக முறியடித்துவிடலாம்.

**பர்த் :** ஆமாம், இரவில் ஒளிந்திருந்து, குண்டர்களை ஏவிவிட்டு...

**பசில் :** கூடாது, கூடாது! அப்படிச் செய்தால் மாட்டிக்கொள்வோம். நமக்கு ஏன் வீண்வம்பு? இந்த நேரத்தில் செய்வது எல்லாம் அவதூறு கிளப்புவது ஒன்றேதான்! பெரியோர்கள் சொன்னதுபோல அதேதான் வழி!

**பர்த் :** ஒரு மனிதனை வீழ்த்த விநோத வழிதான்!

**பசில் :** அவதூறு, ஐயா! உங்களுக்குப் பிடிக்காத இதைப்பற்றி உங்களுக்கு என்ன தெரியும்? மிக நேர்மையான மனிதர்கள்கூட அசந்துபோய் விட்டிருக்கிறார்கள். சொல்லும் விதத்தில்

சொன்னால் ஒரு பெரிய நகரத்தின் வீணர்களை அப்படியே நம்பவைக்க இதைவிட ஒரு மோசமான பேச்சோ, விஷமச் செயலோ, கட்டுக் கதையோ இல்லை. அதற்குத் தகுந்த அசகாய சூரர்களுக்கா இங்குப் பஞ்சம்!

முதலில் அவதூறு ஒரு சிறிய வதந்தியாகக் கிளம்பும். மழைக்குமுன் தரையை உராய்ந்து கொண்டு பறக்கும் ஒரு பறவையைப்போல, பிறகு மிக மெதுவாகப் பரவும்; பரவிக் கொண்டே தன் விடத்தைப் பரப்பும். ஒருவர் அதைக் கேட்டு மெதுவாகச் சாதுரியமாக உங்கள் காதில் ஒத்து ஊதுவார். கெட்டது குடி! பிறந்தவுடன் தவழ்ந்து நடந்து ஒருவர் காதிலிருந்து மற்றொருவர் காதிற்கு அந்த வதந்தி அசுர வேகத்தில் பரவும். பிறகு திடீரென்று தலைநிமிர்ந்து பெருகி, வானளாவி வளரும். அது குதித்தெழுந்து, பறந்து காற்றிலே சுழன்று, எங்கும் வியாபித்து, ஒன்றைச் சேர்த்துக்கொண்டு மற்றொன்றைக் கழித்து, வெடித்து, இடியாக இடித்து, கடவுளின் அருளால் எல்லோருக்கும் தெரிந்த பொதுச் செய்தியாகிப் பிறகு படிப்படியாக அனைவரும் அறிந்த கீர்த்தனையாக, கொடுமையான, நியாயமற்ற மரணத் தீர்ப்பாக மாறிவிடும். அவதூறை எதிர்க்க யாரால் முடியும், பராபரமே!

**பார்த் :** இது என்ன பிதற்றல், பசில்! நீ சொல்லும் கீர்த்தனை, பஜனைக்கும் என் நிலைக்கும் என்ன சம்பந்தம்?

**பசில் :** என்ன சம்பந்தமா? நான் சொன்னது போலத்தான் இப்போது எல்லோரும் அவரவர் விரோதிகளை முறியடிக்கிறார்கள். உங்கள் விரோதி அருகில் வராமல் தடுக்க நீங்களும் அவதூறு கிளப்ப வேண்டும்.

**பார்த் :** என் விரோதி அருகில் வருவதாவது! அந்த மிராசுதார் இங்குதான் இருக்கிறான் என்று ரொசீன் தெரிந்துகொள்வதற்கு முன்னரே, நான் அவளைத் திருமணம் செய்துகொள்ள வேண்டும்.

**பசில் :** அப்படியென்றால் ஒரு விநாடிகூட வீணாக்கக்கூடாது.

**பார்த் :** அப்படியே ஆகட்டும், பசில்! இந்தக் காரியத்தின் முழுப்பொறுப்பும் உன்னுடையதன்றோ?

**பசில் :** ஆமாம், அதற்கு ஆக வேண்டிய செலவுகளில் கருமித்தனம் காட்டுகிறீரே! பொருத்தமில்லாத் திருமணம் செய்துகொள்ள, நேர்மையற்ற தீர்ப்பு, முறைகேடான சலுகை இவைகளைப் பெற, வெள்ளையப்பன் இராகம், தாளம், பல்லவி பாடவேண்டுமே!

**பர்த் :** *(அவனுக்குப் பணம் கொடுத்துக்கொண்டே)* இனி, உன் தாளத்திற்குத்தானே நான் பாட வேண்டும். சரி, சரி, காரியத்தைச் சீக்கிரத்தில் முடி.

**பசில் :** பேச்சு என்றால் இதுவன்றோ பேச்சு! நாளை எல்லாம் முடிந்துவிடும். சங்கதியை இன்று யாராவது குழந்தையின் காதில் போட்டு வைக்காமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

**பர்த் :** அதை என்னிடம் விட்டுவிடு. இன்று மாலையே திரும்பி வருவாயா, பசில்?

**பசில் :** அதெப்படி முடியும்? பகல் பூராவும் உங்கள் திருமண வேலைகளிருக்கும், வரமுடியாது.

**பர்த் :** *(அவன் கூடவே நடக்கிறான்)* அப்படியே ஆகட்டும்!

**பசில் :** பரவாயில்லை மருத்துவரே, நீங்கள் இருங்கள்...இருங்கள்!

**பர்த் :** அட! நீ வேறு! உன்னை வழியனுப்பிக் கதவை மூடப்போகிறேன், ஐயா!

## காட்சி 9

**பாத்திரம் :** *பிகாரோ*

**பிகா :** *(அறையைவிட்டுத் தனியே வெளியேறு கிறான்.)* எல்லாம் வீண் பாதுகாப்புதான்! தெருக்கதவை நீ மூடு. நான் வெளியேறும் போது, மிராசுதார் உள்ளே வரும்பொருட்டுத் திறந்துவிட்டுப் போகிறேன். பசில் ஒரு பெரிய திருட்டுப்பயல். ஆனால், அடிமுட்டாள். அவதூறை உலகில் பரப்பிப் பிரமாதப்படுத்த ஓர் உயர்வு, பிறப்பு, தராதரம், உறுதியெல்லாம் வேண்டுமே! அது பசிலால் முடியுமா? பயல் புறங்கூறி யாரும் நம்பமாட்டார்கள்.

## காட்சி 10

**பாத்திரங்கள் :** *ரொசீன், பிகாரோ*

**ரொ :** *(ஓடி வந்துகொண்டே)* இன்னுமா இங்கு இருக்கிறீர்கள், ஐயா பிகாரோ?

**பிகா :** நீங்கள் அதிர்ஷ்டசாலிதான், அம்மா! யாரு மில்லையென்று நினைத்துக்கொண்டு உங்கள் காப்பாளரும் பாட்டு வாத்தியாரும் உள்ளத் தைத் திறந்து பேசிக்கொண்டிருந்தார்கள்.

**ரொ :** என்ன! அவர்கள் பேசுவதை ஒட்டுக்கேட்டுக் கொண்டிருந்தீரா? ஒட்டுக்கேட்பது மிகவும் கெட்டதாயிற்றே!

**பிகா :** ஒட்டுக்கேட்பது கெட்டதா? ஒட்டுக் கேட்டால்தானே கேட்க வேண்டியதைக் கேட்டுக்கொள்ளலாம். நாளை உங்கள் காப்பாளர் உங்களைத் திருமணம் செய்து கொள்ளப் போகிறார் என்பதை நீங்கள் இப்போது கேட்டுக்கொள்ளுங்கள்.

**ரொ :** ஐயோ! கடவுளே!

**பிகா :** ஒன்றும் பயப்படாதீர்கள், திருமணத்தைப் பற்றிய நினைவே எழாதவாறு அவருக்கு நாங்கள் அவ்வளவு வேலை கொடுப்போம்!

**ரொ :** இதோ அவர் வருகிறார்! சிறிய படிக்கட்டு வழியே உடனே போய்விடுங்கள். பயத்தால் நான் இறந்தே போய்விடுவேன்!

(பிகாரோ ஓடிவிடுகிறான்.)

## காட்சி 11

**பாத்திரங்கள் :** பர்த்தலோ, ரொசீன்

**ரொ :** யாருடனோ பேசிக்கொண்டிருந்தீர்களே, ஐயா?

**பர்த் :** பசிலுடன். எல்லாம் காரணமாகத்தான். பிகாரோவுடன் பேசிக் கொண்டிருந்தேன் என்றால் அது உனக்குப் பிடித்திருக்கும்.

**ரொ :** *யாரிடம் பேசினால் எனக்கென்ன?*

**பர்த் :** *அந்த முடிதிருத்துவோன் உன்னிடம் அவ்வளவு முக்கியமாகப் பேச என்ன இருக்கிறது?*

**ரொ :** *நடந்ததைச் சொல்ல வேண்டுமென்றால் மர்சலினின் உடல்நலனைப்பற்றிப் பேசினார். அவனுக்கு உடம்பு சரியில்லையாம்.*

**பர்த் :** *பெரிய உடல்நலனைக் கண்டான்! உனக்கு ஏதோ ஒரு கடிதம் கொடுக்க வந்திருப்பான் என்று அடித்துச் சொல்வேன்!*

**ரொ :** *யாரிடமிருந்து என்று நினைக்கிறீர்?*

**பர்த் :** *யாரிடமிருந்தா? பெண்களா யாரிடமிருந் தென்று சொல்லுவார்கள்? எனக்கென்ன தெரியும்? சன்னலிலிருந்து போட்டாயே அந்தக் கடிதத்திற்குப் பதிலாயிருக்கும்.*

**ரொ :** *(தனக்குள்) பாவி எல்லாவற்றையுமே கவனிக்கிறான். (உரக்க) உங்கள் குணத்திற்கு அப்படியே நடந்திருக்க வேண்டும்.*

**பர்த் :** *(ரொசீனின் கைகளைப் பார்க்கிறான்.) அப்படித்தான் நடந்திருக்கிறது. நீ எழுதித் தான் இருக்கிறாய்!*

**ரொ :** *(கலவரத்துடன்) நான்தான் எழுதினேன் என்று நீங்கள் பழிசுமத்துவது வேடிக்கையாகத் தானிருக்கிறது!*

**பர்த் :** *(வலக்கையைப் பிடித்துப் பார்த்தவண்ணம்)* பழி சுமத்தவில்லை; உண்மையைத்தான் சொல்கிறேன். உன் விரல்களில் மைக்கறை எங்கிருந்து வந்தது? எங்கிருந்து வந்தது, பித்தலாட்டப் பேரரசியே!

**ரொ :** *(தனக்குள்)* கிழவன் கட்டையிலே போக!

**பர்த் :** *(கையைப் பிடித்தவண்ணம்)* தனியாக இருப்பதால், ஒரு பெண், தான் செய்வது யாருக்கும் தெரியாது என்று நினைக்கிறாள்.

**ரொ :** அப்படித்தான்! ஆமாம்! நல்ல நிரூபணம் போங்கள்! ஆளை விடுங்கள், ஐயா! கையை வேறு முறுக்கித்தொலைக்கிறீர். தையல் வேலை செய்யும்போது மெழுகுவத்தியில் சுட்டுக் கொண்டேன். உடனே மையில் விரலை நனைக்க வேண்டுமென்று சொல்லியிருந் தார்கள். அப்படியே செய்தேன்.

**பர்த் :** அப்படியே செய்தாயா? முதல் பொய் இரண்டாவது பொய்யை எப்படி வெளிப் படுத்துகிறது என்று பார்ப்போமே! இந்தக் குறிப்புச் சுவடியில் ஆறு தாள்கள்தாம் இருக்கு மென்று எனக்கு நன்றாகத் தெரியும். ஒவ்வொரு காலையும் நான் அவற்றை எண்ணி வைக் கிறேன். இன்றுகூடத்தான்!

**ரொ :** *(தனக்குள்)* ஓ! மடையன்!!

**பர்த் :** *(எண்ணுகிறான்)* மூன்று, நான்கு, ஐந்து....

**ரொ :** *ஆறாவது!*

**பர்த் :** *ஆறாவதுதான் இங்கில்லையென்று தெரியுமே!*

**ரொ :** *(தரையை நோக்கியபடியே) ஆறாவதா? அதில் பிகாரோவின் பெண் குழந்தைக்கு மிட்டாய் மடித்துக் கொடுத்தனுப்பினேன்.*

**பர்த் :** *பிகாரோவின் பெண் குழந்தைக்கா? புதிய எழுதுகோலில் எப்படி மைக்கறை படிந்திருக்கும்? குழந்தையின் விலாசத்தை எழுதி அனுப்பினாயா?*

**ரொ :** *(தனக்குள்) பொறாமைப் பேயாக இருக்கிறான் இந்த ஆள்!... (உரக்க) உங்கள் மேலங்கியில் நான் போடும் பூ கலைந்துவிட்டதால் அதை மறுபடியும் எழுதுகோலால் எழுதினேன்.*

**பர்த் :** *என்ன நேர்மை! என்ன நேர்மை!! நீ சொல்வதை நான் நம்ப வேண்டுமென்றால் குழந்தாய், உண்மையை நீ திரும்பத் திரும்ப மறைக்கும்போது உன் முகம் சிவக்காதிருக்க வேண்டுமே! இது உனக்கு இன்னும் தெரிந்திருக்காது!*

**ரொ :** *ஆ! யாருக்குத்தான் சிவக்காது, ஐயா! ஒன்றுமறியாமல் செய்தவற்றின்மேல் நீங்கள் சுமத்தும் பழியைக் கண்டு!*

**பர்த் :** *ஆம், தவறு என்மேல்தான். கைவிரலைச் சுட்டுக்கொள்வது, மையில் நனைப்பது, பிகாரோவின் பெண் குழந்தைக்கு மிட்டாய்ப்*

பொட்டலம் செய்வது, மேலங்கியில் பூப் போடுவது எல்லாம் ஒன்றுமறியாமல் செய்தது தானா? அட, எத்தனை பொய்கள் ஒரே ஓர் உண்மையை மறைக்க!... நான் தனியே இருக்கிறேன், யாரும் என்னைப் பார்க்க மாட்டார்கள், எளிதாகப் பொய் சொல்லி விடலாம் என்ற நினைப்பு! ஆனால் உண்மை என்னவோ வேறு. விரலில் மைக்கறை, எழுது கோல் எடுத்தாளப்பட்டிருக்கிறது, ஏட்டுத் தாளைக் காணவில்லை. ஒரே சமயத்தில் எல்லாவற்றையும்பற்றி எப்படி எண்ண முடியும்! நான் வெளியே போகும்போது, இல்லத்தரசியே! இறுக்கிப் பூட்டிவிட்டுப் போவது உனக்கு நல்லது.

## காட்சி 12

**பாத்திரங்கள் :** *மிராசுதார், பர்த்தலோ, ரொசீன்*

**மிரா :** *(குதிரைவீரன் உடையில், போதையில் உள்ளவன்போல் காணப்படுகிறான்.)* எழுப்பு வோம்—அவளை எழுப்புவோம்!

**பர்த் :** இந்த ஆளுக்கு என்ன வேண்டும்? என்ன? ஒரு போர் வீரனா? உள்ளே போய்விடு பெண்ணே!

**மிரா :** *(பாடுகிறான்)* எழுப்புவோம்—*(ரொசீனை நோக்கி நகர்கிறான்)* உங்கள் இருவரில் யார்

தாயே, மருத்துவர் பர்த்தலோ? (முணுமுணுக்கிறான், ரொசீனிடம்) நான்தான் லேன்தோர்.

**பர்த் :** பர்த்தலோ!

**ரொ :** (தனக்குள்) லேன்தோரைப்பற்றியல்லவா பேசுகிறான்!

**மிரா :** பலோர்தோலோ பாழாய்ப்போன தோலோ ...எனக்கென்ன கவலை இந்தப் பெயரைப் பற்றி! உங்களிருவரில் யாரந்த ஆள்?... (ரொசீனிடம் ஒரு தாளைக் காண்பித்து) இந்தக் கடிதத்தை வாங்கிக்கொள்.

**பர்த் :** எதை வாங்கிக்கொள்வது? நான்தான் அந்த மருத்துவர்! எந்தக் கடிதத்தை? உள்ளே போ ரொசீன், இந்த ஆள் குடித்திருக்கிறான் போலிருக்கிறது!

**ரொ :** இதற்காகத்தான் நானும் இங்கு இருக்கிறேன், ஐயா! நீங்கள் தனியாக வேறு இருக்கிறீர்கள். இவர்கள் சில சமயம் பெண்களுக்குப் பயப்படுவார்கள்.

**பர்த் :** உள்ளே போ, உள்ளே போ, நான் பார்த்துக்கொள்கிறேன்.

# காட்சி 13

**பாத்திரங்கள் :** *மிராசுதார், பர்த்தலோ*

**மிரா :** *ஓ! முதலிலேயே உன்னுடைய அடையாளத்தைக் கொண்டே நீ யார் என்று தெரிந்து கொண்டேன்!*

**பர்த் :** *(கடிதத்தை மறைக்கும் மிராசுதாரிடம்) உண்மையிலே எதை மறைக்கிறாய்?*

**மிரா :** *என் பையிலே நான் மறைக்கிறேன், அதை நீ தெரிந்துகொள்ளக் கூடாது என்பதற்காக!*

**பர்த் :** *என் அடையாளக் குறிப்பையா? இந்த ஆள்கள் எப்போதும் போர்வீரர்களிடம் பேசுவதாக நினைத்துக்கொள்கிறார்கள்!*

**மிரா :** *உன் அடையாளத்தைத் தெரிந்துகொள்வதென்பது அவ்வளவு கடினமா?*

*(பாடுகிறான்)*

**ஆட்டமாடும் வழுக்கைத்தலை**
**பஞ்சடைந்த கண்கள், மிருகப்பார்வை**
**காட்டுமிராண்டித் தோற்றம்**
**மூப்படைந்த தடித்த உடல்,**
**ஏற்றமேறும் வலது தோள்,**
**புள்ளி விழுந்த மேனி,**
**குடைமிளகாய் மூக்கு**
**தொட்டிக்கால்**
**கரகரத்த குரல், இரண்டுங்கெட்டான் தொனி**
**பார்த்தாலே குமட்டவரும்**
**மருத்துவ மாணிக்கம்!**

**பர்த் :** *நீ என்ன சொல்ல விரும்புகிறாய்? என்னைத் திட்ட வந்தாயா? உடனே இங்கிருந்து போய்விடு.*

**மிரா :** *போய்விடவா? ச்சே என்ன பேச்சு இது, படிக்கத் தெரியுமா ஐயா மரு-த்-துவரே?*

**பர்த் :** *இது அதிகப் பிரசங்கித்தனம்!*

**மிரா :** *அட-அப்படியா! கோபித்துக்கொள்ளாதீர் கள்! நான்கூடத்தான் உங்களைப்போல ஒரு மருத்துவன்.*

**பர்த் :** *எந்த முறையில்?*

**மிரா :** *பட்டாளக் குதிரைகளுக்கெல்லாம் நான் தானே மருத்துவன்! இதற்காகத்தான் சகபாடி யாகிய உங்கள் வீட்டிற்கு என்னைத் தூங்க அனுப்பினார்கள்.*

**பர்த் :** *ச்சீ! மிருக வைத்தியனோடா என்னை ஒப்பிடுவது?*

**மிரா :** *இல்லை, மருத்துவரே! எங்கள் கலையை மாபெரும் மருத்துவக் கலைக்கு ஒப்பிட முடியாதுதான்!*

*(பாட்டு)*

**“உங்கள் கை வண்ணத்திற்கு அன்பரே**
**எப்போதும் வெற்றி யுண்டு**
**நோயைத் தீர்க்கா விடினும்**
**நோயாளியை யாவது தீர்த்துவிடும்!”**

*நான் சொல்வது சரிதானே!*

**பர்த் :** உனக்குச் சரியாயிருக்கலாம், ஆற்ற மாட்டாத முட்டாளே! தலைசிறந்த, மிகப் பெரிய, கைமேல் பயனளிக்கும் கலையையா தாழ்த்திப் பேசுவது!

**மிரா :** ஆமாம், மருத்துவர்க்குக் கைமேல் நல்ல பயனளிக்குந்தான்!

**பர்த் :** கதிரவனே, எங்கள் கலையின் வெற்றியைக் கண்டு பெருமிதப்படுகிறான்!

**மிரா :** பூமியோ செய்த குற்றங்களை உடனுக் குடன் புதைத்துவிடுகிறது!

**பர்த் :** இப்போது தெரிகிறது, மட்டிப்பயலே, குதிரைகளிடம் மட்டும்தான் உனக்குப் பேசத் தெரியுமென்று!

**மிரா :** குதிரைகளிடம் மட்டுந்தானா! ஆஹா! மருத்துவரே! என்ன அறிவாளி மருத்துவர்! இது உலகறிந்த விஷயமன்றோ? குதிரை வைத்தியன் தன் நோயாளிகளிடம் பேசாம லேயே குணப்படுத்துவான். மருத்துவனோ அதிகமாகப் பேசி...

**பர்த் :** குணப்படுத்தமாட்டான் அல்லவா?

**மிரா :** நீங்கள்தான் அப்படிச் சொல்கிறீர்கள்!

**பர்த் :** இந்த நாசமாய்ப்போன குடிகாரனை யார் இங்கு அனுப்பினார்கள்?

**மிரா :** என்ன! என்னை வெட்டிப் பாடுகிறீர்களா? காதல் பாட்டா?

**பர்த் :** முடிவாக, உனக்கென்ன வேண்டும்? நீ என்ன கேட்கிறாய்?

**மிரா :** (பொய்க் கோபத்துடன்) ஐயா, கோபப் படுகிறார்! சரி, எனக்கு வேண்டியதா? எனக் கென்ன வேண்டுமென்று இன்னுமா தெரிய வில்லை?

## காட்சி 14

**பாத்திரங்கள் :** ரொசீன், மிராசுதார், பர்த்தலோ

**ரொ :** (ஓடி வந்துகொண்டே) ஐயா, போர்வீரரே, தயவுசெய்து கோபித்துக் கொள்ளாதீர்கள். (பர்த்தலோவிடம்) அவரிடம் கொஞ்சம் பொறுமையாகப் பேசுங்களேன், ஐயா! ஆள் நிதானமில்லாமல் பேசுகிறார்...

**மிரா :** நீ சொல்வதுதான் சரி, கண்ணே! இவர் நிதானமில்லாமல்தான் பேசுகிறார். ஆனால் நாம் சுயபுத்தியுடன் பேசுகிறோமல்லவா? நான் மரியாதையாக, நீ அழகாக... இது போதும்! உண்மையில் இந்த வீட்டில் உன்னிடம்தான் எனக்கு வேலையிருக்கு!

**ரொ :** நான் உங்களுக்கு என்ன செய்ய வேண்டும், போர்வீரரே?

**மிரா :** ஒன்றுமில்லை குழந்தாய்! என் வார்த்தை உனக்குப் புரியவில்லை யென்றால்...

**ரொ :** கருத்தைப் புரிந்துகொள்கிறேன்!

**மிரா :** (அவளிடம் கடிதத்தைக் காட்டிக்கொண்டே) இல்லை! இந்தக் கடிதத்திலுள்ளதைக் கவனித்துக்கொள்! கடிதத்திலுள்ளதை! இதில் என்ன இருக்கிறதென்றால்... நான் பணிவாக, மரியாதையாகச் சொல்கிறேன். இன்றிரவு இங்குத் தங்க வசதியளிக்க வேண்டும்!

**பர்த் :** இதுமட்டுந்தானே?

**மிரா :** இது மட்டுந்தான். இதோ என் பட்டாளத்துத் தலைவர் உனக்கு எழுதிய காதல் கடிதம்!

**பர்த் :** கொடு பார்ப்போம். (மிராசுதார் கடிதத்தை மறைத்துக்கொண்டு வேறொரு தாளைக் கொடுக்கிறான். பர்த்தலோ படிக்கிறான்.) —மருத்துவர் பர்த்தலோ அவர்கள் வரவேற்பும் உணவும், தங்க வசதியும்...

**மிரா :** (திருத்தமாக) தங்க வசதியும்...

**பர்த் :** ஓர் இரவுக்கு மட்டும், குதிரைப்படையிலுள்ள மாணவர் என்றழைக்கும் லேன்தோர் என்பவர்க்குக் கொடுக்கும்படி வேண்டப் படுகிறார்.

**ரொ :** இவர், அவரே தான்!

**பர்த் :** (திடீரென்று) ரொசீனிடம், என்ன?

**மிரா :** சரி, நான் சொல்வது சரிதானே? மருத்துவர் 'பர்பாரோ' அவர்களே!

**பர்த் :** *முடிந்த எல்லா வழிகளிலும் என் பெயரைப் பிய்த்தெடுக்க இவனுக்கென்ன மட்டமான இன்பமோ! நாசமாய்ப்போக அந்த 'பர்பா ரோவும்' 'கிர்பாரோவும்!' போய்ச் சொல்லையா, உங்கள் மதிகெட்ட தலை வருக்கு—நான் மதிரித்துக்குப் போய் வந்ததி லிருந்து எந்த இராணுவ வீரருக்கும் உணவோ விடுதியோ அளிக்கத் தேவையில்லை, அதற் கான சலுகை வாங்கி வந்திருக்கிறேன் என்று.*

**மிரா :** *(தனக்குள்) ஐயோ! கடவுளே! என்ன போதாத காலம்...*

**பர்த் :** *ஆஹா! ஆஹா! நண்பரே! கோபத்துடன் கொஞ்சம் நிதானம் வருகிறதா? இப்போது இடத்தை உடனே காலிபண்ணும், ஐயா!*

**மிரா :** *(தனக்குள்) மாட்டிக்கொள்ளப் பார்த் தேனே! (உரக்க) காலியா பண்ண ஐயா? இராணுவச் சலுகை இருந்தால் போதுமா! கொஞ்சம் மரியாதையும் வேண்டாமா? காலியா பண்ண? உன் சலுகைப் பத்திரத்தைக் காட்டய்யா, எனக்குப் படிக்கத் தெரியா விட்டாலும் கொஞ்சம் பார்க்கலாம்.*

**பர்த் :** *இது மட்டுந்தானே! என் அறையில் வைத்திருக்கிறேன். (அறைக்குப் போகிறான்.)*

**மிரா :** *(பர்த்தலோ சென்றவுடன்) ஆ! கண்ணே, ரொசீன்!*

**ரொ :** *என்ன! லேன்தோர், நீங்களா!*

**மிரா :** *இந்தக் கடிதத்தையாவது வாங்கிக்கொள்.*

**ரொ :** *ஜாக்கிரதை, கிழவனின் கண்கள் நம் மேல்தான்!*

**மிரா :** *உன் கைக்குட்டையை வெளியில் எடு. கடிதத்தைக் கீழே போடுகிறேன்.*
*(அருகில் வருகிறான்.)*

**பர்த் :** *பொறுமை! பொறுமை! மாவீரரே! என் மனைவியை உற்றுநோக்குவது எனக்குப் பிடிக்காது.*

**மிரா :** *உங்கள் மனைவியா?*

**பர்த் :** *பின்னே!*

**மிரா :** *உங்களை நான் அவளுடைய தாய்வழிவந்த, தந்தைவழி வந்த அமரர், முப்பாட்டனார் என்றல்லவா நினைத்தேன்! உங்களுக்கும் அவளுக்கும் மூன்று தலைமுறை அல்லவா வித்தியாசம் இருக்கிறது!*

**பர்த் :** *(ஒரு பத்திரத்தை வாசிக்கிறான்.) நல்ல, நம்பத்தக்க சாட்சியங்களுக்கொப்ப...*

**மிரா :** *(பத்திரங்களைத் தட்டிவிடுகிறான். அவை தரையில் விழுகின்றன.) எனக்கெதற்கு இந்த வீண்வார்த்தைகள்?*

**பர்த் :** *டேய்! ஜாக்கிரதை! என் ஆள்களைக் கூப்பிட்டால் உன்னை எப்படி நடத்த*

வேண்டுமோ, அப்படி நடத்துவார்கள் என்பதைத் தெரிந்துகொள், வீரனே!

**மிரா :** போரா? வரட்டும் போர்! பார்ப்போம் ஒருகை! அதுதானே என் தொழில்! (இடுப்பில் உள்ள கைத்துப்பாக்கியைக் காட்டிக் கொண்டே) இதோ இருக்கிறது அவர்கள் முகத்தைக் கரியாக்க! நீ போரைப் பார்த்த தில்லை அல்லவா, அம்மா?

**ரொ :** பார்க்கவும் விருப்பமில்லை!

**மிரா :** போரைவிட உலகில் ஏதடா பேரின்பம்? (மருத்துவரைத் தள்ளிக்கொண்டே) எதிரி பள்ளத்தாக்கின் ஒரு புறமும், நண்பர்கள் மற்றொரு புறமும் இருக்கிறார்கள் என்று வைத்துக்கொள்வோம். (ரொசீனிடம் கடிதத் தைக் காட்டிக்கொண்டே) கைக்குட்டையை வெளியில் எடு. (கீழே துப்புகிறான்.) இதோ, இதுதான் பள்ளத்தாக்கு, தெரிகிறதா? (ரொசீன் தன் கைக்குட்டையை எடுக்கிறாள்; மிராசுதார் கடிதத்தை அவளுக்கும் தனக்கும் இடையே போடுகிறான்.)

**பர்த் :** (கீழே குனிந்துகொண்டே) ஆஹா! ஆஹா!!

**மிரா :** (கடிதத்தைத் திரும்ப எடுத்துக்கொண்டு) அட என் தொழில் இரகசியங்களை அல்லவா சொல்லிவிட இருந்தேன்... உண்மையில் பெண் அழுத்தந்தான்! தன் பையிலிருந்த ஏதோ ஒரு காதல் கடிதத்தைப் போடுகிறாள் பார்த் தீர்களா?

**பர்த் :** தம்பி அதை இப்படிக் கொடுப்பா! கொடுப்பா!

**மிரா :** என்ன தளுக்கு, என்ன இனிமை, தந்தையே! அவரவர் பொருள் அவரவர்க்கே! ஒரு பச்சிலை வைத்தியக் குறிப்பு உங்கள் பையிலிருந்து விழுந் திருந்தால் கொடுத்துவிடுவீரா?

**ரொ :** (கையை நீட்டி) ஆஹா! போர்வீரரே, எனக்குப் புரிகிறது! (கடிதத்தைச் சட்டென்று வாங்கித் தன் மேலாடைப் பையில் மறைத்து விடுகிறாள்.)

**பர்த் :** போய்த் தொலைகிறாயா! போகிறாயா, இல்லையா?

**மிரா :** சரி, போகிறேன்! போய்வருகிறேன்! மருத்துவரே! நமக்குள் வீண் பகை எதற்கு? போகுமுன் ஒரு சிறிய வாழ்த்து, என்னை வாழ்த்துங்கள் அன்பரே! இன்னும் சில யுத்தங் களில் என்னை மறந்து விட்டுவிடும்படி எமனிடம் வேண்டிக்கொள்ளும். இப்பொழுது வாழ்க்கை அவ்வளவு இனிக்க ஆரம்பித்திருக் கிறது!

**பர்த் :** போய்வா! எமனிடம் எனக்கென்ன அவ்வளவு நட்புறவா?

**மிரா :** இல்லாமலா போய்விடும்! மருத்துவர் ஆயிற்றே தாங்கள்! எமனுடைய கையா ளல்லவா! எமன் தாங்கள் கேட்பதை நிராகரிக்கவே மாட்டான். (போகிறான்.)

## காட்சி 15

**பாத்திரங்கள் :** *பர்த்தலோ, ரொசீன்*

**பர்த் :** *(அவன் போகிறதைப் பார்த்துக்கொண்டே —தனக்குள்) அப்பாடா தொலைந்தான்! வா உள்ளே!*

**ரொ :** *ஐயா, உண்மையிலேயே அந்த இளம் வீரன் மகிழ்ச்சியாக இருக்கிறான். குடிபோதையில் இருந்தாலும், அவனிடம் போதிய கல்வியறிவு தெரிகிறது அல்லவா?*

**பர்த் :** *என்னமோ, அன்பே, அவன் ஆளை விட்டான்! சரி, அவன் உனக்கு ஒரு கடிதம் கொடுத்தானே, அதை இருவரும் சேர்ந்து படித்துப் பார்ப்போமா?*

**ரொ :** *எந்தக் கடிதம்?*

**பர்த் :** *உனக்குக் கொடுப்பதற்குத் தரையிலிருந்து எடுப்பதுபோல் பாவித்தானே அந்தக் கடிதத்தை!*

**ரொ :** *அதுவா, இராணுவத்திலிருக்கும் என் அண்ணன் எனக்கெழுதியது. பையிலிருந்து கீழே விழுந்துவிட்டது.*

**பர்த் :** *எனக்கென்னமோ, கடிதம் அவன் பையிலிருந்து வீழ்ந்தது என்றுதான் படுகிறது!*

**ரொ :** *அப்படி இல்லவேயில்லை!*

**பர்த் :** *படித்துப் பார்த்தால் என்ன வந்துவிடும்?*

**ரொ :** *அதை என்ன செய்தேன் என்று எனக்கே தெரியாது.*

**பர்த் :** *(பையைக் காட்டி) இதோ இங்குப் போட்டாய்.*

**ரொ :** *அடடே, மறந்தே போய்விட்டது!*

**பர்த் :** *ஆமாம், பைத்தியக்காரத்தனமான ஒரு கடிதமாயிருக்கும்.*

**ரொ :** *(தனக்குள்) இவன் கோபத்தைத் தூண்டினா லொழிய இவனிடமிருந்து தப்ப முடியாது!*

**பர்த் :** *கடிதத்தை என்னிடம் கொடும்மா, கண்ணே!*

**ரொ :** *இப்படிக் கட்டாயப்படுத்துவதன் காரணம் என்ன? ஐயா, இன்னும் ஏதாவது சந்தேகமா?*

**பர்த் :** *காட்டாமலிருப்பதற்கு என்ன காரணமோ?*

**ரொ :** *திரும்பத் திரும்பச் சொல்கிறேன் ஐயா, இந்தக் கடிதம் என் அண்ணன் எழுதியதுதான் என்று! அதையும் நீர்தானே நேற்று என்னிடம் பிரித்துப் படித்தே கொடுத்தீர். கண்டிப்பாகச் சொல்கிறேன். இத்தகைய விஷயங்களில் நீங்கள் தலையிடுவது எனக்குக் கொஞ்சமும் பிடிக்கவில்லை.*

**பர்த் :** *நீ சொல்வது எனக்குக் கொஞ்சமும் புரியவில்லையே!*

**ரொ :** உங்களுக்கு வரும் கடிதங்களை நான் படிக்கிறேனா? எனக்கு வருபவைகளை நீர் ஏன் கவனிக்கிறீர்? பொறாமைதான் காரண மென்றால் அது என்னை அவமானப்படுத்துவ தாகும். முறையற்ற அதிகாரம் என்றால் அதை நான் முறியடிக்க வேண்டியிருக்கும்.

**பர்த் :** என்ன? முறியடிப்பாயா? இப்படி நீ என்னிடம் எப்போதும் பேசினதில்லையே!

**ரொ :** நான் இதுவரை பொறுமையாயிருந்தேன் என்றால், என்னை நீங்கள் கண்டபடி அவமதிக்க உங்களுக்கு இடமளித்தேன் என்று பொருளன்று.

**பர்த் :** எந்த அவமதிப்பைப்பற்றிப் பேசுகிறாய்?

**ரொ :** ஒருவருக்கு வரும் கடிதங்களைப் பிரிப்ப தென்பது எங்கும் நடைபெறாத காரியம் அன்றோ!

**பர்த் :** தன் மனைவிக்கு வரும் கடிதங்களைக் கூடவா?

**ரொ :** நான் இன்னும் உங்கள் மனைவியாக வில்லை. அப்படியே இருப்பினும், யாரும் அடையாத அவமதிப்பை நான் அடைய வேண்டுமா?

**பர்த் :** தெரிகிறது, பேச்சை மாற்றிக் கடிதத்தின் மேலுள்ள என் கவனத்தைத் திசைதிருப்பப் பார்க்கிறாயா? சந்தேகமேயில்லை, அது ஒரு

காதல் கடிதமேதான். எப்படியும் பார்த்தே தீருவேன்!

**ரொ :** பார்க்கமாட்டீர்! அருகில் வந்தால் வீட்டை விட்டு ஓடிப்போய் முதலில் சந்திக்கும் எவனிட மாவது அடைக்கலம் கேட்பேன்.

**பர்த் :** எவனும் அடைக்கலம் கொடுக்கமாட்டான்.

**ரொ :** அதையும்தான் பார்ப்போமே!

**பர்த் :** என்ன! நாம் பிரான்ஸ் தேசத்திலா இருக் கிறோம்? அங்குதான் பெண்கள் வைத்தது சட்டம். இருந்தாலும் ஓடும் எண்ணம் வராம லிருக்கக் கதவைச் சாத்திவிட்டு வருகிறேன் தாயே!

**ரொ :** (மருத்துவன் கதவைச் சாத்தப்போகும் போது—தனக்குள்) அட கடவுளே! என்ன செய்வது? காதல் கடிதத்தின் இடத்தில் அண்ண னின் கடிதத்தை உடனே வைத்துவிட்டு வேடிக்கை பார்ப்போம். (கடிதத்தை இடம் மாற்றுகிறாள். அண்ணனின் கடிதத்தைச் சிறிது வெளியில் தெரியுமாறு வைக்கிறாள்.)

**பர்த் :** இப்போது கடிதத்தைப் பார்க்கலா மென்றிருக்கிறேன்.

**ரொ :** எந்த உரிமையில், ஐயா?

**பர்த் :** உலகம் அறிந்த உரிமையில், வல்லவன் உரிமையில்.

**ரொ :** என்னிடமிருந்து அதைப் பறிப்பதைவிட என்னைக் கொன்றுவிடலாம்!

**பர்த் :** (காலால் தரையை உதைத்துக்கொண்டே) உம், சீக்கிரம்! சீக்கிரம்!

**ரொ :** (ஒரு நாற்காலியில் மயக்கம்போட்டு விழும் பாவனையில்) ஆ! ஆ!! என்ன அவமானம்!...

**பர்த் :** கோபம் வந்துவிடும், கடிதத்தைக் கொடுத்து விடு.

**ரொ :** (பின்புறமாகச் சாய்ந்தபடியே) அடிபாவி, ரொசீன்!

**பர்த் :** உனக்கென்ன வந்துவிட்டது?

**ரொ :** எத்தகைய கொடூரமான எதிர்காலம்!

**பர்த் :** ரொசீன்!

**ரொ :** கோபம் பொங்குகிறதே!

**பர்த் :** உடம்புக்கு ஆகவில்லை போலிருக்கிறது.

**ரொ :** ஒன்றும் முடியவில்லை! சாகிறேனே!

**பர்த் :** (அவளுடைய கையைப் பிடித்து நாடியைப் பார்த்துக்கொண்டே—தனக்குள்) கடவுளே! கடிதம்! கடிதத்தை அவளுக்குத் தெரியாமலே படித்துவிடுவோம். (நாடியைப் பார்த்தபடியே, கடிதத்தை எடுத்துத் திரும்பிக்கொண்டு படிக்க முயற்சி செய்கிறான்.)

**ரொ :** ஐயோ, பாவி ரொசீன்! ஐயோ! (தனக்குள்) விரும்பத்தகாத ஒன்றை விரும்பித் தெரிந்து கொள்வதில்தான் எத்தனை விருப்பம், நமக்கு!

**பர்த் :** கண்டகண்ட வாசனை போட்டுக்கொண்டால் இப்படித்தான் வலிப்புவரும். (நாற்காலிக்குப் பின்னே கடிதத்தைப் படிக்கிறான், நாடியைப் பார்த்துக்கொண்டே. அண்ணனுடைய கடிதம் என்று தெரிந்து கொள்கிறான். ரொசீன் கொஞ்சம் திரும்பி அவனைப் பார்த்துத் தலையை அசைத்துவிட்டு மறுபடியும் சாய்ந்து கொள்கிறாள்.)

**ரொ :** (பெருமூச்சுடன்) ஐயோ!

**பர்த் :** சரி, சரி, ஒன்றுமில்லை, குழந்தாய், எல்லாம் கொஞ்சம் வாய்வுதான் காரணம். நாடி என்னமோ ஒரே மாதிரிதான் இருக்கிறது. (மேஜைமீதுள்ள ஒரு பாட்டிலை எடுத்துவரப் போகிறான்.)

**ரொ :** (தனக்குள்) சரி, கடிதத்தைத் திரும்ப வைத்துவிட்டான்.

**பர்த் :** ரொசீன் கண்ணே! கொஞ்சம் இந்த மருந்தைச் சாப்பிடு.

**ரொ :** எனக்கு நீங்கள் கொடுக்கும் எதுவும் வேண்டா. ஆளைச் சும்மா விடுங்கள் போதும்!

**பர்த் :** அந்தக் கடிதத்தின் விஷயத்தில் கொஞ்சம் வேகமாக நடந்துகொண்டது உண்மைதான்.

**ரொ :** கடிதத்தின் விஷயத்தில்தானே! நீங்கள் கேட்கும் விதந்தான் எனக்குப் பிடிக்கவில்லை.

**பர்த் :** (மண்டியிட்டபடி) மன்னித்துவிடு! என் குற்றங்களை உணர்ந்துவிட்டேன். இதோ

உன் காலடியில் நான், எல்லாவற்றையும் சரி செய்வதற்கு.

**ரொ :** ஆமாம்! மன்னிக்க வேண்டியதுதான்! கடிதம் என் அண்ணனுடையது அன்று என்று நீங்கள் நினைக்கும்போது.

**பர்த் :** அண்ணனுடையதோ, வேறு எவனுடையதோ! எப்படியானாலும் இப்போது எந்த விளக்கமும் தேவையில்லை.

**ரொ :** (கடிதத்தைக் கொடுத்துக்கொண்டே) இப்போதாவது தெரிந்துகொள்ளுங்கள், கேட்கும் விதத்தில் கேட்டால் என்னிடமிருந்து எதையும் பெறலாமென்று. படியுங்கள்.

**பர்த் :** நான் தெரியாத்தனமாகச் சந்தேகப்பட்டவுடன், நீ இப்படிப் பிடிவாதம் பிடிக்காமல் நடந்திருந்தால், சந்தேகம் அப்போதே தீர்ந்திருக்குமே!

**ரொ :** இதைப் படியுங்கள் ஐயா!

**பர்த் :** பிராயச்சித்தமாக இனிமேல் உன்னை முழுதும் நம்புவேன். அப்பாவி மர்ச்சலினின் காலில் ஏன் அந்தப் பிகாரோ கீறினான் என்று பார்க்கப் போகிறேன். நீயும் கூட வருகிறாயா?

**ரொ :** இதோ ஒரு நொடியில் வருகிறேன்.

**பர்த் :** நமக்குள் சண்டை தீர்ந்துவிட்டதால் கண்ணே! உன் கையைக் கொடு. என்னை மட்டும் நீ நேசித்தால், ஆஹா! எவ்வளவு மகிழ்ச்சியாயிருப்பாய் தெரியுமா!

**ரொ :** *(நாணத்துடன்)* என்னிடம் மட்டும் நல்ல வராக நடந்துகொண்டால், ஆஹா! எப்படி உங்களை நேசிப்பேன், தெரியுமா!

**பர்த் :** நடந்துகொள்கிறேன், நடந்துகொள்கிறேன். கண்டிப்பாக நல்லவனாக நடந்துகொள்கிறேன். *(போகிறான்.)*

## காட்சி 16

*(ரொசீன், போகும் மருத்துவனைப் பார்த்துக் கொண்டே)* ஆஹா! லேன்தோர்! என்னிடம் நல்லவனாக நடந்துகொள்ளப்போகிறானாம்!... கடிதத்தைப் படிப்போம். என்ன கவலை கொடுத்துவிட்டது இந்தக் கடிதம்! *(படித்து, பேசுகிறாள்)* ஆஹா!... காலந்தாழ்ந்து படித்தேன். என் காப்பாளனிடம் வேண்டு மென்றே சண்டை பிடிக்கச் சொல்லியிருக்கிறார். நல்ல தருணம் கிடைத்தது. நழுவ விட்டு விட்டேன். கடிதத்தை வாங்கும்போதே முகம் சிவந்துவிட்டதை உணர்ந்தேன். என் காப்பாளன் சொன்னது உண்மைதான். பெண்கள் எந்த நேரத்திலும் கையாளும் அந்த உலக வழக்கம் என்னிடம் அறவே இல்லையென்று என்னிடம் அடிக்கடி சொல்வான். ஆனால், நேர்மையற்ற மனிதன் ஓர் அப்பாவியைக்கூடத் தந்திர சாலியாக்கிவிடுவான்.

அங்கம் 3

## காட்சி 1

**பாத்திரம் :** *பர்த்தலோ*

**பர்த் :** *(தனிமையில் மனவருத்தத்துடன் காணப் படுகிறான்.)* என்ன, என்ன மோசமான மனநிலை! சற்று முன்தானே அவளுடைய கோபம் தணிந்திருந்தது. பசில் சொல்லிக் கொடுக்கும் பாடத்தை வேண்டாவென்று சொல் வதற்கு எங்கிருந்து வந்தது இவளுக்கு இந்த வெறுப்பு? இவளுக்கு நம்ப ஆள் கலியாண காரியங்களில் கலந்துகொள்வது வேறு தெரிந்து இருக்கிறது...*(கதவை யாரோ தட்டுகிறார்கள்.)* பெண்களைக் கவர எதையும் செய்யத்தான் வேண்டும்...ஏதோ ஒரு சிறு பிழை நேர்ந்தாலும் ...ஒரே ஒரு சிறு பிழை...*(கதவை மறுபடியும் தட்டு கிறார்கள்.)* யாரென்று போய்ப் பார்ப்போம்.

## காட்சி 2

**பாத்திரங்கள் :** *பர்த்தலோ, மிராசுதார் (பாட்டு வாத்தியார் உடையில்)*

**மிரா :** பொங்கும் மங்களம் இங்குத் தங்குக!

**பர்த் :** நல்ல சமயத்தில் வந்த வாழ்த்துதான்! நீ யார்? உனக்கென்ன வேண்டும்?

**மிரா :** ஐயா! என் பெயர் அலோன்சோ, சங்கீத பூஷணப் பட்டம் பெற்ற இளைஞன்.

**பர்த் :** எனக்கு எந்த ஆசிரியரும் தேவையில்லை.

**மிரா :** உங்கள் திருமதி...அவர்கட்குப் பாட்டுச் சொல்லித்தரும் பெருமதிப்புக்குரிய பெரிய கோயில் பாடகர் மேதகு பசில் அவர்களுடைய மாணவன்.

**பர்த் :** பசிலா! பாடகரா! பெருமதிப்புக் குரியவரா! சரி, சரி! இப்போது புரிகிறது.

**மிரா :** (தனக்குள்) ச்சீ, என்ன மனிதன்! (உரக்க) திடீரென்று ஒரு நோய் அவரைப் படுத்த படுக்கையாக்கிவிட்டது.

**பர்த் :** என்ன, படுத்த படுக்கையாக்கிவிட்டதா! பசிலையா! உன்னிடம் சொல்லியனுப்பினாரா? சரிதான், இதோ போய் நானே பார்த்துவிட்டு வருகிறேன்.

**மிரா :** (தனக்குள்) நாசமாய்ப்போக! (உரக்க) படுத்த படுக்கையில் என்றால் ஐயா!...வீட்டை விட்டு வெளிவரமுடியாத நிலை என்று சொல்ல வந்தேன்.

**பர்த் :** அட, எந்த நிலையாயிருந்தாலும் என்ன! போய்த்தான் பார்ப்போமே! நீ முன்னே நட, நான் பின்னே வருகிறேன்.

**மிரா :** (தடுமாற்றத்துடன்) ஐயா! வந்து என்னை... நான் சொல்வதைக் கேட் பாரில்லையா?

**பர்த் :** *(தனக்குள்)* இவன் ஒரு திருட்டுப்பயல்! *(உரக்க)* ஏன் இல்லை, மாயமனிதரே, முடிந்தால் தடுமாற்றமில்லாமல் பேசும்!

**மிரா :** *(தனக்குள்)* கிழப்பயல், நாசமாய்ப் போக! *(உரக்க)* பசில் அவர்கள் என்னிடம் சொல்லியனுப்பியது என்னவென்றால்...

**பர்த் :** உரக்கப் பேசு, எனக்கு ஒரு காது செவிடு.

**மிரா :** *(உரத்த குரலில்)* அப்படியா! சரி, பெரிய சதுக்கத்தில் தங்கியிருக்கும் மிராசுதார் அல்மாவிவா...

**பர்த் :** *(பயந்துபோய்)* ஐயோ! ஐயோ!! மெல்லப் பேசு.

**மிரா :** *(இன்னும் உரத்த குரலில்)* இன்று காலை அங்கிருந்து கிளம்பிவிட்டான். நான்தான் அவருக்கு மிராசுதார் அல்மாவிவா...

**ர்த்ப :** மெதுவாக, மெதுவாகப் பேசுப்பா, தயவு செய்து!

**மிரா :** *(அதே குரலில்)* இந்த ஊரில் இருக்கிறான் என்று சொன்னேன். நான்தான் செல்வி ரொசீன் அவனுக்குக் கடிதம் எழுதியிருப்பதையும் கண்டுபிடித்தேன்.

**பர்த் :** என்ன! கடிதம் எழுதினாளா? தம்பி! தம்பி!! கொஞ்சம் மெதுவாகத்தான் பேசேன். ரொம்ப வேண்டிக்கொள்கிறேன். இதோ பார்! உட்கார்ந்து நண்பர்கள்போல் பேசுவோம். என்ன

சொன்னாய்? ரொசீன் கடிதம் எழுதினாள் என்று நீயா கண்டுபிடித்தாய்?...

**மிரா :** *(கர்வத்துடன்)* நானே தான்! இந்தக் கடிதப் போக்குவரத்தால், உங்களுக்கு ஏதாவது நேர்ந்துவிடுமோ என்று பயந்த பசில், என்னைத் தங்களிடம் அவனுடைய கடிதத்தைக் காட்டும்படி வேண்டிக்கொண்டார். ஆனால் தாங்கள் என்னிடம் நடந்துகொள்ளும் முறை என்னவோ...

**பர்த் :** கடவுளே! முறை என்னவோ, நல்ல முறை தான். கொஞ்சம் மெல்லப் பேச உன்னால் முடியாதா?

**மிரா :** ஒரு காது செவிடு என்று சொன்னீரே!

**பர்த் :** மன்னிக்க வேண்டும், மன்னிக்க வேண்டும் அலோன்சோ அவர்களே! நான் சிறிது முரட்டுத் தனமாகவும், சந்தேகத்துடனும் நடந்து விட்டேன் என் செய்வது? என்னைச் சுற்றிலும் அவ்வளவு சூழ்ச்சிக்காரர்கள்... அவ்வளவு வலைகள்... பிறகு உங்களுடைய தோற்றம், நடை, உடை, வயது... எல்லாமே... மன்னிக்க வேண்டும், மன்னிக்க வேண்டும்! சரி! அந்தக் கடிதம் உங்களிடம் இருக்கிறதா?

**மிரா :** இப்படியல்லவா பேசவேண்டும்! ஐயா, யாராவது ஒட்டுக்கேட்கப் போகிறார்கள்!

**பர்த் :** இங்கு யாருமில்லை. என் பணியாள்கள் அத்தனை பேருக்கும் உடம்பு சரியில்லை.

ரொசீன் கோபத்தில் கதவைப் பூட்டிக்கொண்டு உள்ளே இருக்கிறாள். ஆகாத காலம் வீட்டையே ஆட்டிப்படைக்கிறது. இருந்தாலும் போய்ப் பார்த்து வருகிறேன். (ரொசீனின் அறைக்கதவை மெல்லத் திறக்கிறான்.)

**மிரா :** (தனக்குள்) வேறு வழியில்லாமல் இப்படித் தர்மசங்கடத்தில் மாட்டிக்கொண்டேன். வந்தது வரட்டும் என்று பேசிவிட்டேன். கடிதத்தை நானே வைத்துக்கொள்ள வேண்டுமென்றால், இப்போதே இங்கிருந்து ஓடிவிட வேண்டும்! அட! ஏன்தான் இங்கு வந்தேனோ? கிழவனுக்குக் கடிதத்தைக் காட்டலாமா?... இந்தச் செய்தியை ரொசீனுக்குத் தெரிவிக்க முடிந்து கடிதத்தையும் காட்டுவதென்பதே சாதுரியம்.

**பர்த் :** (மெல்ல அடியெடுத்து நடந்து, திரும்பி வருகிறான்.) முதுகைக் கதவுப்பக்கம் திருப்பிக் கொண்டு, சன்னலருகே உட்கார்ந்திருக்கிறாள். இராணுவத்திலுள்ள தன் அண்ணனின் கடிதத்தைப் படித்துக் கொண்டிருக்கிறாள். அதை நான் முன்பே பிரித்துப் படித்துவிட்டேன். இப்போது அவள் எழுதின கடிதத்தைப் படிப்போமா?

**மிரா :** (ரொசீன் எழுதின கடிதத்தைக் கொடுக்கிறான்.) இதோ! (தனக்குள்) அவள் படிப்பது என் கடிதத்தைத்தான்!

**பர்த் :** *(படிக்கிறான்)* உங்களுடைய பெயரையும்... நீங்கள் யாரென்பதைப் பார்த்துத் தெரிந்த பிறகு... ஆஹா! துரோகி! இது அவள் எழுத்தே தான்!

**மிரா :** *(பயத்துடன்)* இப்போது நீங்கள் கொஞ்சம் மெதுவாகப் பேசுங்களேன்.

**பர்த் :** அடாடா, என்ன கடமைப்பற்று, என் அன்பு நண்பரே!

**மிரா :** காரியம் முடிந்த பிறகு எனக்குத் தகுந்த கைம்மாறு செய்வது தங்கள் பொறுப்பு. பசில் அவர்கள் தற்போது ஒரு சட்ட வல்லுநருடன் செயல்படுவது...

**பர்த் :** என்ன சட்ட வல்லுநருடனா? என் திருமணத்திற்காகவா?

**மிரா :** இல்லையென்றால், வீணே தங்களுக்குத் தொந்தரவு கொடுத்திருப்பேனா? நாளை எல்லாக் காரியங்களும் ஆயத்தமாய் இருக்கும் என்று சொல்லிவரச் சொன்னார். அவள் மட்டும் பிடிவாதம் பிடித்தால்...

**பர்த் :** பிடிவாதந்தான் பிடிப்பாள்!

**மிரா :** *(கடிதத்தைப் பிடுங்கிக்கொள்ளப் பார்க்கிறான். பர்த்தலோ கெட்டியாகப் பிடித்துக் கொள்கிறான்.)* நான் இருக்கிறேன் தங்கள் உதவிக்கு. முதலில் அவளிடம் கடிதத்தைக் காட்டுவோம். பிறகு *(அதிகச் சிந்தனையுடன்)* அவசியம் ஏற்பட்டால் மிராசுதார் ஒரு

பெண்ணிடம் இந்தக் கடிதத்தை அர்ப்பணித்த தாகவும் அவள் இதை என்னிடம் கொடுத்த தாகவும் சொல்வேன். குழப்பம், வெட்கம், காதலில் ஏற்பட்ட தோல்வி எல்லாமே அவளை ஒரு வழியாக்கிவிடும்!

**பர்த் :** *(சிரித்துக்கொண்டே)* அட, அவதூறு பேசுவதா! ஆருயிர் நண்பரே! இப்போது தெரிகிறது ஐயா! நீர் பசில் அனுப்பின ஆளேதான் என்று! சரி, இதில் ஏதோ கபடு இருக்கிறது என்று தெரியாமலிருக்க உனக்கு அவளை அறிமுகப்படுத்துவது நல்லதல்லவா?

**மிரா :** *(மகிழ்ச்சியை வெளிக்காட்டாமல்)* பசில் அவர்கள்கூட அப்படித்தான் சொன்னார். இப்போது என்ன செய்வது! இரவு நெருங்கு கிறது. இருப்பதோ கொஞ்ச நேரம்...

**பர்த் :** நீர் பாட்டு வாத்தியாருக்குப் பதில் வருகிறீர் என்று அவளிடம் சொல்கிறேன். ஒரு நல்ல பாட்டுச் சொல்லிக் கொடுக்கக் கூடாதா?

**மிரா :** தங்கள் சித்தம் என் பாக்கியம். ஆனால், 'பாட்டு வாத்தியாருக்குப் பதில்' வருங் கதைகள் எல்லாம் காலங் கடந்தவை, நகைச்சுவை நாடகக் கைவண்ணங்கள் என்பதை மறந்து விடக்கூடாது. அவள் சந்தேகப்பட்டால்?...

**பர்த் :** நான் அறிமுகப்படுத்தினாலா சந்தேகப் படுவாள். மேலும் நீர் மாறுவேடத்தில் வந்த

காதல் மன்னனாக அல்லவா காட்சியளிக்கிறீர், பணிசெய்ய வந்த பங்காளனாக அல்லவே!

**மிரா :** அப்படியா? என் தோற்றத்தால் அவளை ஏமாற்ற முடியுமென்று நினைக்கிறீரா?

**பர்த் :** ஏன் முடியாது? ஏமாற்றுவித்தைக் காரனிடமே பந்தயம்கட்டத் தயார். இன்று மாலை அவள் கோபக் கனலாகத் தகிக்கிறாள். ஆனால், உன்னைப் பார்த்தமாத்திரத்தில்...சரி, அறையில் இருக்கிறது அவளுடைய வாத்தியக் கருவி. இனிதே பொழுது கழியட்டும். எப்படி யாவது அவளை அழைத்து வருகிறேன்.

**மிரா :** ஜாக்கிரதை! கடிதத்தைப்பற்றி அவளிடம் பேசிவிடாதீர்...

**பர்த் :** சமயம் வரும் முன்னதாகவா? காரியம் கெட்டுவிடுமே! திரும்பத் திரும்ப என்னிடம் ஒன்றைப்பற்றிப் பேசக்கூடாது. திரும்பத் திரும்பப் பேசக்கூடாது. (வெளியேறுகிறான்.)

## காட்சி 3

**பாத்திரம் :** மிராசுதார்

**மிரா :** (தனிமையில்) அப்பாடா, பிழைத்தேன்! எவ்வளவு தொல்லைப்பட்டுவிட்டேன், இந்தக் கட்டையில் போகும் கிழவனிடம்! பிகாரோ ஆளைச் சரியாகத்தான் எடைபோட்டு வைத்

திருக்கின்றான்! என் பொய்யே என்னைக் காட்டிக்கொடுத்திருக்கும்! தர்மசங்கடமான! இக்கட்டான ஒரு சூழ்நிலை. கிழவனுக்கு எல்லாவற்றின் மேலும் ஒரு கண். நல்ல காலம் கடிதம் கை கொடுத்து உதவியது. இல்லையென்றால் முட்டாள் என்ற பட்டத் துடன் முட்டித் தள்ளியிருப்பார்கள், வெளியே! கடவுளே! வேறு ஒரு புதிய பிரச்சினை இப்பொழுது கிளம்பியுள்ளது. அவள் அறையை விட்டு வெளியே வர மறுத்துவிட்டால் என்ன செய்வது? ஒட்டுக்கேட்போம்... அட! வெளியே வர மறுக்கிறாள்...நம் தந்திரம் தவிடுபொடி தான்! (மறுபடியும் ஒட்டுக்கேட்கிறான்)... இதோ வருகிறாள்! அவள் உடனே பார்த்து விடக் கூடாது. (பாட்டு அறைக்குள் நுழைந்து விடுகிறான்.)

## காட்சி 4

**பாத்திரங்கள் :** *மிராசுதார், ரொசீன், பர்த்தலோ*

**ரொ :** *(பொய்க்கோபத்துடன்)* நீங்கள், என்ன சொன்னாலும் கேட்கப்போவதில்லை, ஐயா! முடிவு எடுத்துவிட்டேன், சங்கீதத்தைப் பற்றியே பேச்செடுக்கவேண்டா.

**பர்த் :** கேளு கண்ணே! அலோன்சோ அவர்கள் பசிலுடைய மாணவர். நமக்கு அவர் ஒரு சாட்சியாகக்கூட இருப்பார்... சங்கீதம்

உன்னைச் சாந்தப்படுத்தும், இதில் சந்தேக மில்லை!

**ரோ :** ஓ! அப்படியா செய்தி! அதுமட்டுந்தான் முடியாது. இன்று மாலை பாடவேண்டுமாம்! எங்கே ஐயா, நீங்கள் திருப்பி அனுப்ப விரும்பாத ஆள்? ஒரு நொடியில் கணக்கைத் தீர்த்துவிடுகிறேன், பசிலுக்கும் சேர்த்து! (காதலனைக் கண்டு திடுக்கிட்டுக் கூச்சலிடு கிறாள்.) ஆஹா!

**பர்த் :** என்ன? என்ன?

**ரோ :** (தடுமாற்றதுடன் இரு கைகளையும் மார் பின்மேல் வைத்துக்கொண்டு) ஆ! கடவுளே! ஐயோ!... ஆ! கடவுளே!...

**பர்த் :** மறுபடியும் இவளுக்கு உடம்பு சரியில்லை! அலோன்சோ அவர்களே!

**ரோ :** உடம்புக்கு ஒன்றுமில்லை... (திரும்பிப் பார்க்கும்போது)... ஆ!... ஆ!...

**மிரா :** என்ன கால் சுளுக்கிக்கொண்டதா, அம்மா?

**ரோ :** ஆமாம்! ஆமாம்!! கால்தான் சுளுக்கிக் கொண்டது. ஒரே வலியாய் வலிக்கிறதே!

**மிரா :** அதுதான் பார்த்தாலே தெரிகிறதே!

**ரோ :** (மிராசுதாரை நோக்கி) இதயத்தில் அல்லவா வலிக்கிறது!

**பர்த் :** ஒரு நாற்காலி, ஒரு நாற்காலி கொண்டு வாருங்கள். ஒரு நாற்காலி கூடவா இங்கில்லை? (நாற்காலியை எடுத்துவரப்போகிறான்.)

**மிரா :** *ஆஹா! ரொசீன்!*

**ரொ :** *எத்தகைய அஜாக்கிரதை!*

**மிரா :** *ஆயிரமாயிரம் செய்திகள் இருக்கின்றன உன்னிடம் சொல்ல!*

**ரொ :** *கிழவன் நம்மைவிட்டு அகலவே மாட்டான்.*

**மிரா :** *பிகாரோ நமக்கு உதவிசெய்ய வருவான்.*

**பர்த் :** *(ஒரு நாற்காலி கொண்டுவருகிறான்.) இதோ, கண்ணே! இதில் உட்கார். இன்று மாலை பாடம் பயில அவளால் முடியாதென்று எனக்குப் படுகிறது. மற்றொரு நாள் பார்த்துக் கொள்வோம், போய் வாருங்கள், வாத்தியாரே!*

**ரொ :** *(மிராசுதாரிடம்) இல்லை, போகாதீர்! இப்போது வலி கொஞ்சம் தேவலாம். (பர்த்தலோவிடம்) நான் சொன்னது தவறு என்று நினைக்கிறேன் ஐயா! இனி உங்கள் சொற்படி கேட்கிறேன். அதையும் இப்போதிருந்தே தொடங்கிவிடுகிறேன்.*

**பர்த் :** *ஓஹோ! அப்படியா? இந்த மங்கையரின் மனமே மனம்! ஆனால் கண்ணே, இத்தகைய ஒரு வலிக்குப் பிறகு, நீ கொஞ்சமும் உடம்பை அலட்டிக்கொள்ள நான் அனுமதிக்கமாட்டேன். போய்வாருங்கள், வாத்தியாரே! போய் வாருங்கள்!*

**ரோ :** *கொஞ்சம் பொறுங்கள்! (பர்த்தலோவிடம்) தங்கள் சொற்படி பாட மறுத்ததற்கு வருத்தம் தெரிவிக்கும்பொருட்டு இப்போது பாட விரும்புகிறேன். தாங்கள் விரும்பாவிடில் என்மேல் தங்களுக்கு அன்பில்லை என்று நினைத்துக் கொள்வேன், ஐயா!*

**மிரா :** *(பர்த்தலோவிடம் தனியாக) என் பேச்சைக் கேட்டுக் கொஞ்சம் விட்டுக்கொடுங்கள், ஐயா!*

**பர்த் :** *அப்படியே ஆகட்டும்! உன் பாடம் முடியும் வரை உன் அருகிலேயே இருந்து உன் பாட்டை இரசிக்கிறேன், என் ஆசை கொள்ளும் ஆரணங்கே!*

**ரோ :** *வேண்டா, ஐயா! இசையில்தான் தங்களுக்கு ஈடுபாடில்லை என்று எனக்குத் தெரியுமே!*

**பர்த் :** *பரவாயில்லை! இன்று மாலை நீ பாடுவது எனக்குத் தேவகானமாயிருக்கும்.*

**ரோ :** *(மிராசுதாரிடம் தனியாக) என்ன வேதனை! என்ன வேதனை!!*

**மிரா :** *(மேசைமீதுள்ள ஒரு பாட்டுத் தாளை எடுத்துக்கொண்டு) இதைத்தானே பாட விரும்புகிறீர்கள், அம்மா?*

[***ரோ :** *ஆமாம் திரு... அவர்களே!*

---

* ஐந்து அங்க மூலநாடகத்தில் இந்தப் பகுதி சேர்க்கப் பட்டிருக்கிறது. இது மிகவும் சுவாரசியமான இரசிக்கத்தக்க பகுதி என்பதால் இதன் தமிழாக்கமும் இவண் தரப்பட்டுள்ளது.

**மிரா :** 'பலேசோ' என்பது என் பெயர். தங்கள் கட்டளை என் பாக்கியம்.

**பர்த் :** என்ன 'பலேசோ' என்கிறாய்? இந்தப் பெயரா முன்பு என்னிடம் சொன்னாய்?

**மிரா :** *(சங்கடத்துடன் தனக்குள்)* மாட்டிக் கொண்டேனே! *(உரக்க)* உண்மைதான்... வந்து...நான் வரும்போது...என்னை நீங்கள் வரவேற்ற விதத்திலேயே நானே அதை மறந்து விட்டேன்.

**பர்த் :** எதை? உன் சொந்தப் பெயரைக் கூடவா?

**மிரா :** அடடே! மறக்கவில்லை... மறந்துவிட்டது என்னவென்றால் *(ரொசீன் அவனிடம் இரண்டு விரல்களைக் காட்டுகிறாள்.)* எனக்கு இரண்டு பெயர்கள் உண்டு என்று சொல்ல.

**பர்த் :** அப்படியென்றால் உன் பெயர் பலேசோ?...

**மிரா :** ஆம் பலேசோதான் — மற்றொரு பெயர்... அதைத்தான் சொன்னேனே!

**ரொ :** அலோன்சோ அவர்களே! இந்த மர்மப் பெயர் மாற்றங்கள் எனக்காகத்தான் என்றால் என் காப்பாளரிடம், என் முன்னே, உங்களைப் பெயரிட்டு அழைக்க வேண்டாவென்று சொல்லியிருக்க வேண்டும்...

**மிரா :** உண்மையில், அம்மா! ஒரு கடமை என்னைக் கட்டுப்படுத்துகிறது. எதற்கும் பயப் படாதீர்கள்.

**பர்த் :** *ஆஹா! அலோன்சோ அல்லது பலேசோ அவர்களே! நீங்கள் சொல்லும் ஒரு சொல்கூட உங்களுக்கே புரியவில்லைபோலும்! மேலும் எங்களிடம் பேசும்போது உங்கள் முகம் வேறு மாறிவிடுகிறது. இவையெல்லாம் எனக்குப் புரியாமலா இருக்கிறது?*

**மிரா :** *(மருத்துவரைத் தனியாக அழைத்து) நீங்கள் சொல்வது சரிதான், ஐயா! உண்மையில் எனக்கு முகந்தான் மாறிவிடுகிறது. பொய் சிறியது என்றாலும், எத்தனை நேரந்தான் என்னால் நடிக்க முடியும்? இதற்குக் கொஞ்சம் காரணம் நீங்களும், பசிலும்தானே!*

**பர்த் :** *என்ன, நானா? எப்படி என்று விளக்கும்.*

**மிரா :** *(ரொசீனிடம்) மன்னிக்கவேண்டும், அம்மா! எங்களுக்குள் பேசும் இரகசியத்தால் உங்களுக்கு ஒன்றும் தீங்கில்லை. (மருத்துவரிடம் தனியாக) விளக்கவா வேண்டும்? என் பெயர் அலோன் சோவுமில்லை, பலேசோவுமில்லை!*

**பர்த் :** *என்னை என்ன ஏமாளி என்று நினைக் கிறீரா? அப்போதே புரிந்துகொண்டேன்.*

**மிரா :** *பசில் அந்தக் கடிதத்தை உங்களிடம் கொடுக்கச்சொன்னபோதே!*

**பர்த் :** *(மிராசுதாரைத் தன் அருகே இழுத்துக் கொண்டு) மெதுவாகப் பேசுங்கள்.*

**மிரா :** *மருத்துவரிடம் போகும்போது குட்டு வெளிப்படாமல் இருக்க அலோன்சோ என்று*

பெயரைச் சொல் என்றார், சொன்னேன். பொய்தான் எப்போதும் பிசுபிசுத்துவிடுமே! அம்மாவிடம், வாயில் வந்த வேறு ஒரு பெயரைச் சொல்லிவிட்டேன். ஆனால் நீங்கள் ஒரு வழியில் முன்யோசனை யில்லாமலும், மன்னிக்கவேண்டும், மற்றொரு வழியில் விவேக மாகவும் பிதற்றியது என்னை அவ்வளவு தடுமாறச் செய்துவிட்டது, புரிகிறதா?

**பர்த் :** இப்போது புரிகிறது, இப்போது புரிகிறது! என்மேல்தான் தவறு.

**மிரா :** என் உண்மைப் பெயரோ மிக மிக நீளம். தோன் அந்தோனியோ தேகஸ்கா தேலோஸ் ரிஒஸ் இபுய்யான்த், இமார், இ ஒத்ரா அகுய்அ*.

**பர்த் :** தவறு என்மேல்தான்.

**மிரா :** என் பெயரைச் சுருக்கிக் 'கஸ்காரியோ' என்று கூப்பிடுங்கள்.

**பர்த் :** கஸ்காரியோவா? அது போதும். தவறு என் மேல்தான்.

**மிரா :** (தனக்குள்) இந்தப் பெயரை மறக்கவே மாட்டேன். இது என் பணியாளனின் பெயர்.

**பர்த் :** (ரொசீனிடம் உரக்க) உண்மையைச் சொல்லப்போனால், என் கண்ணே! நான் செய்ததுதான் தவறு, மிகப் பெரிய தவறு. பல

---

* Don Antonio de Casca de los Rios, y Fuentes, y Mare,y autras aguas.

முக்கியக் காரணங்களால் வாத்தியார்தான் உண்மைப் பெயரை மறைக்க வேண்டி இருந்தது. நானோ மடத்தனமாக...

**மிரா :** படவேண்டியது எல்லாம் பட்டாகிவிட்டதே!

**ரொ :** பெயரைப்பற்றிக் கவலையில்லை. என் பாடம் சரிவர நடந்தால் போதும்!

**பர்த் :** இவள் சொல்லுவதுதான் சரி, பாடத்தைத் தொடங்குங்கள், வாத்தியாரே!...

**ரொ :** (பாட்டுத்தாளைக் காட்டிக்கொண்டே) இது வீண் பாதுகாப்பின் ஓர் இன்னிசை.]

**ரொ :** ஆமாம் 'வீண் பாதுகாப்பு' என்று ஓர் இன்னிசை.

**பர்த் :** எப்போதுமே இந்த 'வீண் பாதுகாப்பு' தானா?

**மிரா :** அதுதான் இப்போது புதிதாக வந்திருக்கிறது. இளவேனிலைப்பற்றியது—சிறிது விறுவிறுப்பாக இருக்கும், புதிய படைப்பு. இதை அம்மா பயில நினைத்தால்...

**ரொ :** (மிராசுதாரைப் பார்த்துக்கொண்டே) பயில எனக்குக் கொள்ளை ஆசை. இளவேனிற் காட்சி என்னைக் கவர்கிறது. இதுவே இயற்கையின் இளமைப் பருவம். குளிர்காலத்திற்குப் பிறகு இதயத்தில் ஒரு புத்துணர்ச்சி புகும் உணர்வு, நீண்டநாள் அடைபட்டுக்கிடந்த ஓர் அடிமை விடுதலைப் பேரின்பத்தில் இன்புறுவதுபோல்!

**பர்த் :** *(மிராசுதாரிடம் மெல்லிய குரலில்) எப்போதுமே இந்தச் சாகச எண்ணங்கள்தாம் இவளுக்கு!*

**மிரா :** *(மெல்லிய குரலில்) இதன் உட்பொருள் விளங்குகிறதா?*

**பர்த் :** *பாழாய்ப்போக! (ரொசீன் அமர்ந்திருந்த நாற்காலியில் அமர்கிறான்.)*

**ரொ :** *(பாடுகிறாள்.)*

**காதலர் களிக்கும் கவினிள வேனிலைக்**
**காதலர்க்(கு) அளிக்கும் காதல் தானே**
**பூதலந் தன்னில் வசந்தந் தன்னைப்**
**பூக்கச் செய்யும் அதுபொழு தாங்கே.**

**பொலிவாம் புதுக்கூனல் வாழ்க்கையில் அமைக்கும்**
**வாலிப மனத்தில் வளர்தணல் கிளப்பும்.**
**மலைச்சரிவில் துள்ளிடும் குட்டிக்குரல் கேட்கும்.**
**மந்தைகள் பட்டியில்இருந்து விடுபட் டோடும்.**

**எல்லா உயிர்களும் எழிலுற விளங்கும்**
**எங்கும் ஊக்கம் எதிலும் ஊக்கம்**
**பல்வகை மலர்களும் பாங்குடன் மலர்ந்தன**
**பழகிய நாய்கள் மந்தையைக் காக்கும்.**

**இப்படி அனைத்தும் செவ்வண்ணம் இருக்க**
**எழிலுடை மங்கை தருமின்பத் திருக்காதல்**
**கைப்பிடி தன்னில் கட்டுண்ட இன்பக்**
**களிப்பில் மூழ்குவன் லேன்தோர் தானே!**

**காத்திருக்கும் காதலனைக் காண்பதற் கென்றே**
**கன்னியவள் அன்னை தனைப்பிரிந்(து) இன்றே**
**பாட்டிசைத்துச் செல்லுகின்றாள் தன்னிலை தடுமாறிப்**
**படுகின்ற பாடெதுவும் பாட்டதனால், தீர்ந்திடுமோ?**

பண்ணிசைக்குங் குழலும் பறவையினப் பாட்டும்
பதினாலும் நிறையாப் பருவத்தள் ஆகிவிட்ட
பெண்ணின் பொலிவும் புதுக்கிளர்ச்சி ஊட்டிவரப்
பேதைஅவள் மருளுகின்றாள் புத்துணர்ச்சி
பெற்றிங்கே.

தன்னிடத்தில் இருந்தபடி லேன்தோர் தானும்
தனிமையில் வரும்அவ ளுக்கென்றே காத்திருந்தான்.
கன்னியவள் அசைந்துவரக் காளையவன்
தொடர்ந்துவர
கட்டுண்டார் இருவருமே காதலின் அணைப்பினிலே.

*(பாட்டைக் கேட்டுக்கொண்டே பர்த்தலோ சிறிது உறங்கிவிடுகிறான். மிராசுதார் ரொசீன் கையிலே முத்தமிடும்போது அவளால் பாட முடியாமல் பாட்டு நின்றுவிடுகிறது. பர்த்தலோ விழித்து எழுகிறான். பாட்டு மறுபடியும் தொடங்குகிறது. இப்படியே சில தடவைகள் இக் காட்சி நடைபெறுகிறது.)*

பொங்கிவரும் புதுச்சுவையில் பாவையவள்
மூழ்கிடினும்
பெருக்குகிறாள் பொய்க்கோபம் புரியாதோ
காரணமும்
அங்கவனின் அன்பணைப்பால் அவள்தன்னின்
பொய்க்கோபம்
அகன்றிடவே வேண்டுமென விரும்புவதும்
அவள்தானே.

மங்கையவள் மனத்தகத்தே மண்டுகின்ற
பொய்க்கோபம்
மாற்றத்தான் யுக்திகளும் எத்தனையோ
எத்தனையோ

**பொங்கிச்சுடும் பெருமூச்சு மயக்குமொழி வாக்குறுதி**
**பிரிவின்பம் அணைப்புஇவற் றாலூடல் ஓடிடுமே!**
**அழுக்காறு கொண்டவர்கள் இனியஇப் பேற்றுக்கு**
**இடர்விளைத் தால்நந்தம் காதலர் தம்இன்ப**
**எழுச்சி தன்னைமறைப் பாரே, காதலில்**
**இடுக்கண்ணால் இன்பந் தானே பொங்குமன்றோ!**

**மிரா :** *இது ஒரு நல்ல பாட்டு. அம்மா எவ்வளவு இனிமையாகப் பாடுகிறார்கள் தெரியுமா?*

**ரொ :** *மிகைப்படுத்திக் கூறுகிறீர்கள். ஐயா! புகழ் முழுதும் தங்களுடையதே!*

**பர்த் :** *(கொட்டாவி விட்டுக்கொண்டே) பாட்டுப் பாடும்போது நான் சிறிது உறங்கிவிட்டேன் என்று நினைக்கிறேன். நோயாளிகள் தொந் தரவு அதிகம். இப்படியும் அப்படியுமாக நடக்கவேண்டியிருக்கிறது. பம்பரமாகச் சுழல வேண்டியிருக்கிறது. உட்கார்ந்த உடனேயே... என்னுடைய கால்கள்...(எழுந்து நாற்காலியை நகர்த்துகிறான்.)*

**ரொ :** *(மிராசுதாரிடம் மெல்லிய குரலில்) இன்னும் பிகாரோவைக் காணவில்லையே!*

**மிரா :** *காலத்தைக் கடத்துவோம்.*

**பர்த் :** *ஐயா! வாத்தியாரே! அதிகம் இன்பம் பயக்கும் சிறிய பாடல்களாகச் சொல்லிக் கொடுக்கும்படி அந்தக் கிழப் பசிலிடம் சொல்லி யிருந்தேன். இத்தகைய பெரிய கீர்த்தனைகள் ஏறியும், இறங்கியும் ஆ...ஆ...ஊ...ஊ...என்று*

முழங்குவது சவஅடக்கப் பாடலாக எனக்குப் படுகிறது. என் இளவயதில் பாடுவார்களே அத்தகைய சிறிய சிறிய இராகங்கள், மனத்தில் எளிதாகப் பதிபவை. யார் இப்போது பாடுகிறார்கள்? அந்தக் காலத்திலேயே எனக்குக் கைவந்தவை... உதாரணமாக... (பின்னணி இசையின் ஆரம்பத்தில், நினைவு கூரும் வகையில் தலையைச் சொறிந்து கொண்டும், விரல்களைச் சொடுக்கிக் கொண்டும், நின்றபடியே கிழவர்களைப்போல ஆடிக்கொண்டும் பாடுகிறான்.)

**கடைவீதிகளில் என் ரொசீன் கண்ணே**
**காதல் கோமகன் கிடைப்பானா பெண்ணே?**

(மிராசுதாரிடம் சிரித்தபடியே) பாட்டிலே காரிகை என்று வருகிறது. நான்தான் அழகாகச் சந்தர்ப்பப்பொருத்தமாக இருக்கு மென்று நினைத்து ரொசீன் என்று போட்டேன். ஆஹா! ஆஹா! நன்றாக இருக்கிறது, இல்லையா? ஊஹா ஹா!

**மிரா :** (சிரித்தபடியே) பிரமாதம்! பிரமாதம்!!

## காட்சி 5

**பாத்திரங்கள் :** ரொசீன், பர்த்தலோ, மிராசுதார்

(அரங்கின் ஒரு கோடியில் பர்த்தலோ பாடுகிறான்.)

**கடை வீதிகளில் என் ரொசீன் கண்ணே**
**காதல் கோமகன் கிடைப்பானா பெண்ணே?**

**காதல் கோமகன் நானோ அல்லேன்!**
**காண்பாய் நீயே! காரிருள் தன்னிலும்.**
**மாண்பெனக்கு உண்டே மண்டிய இருளில்**
**கவின்மிகு பூனையும் கறுப்பாய்த் தோன்றுமே!**

*(பாட்டை மறுபடியும் பாடிக்கொண்டே ஆடு கிறான். பிகாரோ, பின்புறத்தில் இருந்த படியே அவன் செய்வதுபோல் பாவனை செய் கிறான்.)*

**காதல் கோமகன் நானோ அல்லேன்!**

*(பிகாரோவைப் பார்த்துவிட்டு) ஆஹா! வாருங்கள் முடிதிருத்துவோரே! வாருங்கள்! படு ஜோராயிருக்கிறீரே!*

**பிகா :** *(வணங்குகிறான்) ஐயா! இப்படித்தான் என் தாயார் அடிக்கடி அந்தக் காலத்தில் சொல்வார்கள். ஆனால் இப்போது பழைய ஜோரெல்லாம் பறந்தோடியது.... (மிராசு தாரிடம் தனியே) பலே, பலே, ஐயா! (இந்தக் காட்சியின்போது, மிராசுதார் தன்னால் இயன்றவரை ரொசீனிடம் பேசமுயலுகிறான். கிழவனோ கண்கொட்டாமல் கவனித்துக் கொண்டிருக்கிறான். இதனால் பிகாரோவும் பர்த்தலோவும் தவிர்த்து ஏனைய நடிகருக்குள் ஓர் ஊமை நடிப்பு ஏற்படுகிறது.)*

**பர்த் :** *வீட்டிலுள்ள அனைவரையும் கீறி, தூக்க மருந்தும், வயிற்றுப்போக்கு மருந்தும் கொடுக் கவா இங்கு வருகிறீர்?*

**பிகா :** தினமுமா திருவிழா, ஐயா! ஐயா, பார்த் திருப்பதைப்போலத் தினமும் அவர்களுக்குப் பணிசெய்து கிடப்பதே என் பணியாகிவிட்டது. தேவைப்பட்டால் தேடிவரத் தேவையில்லை என் சேவைக்கு.

**பர்த் :** தேடிவரத் தேவையில்லையா? ஐயா, பணி செய்து கிடப்பவரே! விழித்துக்கொண்டே தூங்கி வழியும் அந்த அப்பாவியிடமும் மூன்று மணிநேரமாக மண்டையைப் பிளந்து மூளை வெடிக்கும்படி தும்முகிறானே அவனிடமும் என்ன ஐயா, சொல்லப் போகிறீர்?

**பிகா :** என்ன சொல்லப் போகிறேனா?

**பர்த் :** ஆமாம்.

**பிகா :** அட! இதில் என்ன சங்கடம்! தும்முகிற வனிடம் போய் 'நீ வாழ்க' என்றும், தூங்கி விழுபவனிடம் போய் 'நீ போய்த் தூங்கு தம்பி' என்றும் சொல்வேன். அப்படிச் சொன்னால் உங்கள் கணக்கா ஏறிப்போய்விடும், ஐயா!

**பர்த் :** கணக்குத் தானாக ஏறிப்போகாதுதான்; ஆனால் கீறிவிட்டது, மருந்து கொடுத்தது இவை கணக்கை ஏற்றிவிடும். அப்படித்தானே? பணி செய்து கிடக்கவா என் கழுதையின் கண்களில் கட்டுக் கட்டினீர்? கெட்டுப்போன பார்வை திரும்பி வந்துவிடுமா?

**பிகா :** போன பார்வை திரும்பி வராவிட்டாலும், கட்டுக் கட்டினது அதன் பார்வையைப் பறித்து விடுமா?

**பர்த் :** நீ எனக்குக் கணக்குக் காட்டும்போது கவனித்துக்கொள்ளுகிறேன்...ச்சீ! இதெல்லாம் என்ன திமிரான பேச்சு!

**பிகா :** உண்மையைச் சொல்லப்போனால், மடத் தனத்தையோ, பைத்தியக்காரத்தனத்தையோ தான் வரவேற்கிறார்கள் மக்கள். கால்காசு கிடைக்காவிடினும் சேவை செய்வதில் மகிழ்ச்சி அடைகிறேன், நான்! எங்கும் மகிழ்ச்சி பொங்குக! நாளை யார் நிலைத்திருப்பர் இந் நானிலத்தில்?

**பர்த் :** ஐயா, தத்துவ மேதையே! எனக்குச் சேர வேண்டிய அசலையும் வட்டியையும் செலுத்தி விட்டு மறுவேலை பாரும். கண்டிப்பாகச் சொல்கிறேன்.

**பிகா :** என்மேல் நம்பிக்கையில்லையா, ஐயா? நூறு வராகன்தானே? ஒரு நொடியில், வாங்க வில்லை என்று சொல்லிவிடுவதைவிட, வாங்கினேன், வாங்கினேன் என்று வாழ்நாள் முழுதும் வாயாரச் சொல்லிக்கொண்டிருக்க விரும்புகிறேன்.

**பர்த் :** சரி! உன் மகள் நீ கொடுத்த மிட்டாயைப் பற்றி என்ன சொன்னாள் என்று கொஞ்சம் சொல்லேன்!

**பிகா :** எந்த மிட்டாய்? என்ன சொல்கிறீர்?

**பர்த் :** அதான் இன்று காலை கடிதச் சுவடித் தாளில் மடித்துக் கொடுத்த மிட்டாய்.

**பிகா :** இதென்ன பிதற்றல்! நான் ஒன்றும்...

**ரொ :** (குறுக்கே பேசி) என்ன! நான்தான் கொடுத் தனுப்பினேன் என்றாவது சொன்னீரா, ஐயா! அப்படிச் சொல்லச் சொன்னேனே!

**பிகா :** அடடே! மறந்தேவிட்டேன். காலையில் அனுப்பின மிட்டாயா? என்ன முட்டாள் நான்! அடியோடு மறந்துவிட்டேன்...ஓஹோ! படுஜோர்! படுஜோர்! பிரமாதம், அம்மா!

**பர்த் :** படுஜோராம்! பிரமாதமாம்! ஆமாம், உண்மைதான் ஐயா, முடிதிருத்துநரே! செய்த தற்குப் பிராயச்சித்தம் தேடும், ஐயா! நல்ல வேலைதான் செய்கிறீர், நல்ல வேலை!

**பிகா :** என்ன! என்ன செய்துவிட்டேன், ஐயா?

**பர்த் :** நல்ல பெயர்கூட வாங்கிக்கொள்வீர், ஐயா!

**பிகா :** வந்தால் வாங்கிக்கொள்கிறேன், ஐயா!

**பர்த் :** வாங்கத்தான் போகிறேன் என்று சொல்லும், ஐயா!

**பிகா :** அப்படியே நடக்கட்டும், உங்கள் விருப்பம் போல, ஐயா!

**பர்த் :** என்ன திமிர்! என்ன திமிர்!! நான் ஒரு முட்டாளுடன் சண்டை போட்டால் விட்டுக் கொடுக்கவே மாட்டேன், ஐயா!

**பிகா :** (அவன் பக்கம் முதுகைத் திருப்பி) நான் அப்படி அல்லேன், எப்போதுமே விட்டுக் கொடுத்துவிடுவேன்!

**பர்த் :** *பார்த்தீரா, பார்த்தீரா! வாத்தியாரே! என்ன சொல்கிறான் என்று!*

**பிகா :** கத்தியை மட்டும் தீட்டும் நாட்டுப்புற முடிதிருத்துவோன் என்ற நினைப்போ, புத்தியைத் தீட்டும் எழுத்தாளனாகவும் இருந்திருக்கிறேன். மதிரித்தில் இந்தப் பொறாமை பிடித்தோர் மட்டும் இல்லையென்றால்...

**பர்த் :** அட! பின் ஏன் இப்படி வேலையை மாற்றிக் கொண்டு வந்துவிட்டீர்!

**பிகா :** முடிந்ததைச் செய்யத்தான்... என் நிலையில் நீங்களும் இருந்தால்...

**பர்த் :** உன் நிலையில் நானா?... நன்றாகத் தானிருக்கும்! ம ட த் த ன ம ா க ப் பேசிக் கொண்டிருப்பேனாக்கும்.

**பிகா :** அதைத்தானே இவ்வளவு நேரம் செய்து கொண்டிருக்கிறீர்! ப க ற் க ன வு கண்டு கொண்டிருக்கும் உங்கள் சகாவைக் கேளுங்கள், சொல்வார்.

**மிரா :** (திடுக்கிட்டு) இவர் என் சகா அல்லர்!

**பிகா :** இவருடன் காரியமிருக்கும் உங்களைப் பார்த்ததும், உங்களுக்கும் இவருக்கும் ஒரே வேலைதான் என்று நினைத்துவிட்டேன்!

**பர்த் :** (கோபத்துடன்) சரி சரி, வந்த செய்தியைச் சொல். அம்மாவிடம் இன்று மாலைகூட ஏதாவது கடிதம் கொடுக்க வேண்டுமா? பேசு ஐயா! நான் இங்கிருந்து போய்விடவா?

**பிகா :** ஏழைகளை எப்படி ஐயா, ஏசுகிறீர்! அட பாவமே! உங்களுக்குச் சவரம் செய்ய அல்லவா வந்தேன். இன்றுதானே நீங்கள் சவரம் செய்து கொள்ளும் நாள்?

**பர்த் :** போய்விட்டுப் பிறகு வாரும்.

**பிகா :** ஆமாம்! போய்விட்டு வரச்சொல்வீர். நாளைக் காலை படைவீரர்கள் அனைவருக்கும் சுகபேதி மருந்து கொடுக்க ஏற்பாடாகியிருக் கிறது. ஏற்பாட்டை நான்தான் கவனிக் கிறேன். போய்வர நேரமிருக்குமா? ஐயா, தம் அறைக்குப் போகலாமே!

**பர்த் :** இல்லை, ஐயா இங்குதான் இருப்பார்... சரி, இங்கேயே சவரம் செய்துகொண்டால் என்ன வந்துவிடும்?

**ரொ :** (அருவருப்புடன்) என்ன நாகரிகம்! ஏன்? என் அறையில் போய்ச் சவரம் செய்து கொள்ளுங்களேன்!

**பர்த் :** கோபித்துக்கொள்ளாதே! மன்னித்துவிடு, கண்ணே! நீ உன் பாட்டை முடித்துக்கொள். நீ அளிக்கும் இசை இன்பத்தை ஒரு கணமும் அனுபவிக்காமல் விடக்கூடாதென்றுதான்...

**பிகா :** (மிராசுதாரிடம் மெல்லிய குரலில்) கிழவன் இங்கிருந்து போகவேமாட்டான். (உரக்க) எங்கே அந்தப் பயல்கள்? கோட்டான்! இளமை! கொண்டுவாருங்கள் தண்ணீர்க்

குவளை, ஐயாவுக்கு வேண்டிய பொருள்கள் அனைத்தும்.

**பர்த் :** கூப்பிட்டால் வருவார்கள் என்ற நினைப்பா? உன் கைவரிசையால் களைப் படைந்து, கசக்கப்பட்டு, காயப்பட்டல்லவா கிடக்கிறார்கள். படுக்கையில் போடவேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டதே.

**பிகா :** அப்படியென்றால், நானே போய்க் கொண்டுவருகிறேன். பொருள்கள் உங்கள் அறையில்தானே இருக்கின்றன? (மிராசு தாரிடம் மெல்லிய குரலில்) கிழவனை வெளியேற்றி வைக்கிறேன்.

**பர்த் :** (சாவிக்கொத்தைக் கையில் எடுத்துக் கொண்டே, சிந்தித்த வண்ணம்) இல்லை! இல்லை!! நானே போகிறேன் (மிராசுதாரிடம் மெல்லிய குரலில்) இருவர் மேலும் ஒரு கண் இருக்கட்டும்.

## காட்சி 6

**பாத்திரங்கள் :** பிகாரோ, மிராசுதார், ரொசீன்

**பிகா :** என்ன துர்ப்பாக்கியம்! சன்னல் கதவுச் சாவியையும், சேர்த்துக் கொடுப்பான் என்றல்லவா இருந்தேன். அது, அந்தச் சாவிக் கொத்தில் இருக்கிறதா?

**ரொ :** இருக்கிறது, அந்தச் சாவிமட்டும்தான் புதிதாக இருக்கும்.

## காட்சி 7

**பாத்திரங்கள் :** பர்த்தலோ, பிகாரோ, மிராசுதார், ரொசீன்

**பர்த் :** (திரும்பி வந்துகொண்டே, தனக்குள்) என்ன செய்யவேண்டுமென்றே தெரியவில்லை. இந்த முடிதிருத்துவோனை இங்கே எப்படி விட்டுச் செல்வது? (பிகாரோவிடம்) இந்தா. (சாவிக்கொத்தைக் கொடுக்கிறான்.) என் அறையில், மேசையின் அடியில் இருக்கின்றன. ஜாக்கிரதை, மற்றெதையும் தொடக்கூடாது.

**பிகா :** தரித்திரம்! தரித்திரம்! அவ்வளவு நம்பிக்கையில்லையா? (நடந்துகொண்டே, தனக்குள்) கடவுள் எப்படி நிரபராதி பக்கம் இருப்பார் என்று பார்த்துக்கொள்ளுங்கள்.

## காட்சி 8

**பாத்திரங்கள் :** பர்த்தலோ, மிராசுதார், ரொசீன்

**பர்த் :** (மிராசுதாரிடம் மெல்லிய குரலில்) இந்தக் கோமாளிதான் மிராசுதாரிடமிருந்து கடிதம் கொண்டுவந்து கொடுத்தான்.

**மிரா :** (மெல்லிய குரலில்) திருட்டுமுகத்தைப் பார்த்தாலே தெரிகிறது.

**பர்த் :** இனிமேல் நம்மிடம் நடக்காது.

**மிரா :** அதுதான் படவேண்டிய தெல்லாம் பட்டாகிவிட்டதே!

**பர்த் :** யோசித்துப் பார்த்ததில் அவனையும் அவளையும் ஒன்றாக இங்கு விட்டுச் செல்வதைவிட அவனையே அறைக்கு அனுப்புவது நல்லது என்று பட்டது.

**மிரா :** எனக்குத் தெரியாமல் அவனால் ஒரு வார்த்தையும் பேசிவிட முடியாது.

**ரொ :** எந்த நேரமும் இருவரும் முணுமுணு வென்று பேசிக்கொள்வது நல்ல நாகரிகம்தான், போங்கள்! என் பாட்டு என்ன ஆவது? (இந்த நேரத்தில் பாத்திரத்தைப் போட்டு உடைத்தது போன்ற ஒரு சப்தம் வருகிறது.)

**பர்த் :** (சப்தம் போட்டுக் கத்துகிறான்.) என்ன சப்தம் அது? இந்த ஆக்கங்கெட்ட முடிதிருத்துவோன், படிக்கட்டிலேயே எல்லாவற்றையும் போட்டு உடைத்திருப்பான். என் அழகிய சாமான்கள் உடைந்துபோயிற்றோ என்னவோ! (வெளியில் ஓடுகிறான்.)

## காட்சி 9

**பாத்திரங்கள் :** மிராசுதார், ரொசீன்

**மிரா :** பிகாரோவின் சமர்த்தால் கிடைத்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொள்வோம். கண்ணே! இன்று மாலை சிறிது நேரம்

அவசியம் உன்னிடம் பேசினால்தான், உனக்கு மாட்டப்படவிருக்கும் அடிமைத்தளையிலிருந்து உன்னை விடுவிக்கமுடியும்.

**ரோ :** ஆஹா, லேன்தோர்!

**மிரா :** உன் சன்னல் வழியாக ஏறி உள்ளே வந்து விடுகிறேன். இன்று நீ கொடுத்தனுப்பிய கடிதம் சந்தர்ப்பவசத்தால்...

## காட்சி 10

**பாத்திரங்கள் :** ரொசீன், பர்த்தலோ, பிகாரோ, மிராசுதார்

**பர்த் :** நான் சொன்னதுபோல் நடந்துவிட்டது. எல்லாவற்றையுமே போட்டு உடைத்து வாரிக் கொட்டிவிட்டான்!

**பிகா :** நான் என்ன செய்வது? அவசரங் காட்டினாலே, அடாதுதான் நடக்கும். படிக் கட்டிலோ கும்மிருட்டு, கண்ணே தெரிய வில்லை. (மிராசுதாரிடம் சாவியைக் காட்டிக் கொண்டே) படியேறி வரும்போது ஒரு சாவி தட்டுத்தடுமாற வைத்துவிட்டது.

**பர்த் :** ஏன், பார்த்து வரக்கூடாதா? சாவி தட்டுத் தடுமாற வைத்துவிட்டதாம், பலே கைகாரன் தான்.

**பிகா :** ஆமாம்! வேறொரு பலே கைகாரனைத் தான் இனித் தேடவேண்டும்!

## காட்சி 11

**பாத்திரங்கள் :** *ரொசீன், பர்த்தலோ, பிகாரோ, மிராசுதார், பசில்*

**ரொ :** *(பயந்துபோய், தனக்குள்)* ஐயோ, பசில்...!

**மிரா :** *(தனக்குள்)* கடவுள்தான் காப்பாற்றணும்!

**பிகா :** *(தனக்குள்)* எமனே வந்துவிட்டான்!

**பர்த் :** *(அவனை எதிர்கொண்டழைத்து)* ஆஹா! பசில், நண்பா! வருக! உனக்கு ஏற்பட்ட விபத்து அவ்வளவு பெரிதன்றே? உண்மை யாகவே, அலோன்சோ அவர்கள் உன் உடல் நிலையைப்பற்றிச் சொல்லி எனக்குப் பயங் காட்டிவிட்டார். அவரைத்தான் கேட்டுப் பாரேன்! உன்னைப் பார்க்க வருவதா யிருந்தேன், அவர் தடுத்துவிட்டார்...

**பசில் :** *(ஆச்சரியத்துடன்)* அலோன்சோ அவர்களா?

**பிகா :** *(தரையைக் காலால் உதைத்துக்கொண்டே)* ச்சீ! எப்போதுமே இடஞ்சல்கள்தாமா? ஒரு முகச்சவரம் செய்ய இரண்டு மணி நேரமா? என்ன மட்டமான மனிதர்கள்!

**பசில் :** *(எல்லோரையும் முறைத்துப் பார்த்த வண்ணம்)* எல்லோரும் எனக்குக் கொஞ்சம் புரியும்படியாக...

**பிகா :** நான் போய்விட்ட பிறகு பேசிக்கொள்ளும்.

**பசில் :** *வந்து... நான் தெரிந்துகொள்ள வேண்டியது என்னவென்றால்...*

**மிரா :** *வாயை மூடிக்கொள்ள வேண்டும், பசில்! ஐயாவுக்குத் தெரியாத செய்தியைச் சொல்லி விடவா போகிறீர்? உங்களுக்குப் பதில் என்னைப் பாட்டுச் சொல்லித்தர அனுப்பி னீர்கள் என்று சொல்லிவிட்டேன்.*

**பசில் :** *(பேராச்சரியத்துடன்) பாட்டுச் சொல்லித் தரவா? அலோன்சோவா?*

**ரொ :** *(பசிலிடம் தனியாக) அட, பேசாதிரும்!*

**பசில் :** *என்ன, இந்தப் பெண்ணுமா?*

**மிரா :** *(பர்த்தலோவிடம் மெல்லிய குரலில்) நமக்குள் ஒரு முடிவிற்கு வந்துவிட்டோம் என்று இவரிடம் சொல்லுங்கள்.*

**பர்த் :** *(பசிலிடம், தனியாக) காட்டிக்கொடுத்து விடாதே, பசில்! இவர் உன் மாணவர் இல்லை யென்று சொல்லி! எல்லாவற்றையும் கெடுத்து விடாதே!*

**பசில் :** *என்ன! என்ன!!*

**பர்த் :** *(உரக்க) உண்மையிலேயே உன் மாணவர் பெரிய வித்தகர்தான், பசில்!*

**பசில் :** *என்ன? என் மாணவரா!... (மெல்லிய குரலில்) மிராசுதார் தன் இருப்பிடத்தைக் காலிபண்ணிக்கொண்டு போய்விட்டான் என்று சொல்லவந்தேன்.*

**பர்த் :** *(மெல்லிய குரலில்)* எனக்குத் தெரியும், வாயை மூடு!

**பசில் :** *(மெல்லிய குரலில்)* யார் சொன்னார்கள்?

**பர்த் :** *(மெல்லிய குரலில்)* இதோ, இவர்தான், தெரியவில்லையா?

**மிரா :** *(மெல்லிய குரலில்)* நான்தான், இதிலென்ன சந்தேகம்? எதுவும் பேசாமல், சொல்வதைக் கேட்டுக்கொண்டிருந்தால் போதும்.

**ரொ :** *(பசிலிடம் மெல்லிய குரலில்)* உங்களால் பேசாமல் இருக்க முடியாதா?

**பிகா :** *(பசிலிடம் மெல்லிய குரலில்)* உம்! கிழங்களுக்கு வயதான காலத்தில் காதுகூடக் கேளாமல் போய்விட்டது!

**பசில் :** *(தனக்குள்)* எந்தச் சனியனை ஏமாற்றிக் கொண்டிருக்கிறார்கள், இங்கு? எல்லாம் ஒரே இரகசியமாக இருக்கிறதே!

**பர்த் :** *(உரக்க)* அது சரி, பசில்! உன் சட்ட வல்லுநர்?

**பிகா :** மாலை முழுவதும், உங்கள் சட்ட வல்லு நரைப்பற்றிப் பேசிக்கொண்டிருக்கலாம்.

**பர்த் :** *(பசிலிடம்)* ஒரே வார்த்தை மட்டும். உன் சட்ட வல்லுநரைப்பற்றி உனக்குத் திருப்தியா என்று சொல்.

**பசில் :** *(பயந்துபோய்)* எந்தச் சட்ட வல்லுநர்?

**மிரா :** (சிரித்துக்கொண்டே) அந்தச் சட்ட வல்லுநரை நீங்கள் பார்க்கவில்லை!

**பசில் :** (பொறுமையிழந்து) இல்லை! எந்தச் சட்ட வல்லுநரையும் பார்க்கவில்லை,

**மிரா :** (பர்த்தலோவிடம் மெல்லிய குரலில்) இவள் எதிரில் இவன் குட்டை வெளிப்படுத்த வேண்டும் என்று விரும்புகிறீர்களா? உடனே இவனை வெளியேற்றுங்கள்.

**பர்த் :** (மிராசுதாரிடம் மெல்லிய குரலில்) நீ சொல்வது சரிதான். (பசிலிடம்) என்ன வந்து விட்டது உன் உடம்புக்கு, திடீரென்று?

**பசில் :** (கோபத்துடன்) நீங்கள் சொல்வது ஒன்றும் புரியவில்லையே!

**மிரா :** (பசிலைத் தனியாக அழைத்துக் கையில் ஒரு பணப் பையைத் தருகிறான்.) புரியாது தான்! உடம்பு சரியில்லாத நேரத்தில் இங்கு ஏன் வந்தீர்கள் என்று ஐயா கேட்கிறார்.

**பிகா :** உடம்பு சவம்போல் வெளிறிக்கிடக்கிறதே!

**பசில் :** அடடே! இப்போது புரிகிறது...

**மிரா :** அன்புடைய பசில் அவர்களே! போய்ப் படுத்துக்கொள்ளுங்கள். உங்களுக்கோ உடம்பு சரியில்லை, எங்களை வேறு பயத்தால் சாகடிக் கிறீர், போய்ப் படுத்துக்கொள்ளுங்கள்.

**பிகா :** முகத்தைப் பார்த்தாலே கோணல் மாணலாக இருக்கிறது. போய்ப் படுத்துக் கொள்ளுங்கள்.

**பர்த் :** சத்தியமாகக் காய்ச்சல் அசுரவேகத்தில் அடிக்கிறது. போய்ப் படுத்துக்கொள்ளுங்கள்.

**ரொ :** ஏன் வெளியே வந்தீர்? இது தொற்றுநோயா யிற்றே! போய்ப் படுத்துக்கொள்ளுங்கள்.

**பசில் :** (மிக ஆச்சரியத்துடன்) போய்ப் படுத்துக் கொள்ளவா?

**எல்லாரும் :** ஆமாம், ஆமாம்! இன்னும் என்ன தயக்கம்.

**பசில் :** (எல்லோரையும் பார்த்தவண்ணம், நிலைமையைப் புரிந்துகொண்டு) ஐயன்மீர், நான் இங்கிருந்து போய்விடுவதே நல்லது என்று படுகிறது! இந்த இடத்தில் நான் செய்யக்கூடிய வேலை எதுவும் இல்லையென்பதை உணர் கிறேன்.

**பர்த் :** நாளை பார்த்துக்கொள்வோம், உனக்கு உடம்பு சரியாக இருந்தால்!

**மிரா :** நாளை அதிகாலையில் உங்கள் வீட்டிற்கு வருகிறேன், பசில்!

**பிகா :** என் பேச்சைக் கேளுங்கள். நன்றாக இழுத்துப் போர்த்துக்கொண்டு தூங்குங்கள்.

**ரொ :** மாலை வணக்கம், போய்வாருங்கள் ஐயா, பசில்!

**பசில் :** (தனக்குள்) இங்கு நடக்கும் பேயாட்டம் எனக்கு ஒரு துளியும் புரிந்தபாடில்லை. பணப்பை மட்டும் கிடைக்காமலிருந்தால்...

**எல்லா :** போய்வாருங்கள், பசில்! மாலை வணக்கம்!

**பசில் :** (போய்க்கொண்டே) சரி, சரி போய் வருகிறேன், வணக்கம்! (எல்லோரும் சிரித்துக் கொண்டே வழியனுப்புகிறார்கள்.)

## காட்சி 12

**பாத்திரங்கள் :** ரொசீன், பர்த்தலோ, பிகாரோ, மிராசுதார்

**பர்த் :** (கம்பீரமாக) அந்த மனிதனுக்கு ஒன்றும் சரிப்பட்டு வரவில்லை.

**ரொ :** அவன் கண்கள் சோர்வடைந்திருந்தன.

**மிரா :** காற்று கறுப்புப் பட்டிருக்கும்.

**பிகா :** ஆள் தனியாகப் பேசிக்கொண்டதைப் பார்த்தீர்களா? என்ன விசித்திரமான மனிதர்! (பர்த்தலோவிடம்) அது சரி, இப்போது தொடங்கலாமா? (நாற்காலியை மிராசுதார் இருக்கும் இடத்திலிருந்து வெகு தூரம் நகர்த்துகிறான். துண்டைக் கொடுக்கிறான்.)

**மிரா :** பாடத்தை முடிப்பதற்கு முன்னால், அம்மா! உங்களுக்குக் கற்பித்துக்கொண்டிருக்கும் முன்னேற்றத்தைப்பற்றி ஒரு வார்த்தை சொல்லவேண்டும். (அருகில் வந்து அவள் காதில் பேசுகிறான்.)

**பர்த் :** (பிகாரோவிடம்) என்ன இது! நான் பார்க்காமலிருக்கும்பொருட்டு வேண்டுமென்றே என் அருகில் வருகிறாய் போலிருக்கிறதே!

**மிரா :** (ரொசீனிடம்) சன்னல் கதவின் சாவி எங்களிடம் இருக்கிறது. நள்ளிரவில் இங்கே வந்துவிடுவோம்.

**பிகா :** (பர்த்தலோவின் கழுத்தில் துண்டைச் சுற்றுகிறான்.) எதைப் பார்க்கப் போகிறீர்கள்? ஒரு நடனம் என்றால் பரவாயில்லை. பாட்டுப் பாடுவதைப் போயா பார்க்கப் போகிறீர்கள். ஐயோ! ஐயோ!!

**பர்த் :** என்ன?

**பிகா :** கண்ணிலே என்ன விழுந்துவிட்டதென்று தெரியவில்லையே! (தலையை அருகில் கொண்டு செல்கிறான்.)

**பர்த் :** தேய்க்காதே! தேய்க்காதே!!

**பிகா :** இடக் கண்ணில்தான். தயவுசெய்து சிறிது வேகமாக ஊதிவிடுங்களேன்! (பர்த்தலோ பிகாரோவின் தலையைப் பிடித்துக்கொண்டு மேலே பார்த்து அவனை வேகமாகத் தள்ளி விட்டு, காதலர்கள் பின்சென்று அவர்கள் பேசுவதைக் கேட்கிறான்.)

**மிரா :** (ரொசீனிடம் மெல்லிய குரலில்) இக்கட்டான ஒரு சூழ்நிலையில் மாட்டிக் கொண்டதால் உன் கடிதத்தை...

**பிகா :** *(தூரத்தில் இருந்தபடியே அவர்கள் கவனத்தைத் திருப்பக் கனைக்கிறான்.)* ஹாம்! ஹாம்!

**மிரா :** என் மாறுவேடம் எதற்கும் பயனற்றதாகப் போய்விட்டதே என்ற வருத்தம்...

**பர்த் :** *(இருவருக்கும் நடுவில் சென்று)* என்ன! மாறுவேடம் பயனற்றதாகப் போய்விட்டதா?

**ரொ :** *(பயந்துபோய்)* ஐயோ!

**பர்த் :** நடக்கட்டும், நடக்கட்டும், அம்மா! கூச்சப்படாதே! என்ன என் கண் எதிரிலேயே, நான் இருக்கும்போதே, எனக்குத் துரோகம் செய்கிறீர்களா?

**மிரா :** என்ன வந்துவிட்டது, ஐயா, உங்களுக்கு?

**பர்த் :** அடத் துரோகி, அலோன்சோ!

**மிரா :** பர்த்தலோ, அவர்களே! நான் சந்தர்ப்ப வசத்தால், பார்த்ததுபோல் உங்களுக்குத் திடீர் திடீரென்று சலனபுத்தி ஏற்படுவதால் தான் இந்தப் பெண்மணி உங்களைத் திருமணம் செய்துகொள்வதை அவ்வளவு வெறுக்கிறாள். இதில் ஒன்றும் ஆச்சரியப்படுவதற்கில்லை!

**ரொ :** இந்த ஆளைத் திருமணம் செய்துகொள்வதா, நானா? என் பருவத்தின் கேள்விக்குப் பதிலாகக் கொடூர அடிமைத்தனத்தை எனக்களிக்கும் சந்தேகப் பேய்பிடித்த ஒரு வயோதிகனிடமா, வாழ்நாள் முழுதும் வாழ்வது!

**பர்த் :** என்ன சொல்கிறாய்?

**ரொ :** புரியும்படியாகத்தான் சொல்கிறேன். என் உடலும் பொருளும் நீதிக்குப் புறம்பாக அடைபட்டிருக்கும் இந்தச் சிறைச்சாலையிலிருந்து என்னை மீட்பவன் எவனோ அவனுக்கே என் இதயத்தையும் வாழ்நாளையும் அர்ப்பணிப்பேன். (ரொசீன் வெளியேறுகிறாள்.)

## காட்சி 13

**பாத்திரங்கள் :** பர்த்தலோ, பிகாரோ, மிராசுதார்

**பர்த் :** கோபம் பொங்குகிறதய்யா...

**மிரா :** சரிதான். இளம்பெண்ணுக்குக் கடினமாகத்தான்...

**பிகா :** ஆமாம்! பெண்ணோ இளமை, ஆணோ முதுமை. இதுதான் ஒரு கிழவரைத் தடுமாறச் செய்கிறது.

**பர்த் :** என்ன சொல்லுகிறாய்? கையும் களவுமாகப் பிடித்திருக்கிறேன்! பாழாய்ப்போன முடிதிருத்துவோனே! உன்னை என்ன செய்வேன் தெரியுமா?

**பிகா :** ஐயோ! இவருக்குப் பைத்தியம் பிடித்துவிட்டது. நான் போய்வருகிறேன்.

**மிரா :** நானும் போய்வருகிறேன். உண்மையில் இவருக்குப் பைத்தியம்தான் பிடித்துவிட்டது.

**பிகா :** பைத்தியம், பைத்தியம் பிடித்துவிட்டது. (அவர்கள் வெளியேறுகிறார்கள்.)

## காட்சி 14

*(பர்த்தலோ தனிமையில் அவர்களைப் பின் தொடர்ந்துகொண்டே)* ஆமாம்! பைத்தியம் தான் பிடித்துவிட்டது. வெட்கங்கெட்ட காலிப் பயல்களே! பேயின் தூதர்களே! இங்குப் பேயாட்டம் ஆட வருகிறீர்களா? நாசமாய்ப் போய்த்தொலைக! எனக்குப் பைத்தியம் பிடித்து விட்டதாம்... இருவரையும் என் கண்ணால் பார்த்தேன், இந்த மேசையைப் பார்ப்பது போல்... மானங்கெட்டுப்போய்ப் பேசுகிறார்கள். ஆ! பசில் மட்டுந்தான் இதை எனக்குத் தெளிவு படுத்த முடியும். ஆமாம், அவனை அழைத்து வரச் சொல்வோம். ஏய்! யாரங்கே? அடடே, வீட்டில் யாருமில்லை என்பதை மறந்து விட்டேனே! யாரையாவது அனுப்புவோம். பக்கத்து வீட்டுக்காரன், கண்ணில் முதலில் பட்டவன் எவனாயிருந்தாலும் சரி! மூளையே குழம்பிவிடும்போலிருக்கிறதே! மூளையே குழம்பி விடும்போலிருக்கிறதே!! (இடைவேளையின் போது, மேடையில் ஒரே இருட்டடைப்பு, புயல் சீறுவதுபோல் ஒளி அமைப்பு.)

அங்கம் 4

## காட்சி 1

**பாத்திரங்கள் :** *பர்த்தலோ, பசில் (கையில் ஒரு காகித விளக்குடன்)*

**நாடகமேடையில் இருள்**

**பர்த் :** *என்ன பசில், அவனை உனக்குத் தெரியாதா? நீ சொல்வது எல்லாம் உண்மையாக இருக்குமா?*

**பசில் :** *இன்னும் நூறுமுறை கேட்டாலும் அதே பதிலைத்தான் சொல்லிக்கொண்டிருப்பேன். ரொசீனுடைய கடிதத்தை உங்களிடம் கொடுத் தானென்றால் அவன் நிச்சயமாக மிராசுதாரின் ஆளாகத்தான் இருக்கவேண்டும். ஆனால், எனக்குக் கொடுத்த பெரும்பரிசைப் பார்த் தாலோ அவனே மிராசுதாராகவும் இருக்கலா மென்று தோன்றுகிறது!*

**பர்த் :** *எப்படி இருக்கமுடியும்? அட, அந்தப் பரிசை ஏன் ஐயா வாங்கிக்கொண்டீர்?*

**பசில் :** *நீங்களோ ஒத்து ஊதுவதுபோல் காணப் பட்டீர். எனக்கோ எதுவும் புரியவில்லை. புரியாத வேலையில் பைநிறையப் பொற்காசு எதையும் புரியவைத்துவிடும் என்று எனக்குப் பட்டது. பழமொழியில் வருவதுபோல் 'கிட்டிய தாயின் வெட்டெனா...'*

**பர்த் :** தெரியும் சொல்...

**பசில் :** 'வெட்டென வைத்துக்கொள்.'

**பர்த் :** (திடுக்கிட்டு) என்ன! என்ன!!

**பசில் :** இப்படித்தான் பல சிறிய பழமொழிகளை மாற்றி அமைத்திருக்கிறேன். சரி, ஆக வேண்டியதைக் கவனிப்போம். இப்போது என்ன செய்யவேண்டும்?

**பர்த் :** என் நிலையில் நீ இருந்தால், அவளை அடைய முழுமூச்சுடன் முயற்சி செய்ய மாட்டாயா, பசில்?

**பசில் :** மாட்டவே மாட்டேன். மருத்துவரே! உள்ளதைச் சொல்லப்போனால் உடைமை பெரிதன்று. அனுபவிப்பதே ஆனந்தம். என் கருத்து என்னவென்றால், தன்னை விரும்பாத ஒரு பெண்ணை மணப்பது...

**பர்த் :** விபத்துக்குப் பயப்படுகிறீரா?

**பசில் :** உம்...உம்... ஐயா, இவ்வாண்டு நிறைய நேர்ந்திருக்கிறது. அவள் மனத்தை நோக வைக்கக்கூடாது.

**பர்த் :** ஆளை விடு பசில்! அவளை அடையாமல், நான் அழிந்துபோவதைவிட என்னைக் கட்டிக் கொண்டு அவள் கண்ணீர் விடட்டும்!

**பசில் :** இது உங்கள் வாழ்க்கைப் பிரச்சினை என்றால், மருத்துவரே, அவளையே மணந்து கொள்ளுங்கள்!

**பர்த் :** அந்தத் திருமணத்தையும் இன்றிரவே நடத்திவிடுகிறேன்.

**பசில் :** சரி போய்வருகிறேன். குழந்தையிடம் பேசும்போது அவர்களை மிகவும் மோசமாக இழிவுபடுத்திப் பேசிவையுங்கள்.

**பர்த் :** நீ சொல்வது சரிதான்.

**பசில் :** அவதூறு, மருத்துவரே! அவதூறு! அதுதான் உறுதுணை!

**பர்த் :** இதோ, ரொசீனின் கடிதம். அந்த அலோன்சோ கொடுத்தது. அவனையறியாமலேயே இதை எப்படி அவளிடம் பயன்படுத்த வேண்டுமென்று சொல்லிவிட்டான்.

**பசில் :** சரி, போய்வருகிறேன். அதிகாலை நான்கு மணிக்கே இங்கு வந்துவிடுகிறோம்.

**பர்த் :** ஏன்? இன்னும் சீக்கிரமாக வரமுடியாதா?

**பசில் :** முடியாது. திருமணப் பதிவாளர்க்கு நிறைய வேலையாம்.

**பர்த் :** திருமண வேலையா?

**பசில் :** ஆமாம்! முடிதிருத்துவோன் பிகாரோ வீட்டில் அவனுடைய மைத்துனிக்குத் திருமணமாம்.

**பர்த் :** என்ன அவனுடைய மைத்துனிக்கா? அவனுக்கு ஏது மைத்துனி?

**பசில் :** இப்படித்தான் திருமணப் பதிவாளரிடம் சொல்லியிருக்கிறார்கள்.

**பர்த் :** சதித் திட்டத்தில் இந்தத் துடுக்கனுந்தான் சேர்ந்திருக்கிறான். நாசமாய்ப் போக!

**பசில் :** என்ன சிந்தனையோ?

**பர்த் :** சிந்தனைதான். அந்த ஆள்கள் மிகவும் விரைந்து செயல்படுகிறார்கள். சரி, நண்பா! எனக்கு அமைதியில்லை. பதிவாளரிடம் போய் அவரை உடனே இங்கு அழைத்துவாரும்.

**பசில் :** மழை வேறு பெய்கிறது. காலநிலையோ படுமோசம். இருந்தாலும் உங்களுக்குப் பணி செய்வதில் எனக்குத் தடை ஏது? ஏன் என்னுடன் வருகிறீர்?

**பர்த் :** வழிகாட்ட நடந்துவருகிறேன். இந்தப் பிகாரோவின் உதவியால் வீட்டிலுள்ள அனை வரையுந்தான் முடக்கிவைத்து விட்டார்களே! இங்கு நான்மட்டும்தான் இருக்கிறேன்.

**பசில் :** என்னிடம் விளக்கு இருக்கிறது.

**பர்த் :** இதோ, பசில்! என்னுடைய மாற்றுச் சாவி. தூங்காமல் உனக்காகக் காத்திருப்பேன். எவன் வந்தாலும் சரி. உன்னையும் திருமணப் பதிவாளரையும் தவிர இரவில் எவரும் உள்ளே நுழைந்துவிட முடியாது.

**பசில் :** சரியான பாதுகாப்புதான்! உங்கள் திட்டம் உறுதியாக நிறைவேறிவிடும்.

## காட்சி 2

**பாத்திரம் :** ரொசீன்

**ரொ :** *(ரொசீன் அறையிலிருந்து தனியாக வெளி வருகிறாள்.)* யாரோ பேசுவதுபோல் கேட்டதே! மணி பன்னிரண்டு ஆகிவிட்டது. லேன்தோரையும் காணோம்! இந்த மோசமான காலநிலையையே அவர் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டிருக்கலாம். எவரும் குறுக்கிடமாட்டார்கள். ஆ! லேன்தோர்! என்னை ஏமாற்றிவிடமாட்டாயே? என்ன சப்தம் அது? ஐயோ, கடவுளே! என் பாதுகாப் பாளன் வருகிறான்...உள்ளே போய்விடுவோம்.

## காட்சி 3

**பாத்திரங்கள் :** ரொசீன், பர்த்தலோ

**பர்த் :** *(கையில் விளக்குடன்)* அட! ரொசீன், நீ இன்னும் உன் அறைக்குப் போகவில்லை என்பதால்...

**ரொ :** இதோ போய்க்கொண்டே இருக்கிறேன்.

**பர்த் :** இந்த மோசமான காலநிலையில் உன்னால் தூங்க முடியாது. உன்னிடம் அவசரமான சில செய்திகளைப்பற்றிப் பேசவேண்டும்.

**ரோ :** என்ன பேசவேண்டும், ஐயா? பகலில் வாட்டி வதைத்தது போதாதா?

**பர்த் :** நான் சொல்வதைக் கேள், ரொசீன்!

**ரோ :** நாளைக்குப் பார்க்கலாம்.

**பர்த் :** தயவுசெய்து கொஞ்சம் கேளேன்.

**ரோ :** *(தனக்குள்)* அவன் வந்துவிட்டால் என்ன செய்வது?

**பர்த் :** *(அவளிடம் கடிதத்தைக் காட்டி)* இந்தக் கடிதத்தை யார் எழுதினது என்று தெரிகிறதா?

**ரோ :** *(தன்னுடைய கடிதந்தான் என்று தெரிந்து கொள்கிறாள்.)* ஐயோ! கடவுளே!...

**பர்த் :** இப்போது நான் உன்னைக் கண்டிக்க வரவில்லை. உன் வயதில் இப்படித் தவறுவது இயல்புதான். என்னை உன் நண்பனாகப் பாவித்து நான் சொல்வதைக் கேள்.

**ரோ :** போதும், போதும்!

**பர்த் :** இது நீ மிராசுதார் அல்மாவிவாவிற்கு எழுதின கடிதம்.

**ரோ :** *(ஆச்சரியத்துடன்)* என்ன! மிராசுதார் அல்மாவிவாவுக்கா?

**பர்த் :** ஆமாம்! அந்த மிராசுதார் எப்படிப்பட்ட அயோக்கியன் என்று நீயே பாரேன். இந்தக் கடிதம் கிடைத்தவுடன் தம்பட்டம் அடித்து விட்டான். கடிதத்தை ஒரு பெண்ணிடம்

அர்ப்பணித்திருக்கிறான். அவள் எனக்கு இதைக் கொடுத்துவிட்டாள்.

**ரொ :** *மிராசுதார் அல்மாவிவாவா?*

**பர்த் :** இந்தக் கொடூரத்தை உன்னாலேயே நம்ப முடியவில்லையல்லவா? அறியாமையே உன் போன்ற பேதைப் பெண்களை நம்பி மோசம் போக வைக்கிறது. நீ எத்தகைய வலையில் விழ இருந்தாய் என்பதைத் தெரிந்துகொள். அந்தப் பெண் உன்போன்ற ஓர் அபாயகரமான எதிரியைத் தவிர்க்க என்னிடம் எல்லாச் செய்திகளையும் தெரிவித்துவிட்டாள். நானே நடுநடுங்கிவிட்டேன், தெரியுமா? அருவருக்கத் தக்க சதிக்குழியில் உன்னைத் தள்ள இருந் தார்கள் அந்த மிராசுதாரும், பிகாரோவும், தன்னைப் பசிலின் மாணவன் என்று சொல்லிக் கொள்ளும் அலோன்சோவும். இவனுடைய உண்மைப் பெயர் வேறு. இவன் மிராசுதாரின் கீழ்த்தரமான கையாள். நீ விழ இருந்த குழி யினின்று தப்பியிருக்கவே உன்னால் முடியாது.

**ரொ :** *(துயருடன்) என்ன கொடூரம்! என்ன... லேன்தோரா! என்ன... அந்த வாலிபரா?*

**பர்த் :** (தனக்குள்) அட, அவன் லேன்தோர்தான்!

**ரொ :** *மிராசுதார் அல்மாவிவாவுக்கோ... அல்லது வேறொருவனுக்கோ... என்னை...*

**பர்த் :** இப்படித்தான் சொன்னார்கள் உன் கடிதத்தை என்னிடம் கொடுக்கும்போது.

**ரொ :** *(கோபத்துடன்)* என்ன அவமானம்! பழிக்குப் பழிவாங்க வேண்டும்! ஐயா, என்னைத் திருமணம் செய்துகொள்ள விரும்பினீரா?

**பர்த் :** என் உணர்ச்சிகளின் வேகத்தை நீ அறிய மாட்டாயா, கண்ணே!

**ரொ :** அப்படியென்றால் நான் உங்களுடையவள்.

**பர்த் :** சரி, சரி! திருமணப் பதிவாளர் இன்றிரவே இங்கு வருகிறார்.

**ரொ :** நடந்தது இது மட்டுமன்று! கடவுளே! நான் அடைந்த அவமானம் போதாதா?...தங்கள் கைவண்ணத்தைக் காட்டி உங்களிடமிருந்து சன்னல் கதவுச் சாவியைத் திருடிக்கொண் டார்கள். இன்னும் சற்று நேரத்தில் அந்த அயோக்கியன் இந்தச் சன்னல் வழியாக இங்கு வரத் துணிந்திருக்கிறான்.

**பர்த் :** *(சாவிக்கொத்தைப் பார்த்தபடி)* ஆஹா! அப்படியா செய்தி, திருட்டுப் பயல்களா! குழந்தாய்! இனி உன்னைவிட்டு அகலவே மாட்டேன்.

**ரொ :** *(பயத்துடன்)* ஐயோ! அவர்கள் ஆயுதங் களுடன் வந்தால் என்ன செய்வது?

**பர்த் :** நீ சொல்வது சரிதான். பழிவாங்க முடியாமல் போய்விடும். மார்சலினின் அறைக்குப்போய் நன்றாகக் கதவைச் சாத்திப் பூட்டிக்கொள். நான் போய் உதவிக்குக்

காவலாளர்களை அழைத்துவந்து, வீட்டின் அருகில் காத்திருக்கிறேன். திருடனாகக் கைதாகும் அவனைப் பழிவாங்குவது மட்டு மல்லாமல் பதறி ஓடவும் செய்வதில் பேரின்பம் கொள்வோம். பிறகு இழந்ததை ஈடு செய்ய என் காதலை ஏற்றுக்கொள்.

**ரோ :** *(நம்பிக்கையிழந்து)* என் பிழையை மறந்து விடுங்கள். *(தனக்குள்)* ஐயோ! நானே என்னைத் தண்டித்துக்கொண்டுவிட்டேன்!

**பர்த் :** *(வெளியேறிக்கொண்டே)* போய் மறைந்து கொள்வோம். கடைசியில் வகையாகக் கிடைத்துவிட்டாள் நம் கைக்கு! *(வெளி யேறுகிறான்.)*

## காட்சி 4

**பாத்திரம் :** ரொசீன்

**ரோ :** *(தனிமையில்)* இழந்ததை ஈடுசெய்யக் கிழ வனின் காதலை ஏற்றுக்கொள்ள வேண்டுமாம்! ஐயோ, எத்தகைய அபாக்கியவதி நான்! *(கைக்குட்டையை வெளியில் எடுத்துக் கண்ணீரைத் துடைத்துக்கொள்ளுகிறாள்.)* இப்போது என்ன செய்வது? அவன் உள்ளே வரப்போகிறான். நான் இங்கிருந்து அவனிடமே நடிக்கப்போகிறேன். அவன் கடைப்பிடித்த கயமையை நினைத்துக்கொண்டே நான்

இனியாவது ஏமாறாதிருக்கப் போகிறேன். எனக்குப் பாதுகாப்பு மிகவும் தேவை. அவனுக்கு எத்தனை அழகான முகம். அப்பாவியான தோற்றம், இனிமையான குரல்... ஆனால் பெண்களைக் கடத்திச் செல்லும் கயவனின் கையாள்! ஐயோ! எத்தகைய அபாக்கியவதி நான்! ஐயோ! எத்தகைய அபாக்கியவதி நான்! சன்னலை யாரோ திறக்கிறார்கள்! (ஓடிவிடுகிறாள்.)

## காட்சி 5

**பாத்திரங்கள் :** *மிராசுதார், பிகாரோ*

*(ஒரு மேலங்கியைப் போர்த்திக்கொண்டு சன்னல் வழியே எட்டிப் பார்க்கிறான் பிகாரோ.)*

**பிகா :** *(வெளியிலிருந்தே பேசுகிறான்.) யாரோ ஓடுகிறார்கள்! உள்ளே போகட்டுமா?*

**மிரா :** *(வெளியிலிருந்தே) ஓடுவது ஆணா?*

**பிகா :** *இல்லை!*

**மிரா :** *ரொசீன்தான் உன் முகரக்கட்டையைப் பார்த்து ஓடியிருப்பாள்!*

**பிகா :** *(அறையினுள் குதிக்கிறான்.) அப்படித்தான் இருக்கவேண்டும்......அ ப் பா டா!...... வந்துவிட்டோம் கடைசியாக, ம ழை யை யு ம்*

இடியையும் மின்னலையும் பொருட்படுத் தாமல்.

**மிரா :** (ஒரு நீண்ட மேலங்கியைப் போர்த்திக் கொண்டு) கையைக் கொடு... (இவனும் ஏறி உள்ளே குதிக்கிறான்.) வெற்றி நமக்கே!

**பிகா :** (மேலங்கியைக் கீழே எறிகிறான்.) தெப்ப மாக நனைந்துவிட்டோம். நல்ல காலநிலை தான் கிடைத்தது காரிகையைக் கவரும் வேட்டையில்! பெருந்தகையீர்! இரவு எப்படி?

**மிரா :** ஆஹா! படுஜோர், ஒரு காதலனுக்கு!

**பிகா :** ஆமாம்! ஆனால் துணைவருபவனுக்கோ!... யாராவது வந்துவிட்டால்?

**மிரா :** நான்தான் இருக்கிறேனே உன்னுடன்! நான் பயப்படுவதோ வேறொன்றுக்கு. அவளை எப்படி உடனடியாக மருத்துவர் வீட்டைவிட்டு வெளியேறச் செய்வதென்று.

**பிகா :** பெண்களைக் கவர உங்களைப் போன்றவர் களுக்கு இருக்கிறதே உறுதுணையாக மூன்று வழிகள்—காதல், வெறுப்பு, பயம்...

**மிரா :** (இருட்டில் பார்த்துக்கொண்டே) எங்களை இணைக்கப் பதிவாளர் உன் வீட்டில் காத்திருக் கிறார் என்று எப்படி அவளிடம் திடீரென்று சொல்வது? என் திட்டம் துணிகரமானது என்று நினைப்பாள். என்னையும் துணிச்சல்காரர் என்பாள்.

**பிகா :** உம்மைத் துணிச்சல்காரர் என்றால் நீர் அவளைக் கொடுமைக்காரி என்று கூப்பிடும்! 'கொடுமைக்காரி' என்று கூப்பிடுவதைப் பெண்கள் அதிகம் விரும்புவார்கள். அவள் நீர் விரும்புவதுபோல் காதலிக்க வேண்டுமென்றால், நீர் யாரென்பதைச் சொல்லிவிடும். உங்கள்மேல் சந்தேகம் எழாது.

## காட்சி 6

**பாத்திரங்கள் :** *மிராசுதார், ரொசீன், பிகாரோ*

**மிரா :** இதோ வந்துவிட்டாள் என் அருமை ரொசீன்!...

**ரொ :** (அழுத்தக் குரலில்) நீங்கள் எங்கு வராமல் இருந்துவிடுவீரோ என்று பயந்துவிட்டேன், ஐயா!

**மிரா :** நல்ல பயந்தான் போங்கள். ஓர் எளியோனின் வாழ்க்கையைப் பகிர்ந்துகொள்ள உங்களை அழைக்கும் சந்தர்ப்பத்தை எனக்காகப் பயன்படுத்திக்கொள்வதாகச் சந்தேகிக்கக்கூடாது. நீங்கள் எந்த இருப்பிடத்தைத் தேர்ந்தெடுப்பினும், ஆணையிட்டுச் சொல்கிறேன்...

**ரொ :** ஐயா, இதயத்தை அர்ப்பணித்த நான் உடனே வாழ்க்கையையும் அர்ப்பணித்திரா

விட்டால் நீங்கள் இப்போது இங்கே வந்திருப் பீரா! இந்த முறையற்ற சந்திப்பிற்கு அவசியம் ஏற்பட்டுவிட்டது ஏன் என்று உங்களுக்கே தெரிந்திருக்கும்?

**மிரா :** ரொசீன்! நீ பணமோ குடிமையோ அற்ற ஓர் எளியோனின் துணைவியாக...

**ரொ :** குடிமை, பணம்... விட்டுத் தள்ளுங்கள்... இவைகளெல்லாம் அதிர்ஷ்டத்தால் வந்தவை. உங்கள் நோக்கம் களங்கமற்றது என்றால்...

**மிரா :** (காலடியில் மண்டியிட்டுக்கொண்டே) கண்ணே! ரொசீன்! உன்னைத் தெய்வமாக அன்றோ பூசிக்கிறேன்!

**ரொ :** (கோபத்துடன்) போதும், நிறுத்து! துரோகி! பசப்பு வார்த்தைகள் வேறா! பூசிக்கிறாராம்!... போய்யா!... இனி உன்னைக் கண்டு நான் பயப்படமாட்டேன். உன்னை வெறுத்து ஒதுக்க இந்த வார்த்தைக்காகத்தான் காத்திருந்தேன். ஆனால் உன் மனச்சாட்சியே உன்னை உறுத்துமுன்பு, நான் உன்னை உள்ளன்போடு நேசித்தேன். உன் அவல வாழ்க்கையில் பங்கேற்கும் பாக்கியத்தைத் பெறலாமென்று நினைத்திருந்தேன் என்பதைப் தெரிந்துகொள். பாவி லேன்தோரே! உன்னை அடைய எல்லாவற்றையும் துறக்கலா மென்றிருந்தேனே! நீ என் அன்பை அன்றோ அலட்சியப்படுத்திவிட்டாய்! கொடூர மிராசு தார் அல்மாவிவாவிடமன்றோ என்னை விலை

கூற இருந்தாய்! என் பலவீனத்தால் எனக் கேற்பட்ட அவமானத்தின் சின்னமாக இதோ என் கைகளிலிருக்கிறது கடிதம். இந்தக் கடிதத்தைப் பார்த்திருக்கிறாயா?

**மிரா :** (பதற்றத்துடன்) உன் காப்பாளன் கொடுத்ததுதானே?

**ரொ :** (கம்பீரத்துடன்) ஆமாம்! நான் அவருக்கு நன்றி செலுத்த வேண்டும்!

**மிரா :** கடவுளே! கருணை காட்டிவிட்டாயப்பா! நான்தான் இந்தக் கடிதத்தைக் கொடுத்தேன். நேற்று என் தடுமாற்றத்தில், அவனுடைய நம்பிக்கைக்குப் பாத்திரமாக இதைக் கொடுத்து விட்டேன். உன்னிடம் சொல்லச் சந்தர்ப்பமே கிடைக்கவில்லை. ஆஹா! ரொசீன்! எனதன்பே! என்னை உளமாரத்தான் நேசிக்கிறாயா?...

**பிகா :** பெருந்தகையீர்! உள்ளன்புடன் நேசிக்கும் ஒரு பெண்ணையன்றோ இவ்வளவு நாளாகத் தேடிக்கொண்டிருந்தீர்!

**ரொ :** என்ன? பெருந்தகையீரா? இவர் என்ன சொல்கிறார்?

**மிரா :** (தன் பெரிய மேலங்கியைக் கீழே எறிகிறான். அழகிய உடையுடன் காட்சியளிக் கிறான்.) அன்பே உருவெடுத்த ஆரணங்கே! இன்னும் உன்னை ஏமாற்ற முடியாதுதான். உன் காலடியில் கிடக்கும் இந்தப் பாக்கியவான்

*லேன்தோர் அல்லன், மிராசுதார் அல்மா விவாவேதான்! உன்னையே நினைத்து உருகினேன். உன்னையே தேடி ஆறுமாத காலமாக அலைந்தேன். (மிராசுதார் தோளில் சாய்ந்துவிடுகிறாள்.)*

**ரொ :** *ஆஹா!*

**மிரா :** *(பயந்துபோய்) என்ன பிகாரரோ? என்ன?*

**பிகா :** *பயப்படாதீர், பெருந்தகையீர்! பேரானந்தத்தில் பிறக்கும் உணர்ச்சி வேகம் எப்போதும் கேடு விளைவிக்காது. இதோ... இதோ பாருங்கள், மயக்கம் தெளிந்துவிட்டது. அடடே என்ன அழகு, என்ன அழகு!*

**ரொ :** *ஆஹா! லேன்தோர்...! ஆஹா! ஐயோ! எத்தகைய தவறு செய்துவிட்டேன் ஐயா! இன்றிரவே என் காப்பாளனுக்கு என்னை அடிமையாக்கிக்கொள்ள இருந்தேன்!*

**மிரா :** *நீயா! ரொசீன்?*

**ரொ :** *எனக்குக் கிடைக்க இருந்த தண்டனையைப் பார்த்தீரா? உங்களை வெறுத்துக்கொண்டே என் வாழ்நாளை வீணாளாக்கிக் கொண்டிருப்பேனே! ஆஹா! லேன்தோர்! காதலிக்கப் பிறந்த நாம் ஒருவரை யொருவர் வெறுப்பது எவ்வளவு கொடுமை!*

**பிகா :** *(சன்னலைப் பார்க்கிறான்.) பெருந்தகையீர்! திரும்பிப்போக வழியில்லை. நாம் ஏறிவந்த நூலேணியை எடுத்துவிட்டார்கள்!*

**ரொ :** *(கலவரத்துடன்) ஆமாம்!... நான்தான் காரணம், இல்லை... மருத்துவன்தான். அவன் சொன்னதை நம்பிவிட்டேன், என்னை ஏமாற்றிவிட்டான். எல்லாவற்றையும் சொல்லி விட்டேன், எல்லாவற்றையும் காட்டிக் கொடுத்துவிட்டேன். நீங்கள் இங்கிருப்பது அவனுக்குத் தெரியும். காவலருடன் வரப் போகிறான்!*

**பிகா :** *(வெளியே பார்த்துக்கொண்டே) பெருந் தகையீர்! தெருக் கதவை யாரோ திறக் கிறார்கள்!*

**ரொ :** *(பயந்துபோய் மிராசுதாரை அணைத்துக் கொள்கிறாள்.) ஐயோ, லேன்தோர்!*

**மிரா :** *(உறுதியுடன்) ரொசீன், நீ என்னைக் காதலிக்கிறாய். இனி எவர் வரினும் அஞ்சேன். நீதான் என் இல்லத்தரசி. கீழ்த்தரமான கிழவனை என் மனம்போல் தண்டிப்பதிலே மகிழ்ச்சிகொள்வேன்.*

**ரொ :** *வேண்டா, வேண்டா, என் அன்பே! லேன்தோர் அவர்களே! என் நிறைந்த நெஞ்சில் பழி உணர்ச்சிக்கே இடமில்லை.*

## காட்சி 7

**பாத்திரங்கள் :** திருமணப் பதிவாளர், பசில், மேற்படி நடிகர்கள்

**பிகா :** பெருந்தகையீர்! இதோ வருகிறார் திருமணப் பதிவாளர்.

**மிரா :** நண்பர் பசிலுந்தான் உடன் வருகிறார்.

**பசில் :** அடடே! நான் காண்பது என்ன:

**பிகா :** அட! என்ன தற்செயலாக ... நம் நண்பர் இங்கு...

**பசில் :** என்ன எதிர்பாராமல், ஐயன்மீர்!

**தி.பதி :** இவர்கள்தாம் மணமக்களா?

**மிரா :** ஆம் ஐயா! இன்றிரவு செல்வி ரொசீனையும் என்னையும் முடிதிருத்துவோன் பிகாரோவின் வீட்டில் ஒன்றிணைப்பதாக இருந்தீரல்லவா? ஆனால், நாங்கள் இந்த வீட்டைத் தேர்ந்தெடுத்துவிட்டோம். ஏனென் பதைப் பிறகு தெரிந்துகொள்வீர். பதிவுப் பத்திரத்தைக் கொண்டுவந்தீரா?

**தி.பதி :** மிராசுதார் அல்மாவிவாவிடமா நான் பேசும் பெருமையைப் பெறுகிறேன்!

**பிகா :** அப்படித்தான்!

**பசில் :** (தனக்குள்) இதற்காகத்தானா மாற்றுச் சாவியைக் கொடுத்தார்...

**தி.பதி :** அப்படியென்றால் இன்று இங்கு இரண்டு திருமணங்கள்... பெருந்தகையீர்! குழப்பம்

தேவையில்லை. ஒன்று உங்கள் திருமணம். பிறகு பர்த்தலோ அவர்கட்கும் செல்வி... ரொசீனுக்குமா?... பெண்கள் இருவரும் ஒரே பெயர்கொண்ட சகோதரிகள் போலும்!

**மிரா :** இருக்கட்டும், முதலில் கையொப்பமிடு வோம். பசில் அவர்கள் நமக்கு இரண்டாம் சாட்சியாக உதவுவாராக! (எல்லோரும் கையொப்பமிடுகிறார்கள்.)

**பசில் :** ஆனால்! பெருந்தகையீர்!... எனக்கு ஒன்றுமே புரியவில்லையே!

**மிரா :** பாட்டு வாத்தியார் பசில் அவர்களே! ஒன்றுமில்லாததற்கெல்லாம் சங்கடப்படுகிறீர்! எல்லாவற்றிற்குமே ஆச்சரியப்படுகிறீர்!

**பசில் :** பெருந்தகையீர்!...ஆனால் மருத்துவர்...

**மிரா :** (ஒரு பணப்பையை அவனிடம் தூக்கிப் போட்டுக்கொண்டே) சிறு குழந்தைபோல் நடந்துகொள்கிறீர். சீக்கிரம் கையொப்ப மிடும்.

**பசில் :** (ஆச்சரியத்துடன்) ஆஹா! ஆஹா!

**பிகா :** கையொப்பமிடுவதா கடினம்?

**பசில் :** (பணப்பையைக் கனம் பார்த்தவண்ணம்) இல்லவேயில்லை! என் குணம் என்னவென்றால், ஒருவருக்கு வார்த்தை கொடுத்தபிறகு நல்ல கனமுள்ள காரணங்கள் இருந்தாலொழிய... (கையொப்பமிடுகிறான்.)

# காட்சி 8

**பாத்திரங்கள் :** *பார்த்தலோ, ஒரு நீதிபதி, இரு காவலர், விளக்குடன் பணியாள்கள், மேற்படி நடிகர்கள்*

**பர்த் :** *(ரொசீன் கையை மிராசுதார் முத்த மிடுவதைப் பார்த்துவிடுகிறான். பசிலைப் பிகாரோ கோமாளித்தனமாக அணைத்துக் கொள்கிறான்; திருமணப் பதிவாளரின் கழுத்தைப் பிடித்துக்கொண்டு பர்த்தலோ கூச்சலிடுகிறான்.)* திருட்டுப்பயல்கள் மத்தியில் ரொசீனா! எல்லோரையும் கைது செய்யுங்கள். ஒருவன் கழுத்தை நான் பிடித்திருக்கிறேன்.

**தி.பதி :** நான் உங்கள் பதிவாளர்!

**பசில் :** இவர் உங்கள் பதிவாளரா, என்ன இங்கு விளையாடுகிறீரா?

**பர்த் :** ஹா! பசில்! நீ என்ன இங்கு இருக்கிறாய்?

**பசில் :** என்ன நீர், நீர்...ஏன் ஐயா, இங்கில்லை?

**நீதிபதி :** *(பிகாரோவைக் காண்பித்து)* கொஞ்சம் பொறுங்கள். இவனை எனக்குத் தெரியும். நேரங்கெட்ட நேரத்தில் இந்த வீட்டில் உனக்கென்ன வேலை?

**பிகா :** நேரங்கெட்ட நேரமா? இரவு கழிந்து இப்போது காலை நேரமென்பது ஐயாவுக்குத்

தெரியாதா என்ன? மேலும் பெருந்தகை மிராசுதார் அல்மாவிவா அவர்களுடன்தானே இருக்கிறேன்!

**பர்த் :** அல்மாவிவாவா?

**நீதிபதி :** அப்படியென்றால்... இவர்கள் திருடர்கள் அல்லர்!

**பர்த் :** சரி விட்டுத்தள்ளுங்கள். வேறு எங்கே யாயினும், ஐயா, மிராசுதார் அவர்களே! நான் உங்களுக்குக் கடமைப்பட்டவனாவேன். ஆனால், இந்த இடத்தில் பிறப்புயர்வுக்கு வலிவில்லை என்பதை நீர் உணரவேண்டும். தயவுசெய்து இங்கிருந்து போய்விடும்.

**மிரா :** ஆமாம்! இந்த இடத்தில் பிறப்புயர்வுக்கு வலிவில்லைதான். ஆனால், முழுமனத்துடன் இந்தப் பெண் உங்களைப் புறக்கணித்து என்னைத் தேர்ந்தெடுத்துத் தன்னை எனக்கு அர்ப்பணித்துக் கொள்வது மிகவும் வலிவுடை யதுதானே!

**பர்த் :** இவர் என்ன பிதற்றுகிறார், ரொசீன்?

**ரொ :** உண்மையைத்தானே சொல்கிறார். ஆச்சரி யப்படுவதற்கு ஒன்றும் இல்லையே! இன்றிரவே நான் ஓர் அயோக்கியனைப் பழிவாங்க வேண்டும் என்றீரே... பழிவாங்கிவிட்டேன்!

**பசில் :** மருத்துவரே! எனக்குப் பணப்பை கொடுத்த அந்த ஆள் மிராசுதாராகவும் இருக்கலாமென்று அப்போதே சொன்னேனே!

**பர்த் :** அதைப்பற்றி எனக்கென்னய்யா கவலை? வேடிக்கையான திருமணந்தான்! சாட்சிகள் எங்கே?

**தி.பதி :** எதுவும் குறைந்துவிடவில்லை. இந்த இருவருந்தாம் சாட்சிகள்!

**பர்த் :** என்ன... என்ன... பசில்! நீ கையொப்ப மிட்டாயா?

**பசில் :** வேறு என்ன செய்வது? இந்தப் பொல்லாத மனிதர்தான் எப்போதும் கைநிறைய மறுக்க முடியாத வியாக்கியானங்கள் வைத்திருக் கிறாரே?

**பர்த் :** இவருடைய வியாக்கியானங்களைத் தூக்கி வீதியில் போடய்யா! என் அதிகாரத்தைப் பயன்படுத்துவேன்!

**மிரா :** அதைத்தான் வீணாகப் பயன்படுத்தி விட்டீரே!

**பர்த் :** திருமண வயதைப் பெண் இன்னும் அடையவில்லையே!

**பிகா :** இப்போதுதானே அத்தகைய சட்டத்தி லிருந்து விடுதலை அடைந்துவிட்டாள்!

**பர்த் :** ச்சீ, திருட்டுப்பயலே! உன்னிடம் யார் பேசுவது?

**மிரா :** பெண் அழகும் உயர்பிறப்பும் உடையவள். எனக்கும் பணம், குணம், இளமை எல்லாம் உண்டு. இவள் என் மனைவியாகிவிட்டாள். என்னுடன் இணைந்த இவளை இனி எந்தச் சக்தியால் பிரிக்க முடியும்?

**பர்த் :** என்னிடமிருந்து இவளைப் பிரிக்கவே முடியாது.

**மிரா :** இனி இவள் உங்கள் அதிகாரத்தின்கீழ் இல்லை. சட்டத்தின்முன் இவளை நிறுத்து கிறேன். நீங்களே அழைத்து வந்த இந்த நீதிபதி நீங்கள் இப் பெண்ணுக்கு இழைக்க விரும்பும் இன்னல்களிலிருந்து காப்பாற்றுவார். உண்மை. நீதிபதிகள் நசுக்கப்படுவோரின் பாதுகாவலர்கள் என்பதை மறவாதீர்!

**நீதிபதி :** உண்மைதான். ஒரு நல்ல திருமணத்தை வீணே எதிர்ப்பது, தன் பாதுகாப்பிலுள்ள ஒரு பெண்ணின் சொத்தை நிருவகிப்பதிலுள்ள ஊழலினால் ஏற்பட்ட பயத்தையன்றோ காட்டுகிறது? சட்டப்படி கணக்குக் காட்ட வேண்டும்.

**மிரா :** அப்படியா? எல்லாவற்றிற்கும் சம்மதித் தால் எதுவும் கேட்கமாட்டேன்.

**பிகா :** என் நூறு வராகன் கடன் பத்திரத்தைத் தவிர......மறந்துவிடப் பார்த்தேனே!

**பர்த் :** *(கோபத்துடன்)* எல்லோரும் எனக்கு எதிரியாகிவிட்டார்கள். உரலில் தலையைக் கொடுத்துவிட்டேன்!

**பசில் :** உரலும் இல்லை, உலக்கையுமில்லை! பெண் போனாலும் பணம் வருகிறதே, மருத்து வரே! கணக்குப் போட்டுப் பாருங்கள். பணம் வருகிறது! ஆமாம்!...பணம் வருகிறது!

**பர்த் :** அட! ஆளைச் சும்மாவிடும், பசில்! பணத்தைப் பற்றியேதான் உனக்கு நினைப்பு. பணம் எனக்குப் பெரிதன்று. எனக்கு... சரி, சரி வைத்துக்கொள்கிறேன். ஆனால் இதுதான் என் முடிவுக்குக் காரணமென்று நினைக்கிறீரா? *(கையொப்பமிடுகிறான்.)*

**பிகா :** *(சிரித்துக்கொண்டே)* ஆஹாஹா! இவர்கள் இருவரும் ஒரே குட்டையில் ஊறின மட்டைகள்!

**தி.பதி :** ஐயன்மீர்! எனக்கு ஒன்றும் புரிய வில்லையே! ஒரே பெயருடைய இரு பெண்கள் இல்லையா?

**பிகா :** இல்லை ஐயா! ஒரே பெண்தான்!

**பர்த் :** *(துயரத்துடன்)* திருமணம் பத்திரமாக நடப்பதற்காகவா ஏணியை அப்புறப்படுத் தினேன்! ஆஹா! முன்னெச்சரிக்கையில்லாமல்

வலிய வந்து நானாகவே மாட்டிக் கொண்டேனே!

**பிகா :** சமயோசிதம் இல்லாமல் என்று சொல்லும்! அது சரி மருத்துவரே! உண்மையை உணர் வோம். காதலும் இளமையும் ஒருங்கிணைந்து கிழவர் ஒருவரை ஏய்த்தால், அதைத் தடுக்க அவர் மேற்கொள்ளும் முயற்சிகளை ‘வீண் பாதுகாப்பு’ என்று அழைக்கலாம் அன்றோ!

(முற்றும்)

தமிழ்நாடு அரசின் சிறப்பிலக்கிய
மொழிபெயர்ப்பு வெளியீடு: 9

1. சோவியத்துக் கவிஞர் நூற்றுவர்
2. சிவானந்த நடனம்
3. தீர்க்கதரிசி
4. The Squirrel in the Courtyard
5. The Ten Decads (Patirruppattu)
6. Jnanaratham
7. பேரரசன் ஜோன்ஸ்
8. வேக்குபீல்டு பாதிரியார்
9. செவீய் நகர முடிதிருத்துவோன்


**தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்**

**கல்லூரி சாலை,**

**சென்னை-600 006**